**26-11-2023** காலை முரளி ஓம் சாந்தி "அவ்யக்த பாப்தாதா"

கேள்வி: எந்த ஒரு போதையின் ஆதாரத்தின் மூலமே நீங்கள் தந்தையை வெளிப்படுத்த முடியும்?

பதில்: இப்பொழுது நான் பகவானின் குழந்தையாக ஆகியிருக்கிறேன், அவர் எனக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறார் என்ற போதை இருக்க வேண்டும். நான் தான் அனைத்து மனிதர்களுக்கும் உண்மையான வழியைக் கூற வேண்டும். நான் இப்பொழுது சங்கமயுகத்தில் இருக்கிறேன், நான் எனது இராயல் நடத்தையின் மூலம் தந்தையின் பெயரை வெளிப்படுத்த வேண்டும். தந்தை மற்றும் ஸ்ரீ கிருஷ்ணரின் மகிமையை அனைவருக்கும் கூற வேண்டும்.

பாடல்: வரக் கூடிய எதிர்காலத்தின் அதிஷ்டசாலிகள் நீங்கள் .......

ஓம்சாந்தி. இந்த பாட்டு சுதந்திர வீரர்களுக்காக பாடப்பட்டிருக்கிறது. மற்றபடி உலகின் அதிஷ்டம் என்று எதற்கு கூறப்படுகிறது. என்பதை பாரதவாசிகள் அறியவில்லை. முழு உலகின் அதிஷ்டத்தை மாற்றி நரகத்திலிருந்து சொர்க்கமாக ஆக்கக் கூடியவர் எந்த மனிதனாகவும் இருக்க முடியாது. என்பது முழு உலகின் கேள்வியாக இருக்கிறது, இந்த மகிமை எந்த மனிதனுடையதும் கிடையாது. ஒருவேளை கிருஷ்ணருக்கானது எனில் யாரும் அவரை நிந்தனை செய்ய முடியாது. ஆனால் களங்கம் ஏற்படும் அளவிற்கு கிருஷ்ணர் நான்காம் பிறையை எப்படிப் பார்த்தார்? என்பதையும் புரிந்து கொள்வது கிடையாது. உண்மையில் களங்கம் ஏற்படுவது கிருஷ்ணருக்கு அல்ல, கீதையின் பகவானுக்கும் ஏற்படுவது கிடையாது. களங்கம் பிரம்மாவிற்குத் தான் ஏற்படுகிறது. (கோபிகளை) விரட்டுவதாக கிருஷ்ணர் மீது களங்கம் ஏற்படுத்தியிருக்கின்றனர். சிவபாபாவைப் பற்றி யாருக்கும் தெரியவில்லை. ஈஸ்வரனின் பின்னால் அவசியம் ஓடுகின்றனர், ஆனால் ஈஸ்வரனை நிந்திக்க முடியாது. ஈஸ்வரனை அல்லது கிருஷ்ணரை நிந்திக்க முடியாது. இருவரின் மகிமையும் உயர்ந்தது. கிருஷ்ணரின் மகிமையும் நம்பர் ஒன் ஆகும். இலட்சுமி நாராயணனுக்கு இந்த அளவிற்கு மகிமை கிடையாது. ஏனெனில் அவர் திருமணம் ஆனவர். கிருஷ்ணர் குமாரர் ஆவார். அதனால் தான் அவரது மகிமை அதிகமாக இருக்கிறது. இலட்சுமி நாராயணனுக்கும் மகிமை இருக்கிறது. 16 கலைகள் நிறைந்தவர், சம்பூர்ண நிர்விகாரி....... என்று பாடுவர். கிருஷ்ணரை துவாபரத்தில் கூறுகின்றனர். இந்த மகிமை பரம்பரையாக நடைபெற்று வருவதாக நினைக்கின்றனர். இவையனைத்து விசயங்களையும் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். இது ஈஸ்வரிய ஞானமாகும், ஈஸ்வரன் தான் இராம இராஜ்யத்தை ஸ்தாபனை செய்திருக்கின்றார். இராம இராஜ்யத்தை மனிதர்கள் புரிந்து கொள்வது கிடையாது. தந்தை வந்து தான் இந்த அனைத்து அறிவையும் கொடுக்கின்றார். அனைத்திற்கும் ஆதாரமாக இருப்பது கீதையாகும், கீதையிலேயே தவறாக எழுதி வைத்து விட்டனர். கௌரவர்கள் மற்றும் பாண்டவர்களுக்கான யுத்தம் நடைபெறவே இல்லையெனும் பொழுது அர்ஜுனனுக்கான விசயமே கிடையாது. இங்கு பாடசாலையில் தந்தை வந்து படிப்பை கற்றுக் கொடுக்கின்றார். யுத்த மைதானத்தில் பாடசாலை இருக்க

முடியாது. ஆம், இங்கு மாயை இராவணனிடம் யுத்தம் நடைபெறுகிறது. அதன் மீது வெற்றி அடைய வேண்டும். மாயாஜீத் ஜெகத்ஜீத் ஆக வேண்டும். ஆனால் இந்த விசயங்களை துளியளவும் புரிந்து கொள்ள முடியாது. நாடகத்தில் இவ்வாறு தான் பதிவாகி இருக்கிறது. அவர்கள் கடைசியில் வந்து தான் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிய வைக்க முடியும். பீஷ்ம பிதாமகன் போன்றவர்களை இம்சைக்கான அம்புகளால் கொல்லும் விசயம் கிடையாது. சாஸ்திரங்களில் பல விசயங்களை எழுதி வைத்து விட்டனர். தாய்மார்கள் அவர்களிடம் சென்று நேரம் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் இது சம்பந்தமாக உங்களிடம் பேச விரும்புகிறோம் என்று கூறுங்கள். இந்த கீதையை பகவான் கூறியிருக்கின்றார். பகவானுக்குத் தான் மகிமை இருக்கிறது. ஸ்ரீ கிருஷ்ணர் தனிப்பட்டவர். நமக்கு இந்த விசயத்தில் சந்தேகம் எழுகிறது. ருத்ர பகவானின் மகாவாக்கியம், இந்த ருத்ர ஞான யக்ஞம் அவருடையது ஆகும். நிராகார பரம்பிதா பரமாத்மாவின் ஞான யக்ஞம் இதுவாகும். மனிதர்கள் கிருஷ்ண பகவானின் மகாவாக்கியம் என்று கூறுகின்றனர். உண்மையில் பகவான் என்று ஒரே ஒருவரைத் தான் கூறுகிறோம். பிறகு அவரது மகிமையை எழுத வேண்டும். கிருஷ்ணரின் மகிமை இதுவாகும், இப்பொழுது இருவரில் கீதையின் பகவான் யார்? கீதையில் எளிய இராஜயோகம் என்று எழுதப்பட்டிருக்கிறது. எல்லையற்ற சந்நியாசம் செய்யுங்கள் என்று தந்தை கூறுகிறார். தேகம், மற்றும் தேகத்தின் அனைத்து சம்பந்தங்களையும் விட்டு விட்டு தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள், மன்மனாபவ, மத்தியாஜீ பவ. தந்தை மிக நல்ல முறையில் புரிய வைக்கின்றார். கீதையில் ஸ்ரீ பகவானின் மகாவாக்கியம் என்று இருக்கிறது. ஸ்ரீ என்றால் சிரேஷ்டம் என்று பரம்பிதா பரமாத்மா சிவனைத் தான் கூறுவோம். கிருஷ்ணர் தெய்வீக குணங்களுடைய மனிதர் ஆவார். கீதையின் பகவான் சிவன், அவர் தான் இராஜயோகம் கற்பித்திருக்கின்றார். கடைசியில் அனைத்து தர்மங்களும் விநாசம் ஆகி ஒரே ஒரு தர்மம் ஸ்தாபனை ஆகியிருக்கிறது. சத்யுகத்தில் ஒரே ஒரு ஆதி சநாதன தேவி தேவதா தர்மம் மட்டுமே இருந்தது. அதை கிருஷ்ணர் அல்ல, பகவான் தான் ஸ்தாபனை செய்திருந்தார். அவரது மகிமை இதுவாகும். அவர் தான் தாயும் நீயே, தந்தையும் நீயே! என்று கூறப்படுகின்றார். கிருஷ்ணரைக் கூறுவதில்லை. நீங்கள் சத்திய தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். பகவான் தான் விடுவிப்பவர் (கண்கூஷங்ழ்ஹற்ற்ழ்) மற்றும் வழிகாட்டியாக (ஏன்ண்க்ங்) இருந்து அனைவரையும் அழைத்துச் செல்கிறார் என்பதை நீங்கள் புரிய வைக்க முடியும். கொசுக்களைப் போன்று அனைவரையும் அழைத்துச் செல்வது என்பது சிவனின் காரியமாகும். சுப்ரீம் என்ற வார்த்தையும் மிக நன்றாக இருக்கிறது. ஆக பரம்பிதா பரமாத்மா சிவனின் மகிமை தனிப்பட்டது, கிருஷ்ணரின் மகிமை தனிப்பட்டது - இரண்டையும் நிரூபணம் செய்து புரிய வைக்க வேண்டும். சிவன் பிறப்பு இறப்பில் வராதவர். அவர் பதீத பாவன் ஆவார். கிருஷ்ணர் முழு 84 பிறவிகளும் எடுப்பவர். இப்பொழுது பரமாத்மா என்று யாரைக் கூறுவது? இதையும் எழுத வேண்டும். எல்லையற்ற தந்தையை அறியாத காரணத்தினால் தான் அநாதைகளாக, துக்கமானவர்களாக ஆகியிருக்கின்றனர். சத்யுகத்தில் எப்பொழுது செல்வந்தர்களாக ஆகிவிடுகிறீர்களோ அப்பொழுது அவசியம் சுகமானவர்களாக இருப்பீர்கள். இவ்வாறு தெளிவான வார்த்தைகள் இருக்க வேண்டும். என்னை நினைவு செய்யுங்கள் மற்றும் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகின்றார். விநாடியில் ஜீவன்முக்தி, இப்பொழுதும் சிவபாபா இவ்வாறு

கூறுகின்றார். முழு மகிமையும் எழுத வேண்டும். சிவாய நமஹ, அவரிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறது. இந்த சிருஷ்டிச் சக்கரத்தை புரிந்து கொள்வதன் மூலம் நீங்கள் சொர்க்கவாசிகளாக ஆகிவிடுவீர்கள். சரியானது எது? என்று இப்பொழுது நீங்கள் முடிவெடுங்கள். குழந்தைகளாகிய நீங்கள் சந்நியாசிகளின் ஆசிரமங்களுக்குச் சென்று தனிப்பட்ட முறையில் சந்திக்க வேண்டும். சபைகளில் அவர்களுக்கு மிகுந்த கர்வம் இருக்கும்.

மனிதர்களுக்கு உண்மையான வழியை எப்படி காண்பிப்பது? என்பது குழந்தைகளாகிய உங்களது புத்தியில் இருக்க வேண்டும். பகவானின் மகாவாக்கியம் - நான் இந்த சாது போன்றவர்களையும் முன்னேற்றம் செய்கிறேன். விடுவிப்பவர் என்ற வார்த்தையும் இருக்கிறது. என்னுடையவராக ஆகுங்கள் என்று எல்லையற்ற தந்தை தான் கூறுகின்றார். தந்தை குழந்தைகளை வெளிப்படுத்துவார், பிறகு குழந்தைகள் தந்தையை வெளிப்படுத்த வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணரை தந்தை என்று கூறுவது கிடையாது. பரம்பிதாவிற்கு அனைவரும் குழந்தைகளாக ஆகிவிட முடியும், ஆனால் மனிதனுக்கு அனைவரும் குழந்தைகளாக ஆக முடியாது. ஆக குழந்தைகளாகிய உங்களுக்குப் புரிய வைப்பதில் மிகுந்த போதை இருக்க வேண்டும். எல்லையற்ற தந்தையின் குழந்தைகள் நாம், இராஜாவின் குழந்தையாகிய இராஜகுமாரரின் நடத்தை எவ்வளவு ராயலாக இருக்கும்! என்பதை நீங்கள் பாருங்கள். ஆனால் பாவம் அவரை (கிருஷ்ணரை) பாரதவாசிகள் களங்கப்படுத்தி விட்டனர். நீங்களும் பாரதவாசிகள் தானே என்று கேட்பர். ஆம், நாமும் தான், ஆனால் நாம் இப்பொழுது சங்கமத்தில் இருக்கிறோம் என்று கூறுங்கள். நாம் பகவானின் குழந்தைகளாக ஆகியிருக்கிறோம் மற்றும் அவரிடத்தில் படித்துக் கொண்டிருக்கிறோம். பகவானின் மகாவாக்கியம் - உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கிறேன். கிருஷ்ணரின் விசயமாக இருக்க முடியாது. நாளடைவில் புரிந்து கொள்வர். இராஜா ஜனகரும் சைகையினால் புரிந்து கொண்டார் அல்லவா! பரம்பிதா பரமாத்மாவை நினைவு செய்தார், பிறகு தியானத்தில் சென்று விட்டார். பலர் தியானத்தில் சென்று கொண்டிருக்கின்றனர். தியானத்தில் நிராகார உலகம் மற்றும் வைகுண்டத்தை பார்க்கின்றனர். நாம் நிராகார உலகில் வசிப்பவர்கள் என்பதை அறிவீர்கள். பரந்தாமத்திலிருந்து இங்கு வந்து நடிப்பு நடிக்கிறோம். விநாசமும் எதிரில் இருக்கிறது. விஞ்ஞானிகள் சந்திரனுக்குச் செல்ல முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர், இது தான் விஞ்ஞானத்தின் மிகப் பெரிய கர்வம் ஆகும், பிறகு இதன் மூலம் தன்னையே அழித்துக் கொள்கின்றனர். மற்றபடி சந்திர மண்டலத்தில் எதுவும் கிடையாது. விசயங்கள் மிக நன்றாகத் தான் இருக்கின்றன, ஆனால் புரிய வைப்பதற்கு யுக்தி தேவை. நமக்கு கல்வி கொடுப்பவர் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை ஆவார். அவர் உங்களுக்கும் தந்தையாக இருக்கிறார். அவரது மகிமை தனிப்பட்டது, கிருஷ்ணரின் மகிமை தனிப்பட்டது. ருத்ர ஞான அவிநாசி யக்ஞமாகும். இதில் அனைத்தும் அர்ப்பணம் ஆக வேண்டும். நல்ல கருத்துக்கள் பல இருக்கின்றன, ஆனால் இன்னும் நேரம் இருக்கிறது.

ஒன்று ஆன்மீக யாத்திரை, மற்றொன்று உலகீய யாத்திரை என்ற கருத்தும் நன்றாக இருக்கிறது. தந்தை கூறுகின்றார் - என்னை நினைவு செய்தால் கடைசி

நிலை நல்ல நிலையாக ஆகிவிடும். ஆன்மீகத் தந்தையின்றி வேறு யாரும் கற்றுக் கொடுக்க முடியாது. இந்த மாதிரியாக கருத்துக்களை எழுத வேண்டும். மன்மனாபவ-மத்தியாஜீபவ, இது முக்தி, ஜீவன்முக்திக்கான யாத்திரையாகும். யாத்திரையை தந்தை தான் செய்விப்பார், கிருஷ்ணர் செய்விக்க முடியாது. நினைவு செய்யும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். எவ்வளவு நினைப்பீர்களோ அந்த அளவிற்கு குஷி ஏற்படும். ஆனால் மாயை நினைவு செய்ய விடுவது கிடையாது. நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். அனைவரும் சேவை செய்கிறீர்கள், ஆனால் உயர்ந்த மற்றும் சாதாரண சேவை இருக்கிறது அல்லவா! யாருக்காவது தந்தையின் அறிமுகம் கொடுப்பது மிக எளிதாகும். நல்லது ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

இரவு வகுப்பு:

மலைக்கு காற்று வாங்க, புத்துணர்வு பெறுவதற்காகச் செல்கின்றனர். வீடு மற்றும் அலுவலகத்தில் இருக்கும் பொழுது புத்திக்கு வேலை இருக்கிறது. வெளியில் செல்கின்ற பொழுது அலுவலக சிந்தனை யிலிருந்து ஓய்வாகி விடுகின்றனர். இங்கும் குழந்தைகள் புத்துணர்வு அடைவதற்காக வருகின்றனர். அரைக் கல்பம் பக்தி செய்து, செய்து களைப்படைந்து விட்டனர், புருஷோத்தம சங்கமயுகத்தில் ஞானம் கிடைக்கிறது. ஞானம் மற்றும் யோகா மூலம் நீங்கள் புத்துணர்வு அடைந்து விடுகிறீர்கள். இந்த பழைய உலகம் விநாசம் ஆகிவிடும், புது உலகம் ஸ்தாபனை ஆகிவிடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். பிரளயம் ஏற்படாது. உலகம் ஒரேயடியாக அழிந்து போய் விடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள், ஆனால் அவ்வாறு ஆகாது. மாற்றம் ஏற்படும். இது நரகம், பழைய உலகமாகும். புது உலகம் மற்றும் பழைய உலகம் எப்படி இருக்கும்? என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உங்களுக்குத் தெளிவாகப் புரிய வைக்கப் பட்டிருக்கிறது. உங்களது புத்தியில் விஸ்தாரமாக இருக்கிறது, அதுவும் வரிசைக்கிரமமாக. புரிய வைப்பதிலும் மிகுந்த நேர்த்தி தேவை. புத்தியில் உடனேயே அமரும் அளவிற்கு மற்றவர்களுக்குப் புரிய வையுங்கள். சில குழந்தைகள் பக்குவமற்றவர்களாக இருக்கின்றனர், நாளடைவில் உடைந்து போய் விடுகின்றனர். பகவானின் மகாவாக்கியம் - ஆச்சரியத்துடன் கேட்பர், கூறுவர் ....... இங்கு மாயையிடம் யுத்தம் நடைபெறுகிறது. மாயையிடம் இறந்து ஈஸ்வரனுடையவர்களாக ஆகின்றனர். பிறகு மீண்டும் ஈஸ்வரனிடமிருந்து மாயை யினுடையவர்களாக ஆகிவிடுகின்றனர். தத்தெடுக்கப்பட்டு பிறகு மீண்டும் கை விட்டுச் சென்று விடுகின்றனர். மாயை மிகவும் பிரபலமானது, பலரை புயலில் கொண்டு வந்து விடுகிறது. வெற்றி-தோல்வி ஏற்படுகிறது என்பதைக் குழந்தைகளும் புரிந்திருக்கின்றனர். இந்த விளையாட்டே வெற்றி தோல்விக்கானது ஆகும். 5 விகாரங்களிடம் தோற்று விட்டீர்கள். இப்பொழுது நீங்கள் வெற்றி அடைவதற்கு முயற்சி செய்கிறீர்கள். கடைசியில் வெற்றி உங்களுக்குத் தான். தந்தையினுடையவர்களாக ஆகிவிட்டீர்கள் எனில் உறுதியாக ஆக வேண்டும். மாயை எவ்வளவு கவர்ச்சி செய்து வசப்படுத்துகிறது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். சில நேரங்களில் தியானம், காட்சியில்

செல்வதன் மூலமாகவும் விளையாட்டு முடிவடைந்து விடுகிறது. இப்பொழுது 84 பிறவிச் சக்கரத்தில் வந்து முடித்து விட்டோம் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். தேவதா, சத்ரியர், வைஷ்யர், சூத்ரர் ஆகியிருக்கிறீர்கள், இப்பொழுது சூத்ரனிலிருந்து பிராமணர்களாக ஆகியிருக்கிறீர்கள். பிராமணர்களாகி பிறகு தேவதைகளாக ஆகிவிடுவீர்கள். இதை மறந்து விடக் கூடாது. ஒருவேளை இதை மறந்து விட்டால் கால்கள் பின்னால் சென்று விடும், பிறகு உலகாய விசயங்களில் புத்தி ஈடுபட்டு விடும். முரளியும் நினைவில் இருக்காது. நினைவு யாத்திரையும் கடினமானதாக இருக்கும். இதுவும் ஆச்சரியமாக இருக்கிறது.

சில குழந்தைகள் பேட்ஜ் அணிந்து கொள்ள வெட்கப்படுகின்றனர். இதுவும் தேக அபிமானம் அல்லவா! திட்டு வாங்கியே தீர வேண்டும். கிருஷ்ணர் எவ்வளவு திட்டு வாங்கியிருக்கிறார்! அனைவரையும் விட அதிக திட்டு வாங்கியது சிவன். பிறகு கிருஷ்ணர். பிறகு அதிக திட்டுக்களை வாங்கியது இராமர். வரிசைக்கிரமம் இருக்கிறது. நிந்தனை செய்வதனால் பாரதம் எவ்வளவு நிந்திக்கப்பட்டு விட்டது. குழந்தைகளாகிய நீங்கள் இதில் பயப்படக் கூடாது. நல்லது இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் இரவு வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) புத்தியினால் எல்லையற்ற சந்நியாசம் செய்து ஆன்மீக யாத்திரைக்கு தயாராக இருக்க வேண்டும். நினைவில் இருப்பதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

2) தந்தை குழந்தைகளை வெளிப்படுத்துகிறார், குழந்தைகள் தந்தையை வெளிப்படுத்துகின்றனர். அனைவருக்கும் சத்திய தந்தையின் அறிமுகத்தை கொடுக்க வேண்டும். விநாடியில் ஜீவன்முக்திக்கான வழி கூற வேண்டும்.

வரதானம் : மனம் மற்றும் சொல்லின் பொருத்தம் மூலமாக மாயா ஜாலம் செய்து விடக்கூடிய புதுமை மற்றும் விசே^த் தன்மையில் நிறைந்தவர் ஆவீர்களாக.

மனம் மற்றும் சொல் - இந்த இரண்டின் சேர்க்கை மாயாஜாலத்தின் காரியம் செய்கிறது. இதன் மூலமாக கூட்டமைப்பின் சிறு சிறு வி^யங்கள் எப்படி முடிந்து போய் விடும் என்றால், நீங்கள் இது என்ன மாயாஜாலம் போல ஆகி விட்டதே என்று யோசிப்பீர்கள். மனதின் மூலமாக சுபபாவனை அல்லது சுப ஆசிகள் கொடுப்பதில் பிஸி - மும்முரமாக ஆகி விட்டீர்கள் என்றால் மனதின் குழப்பம் முடிந்து போய் விடும். புரு^ôர்த்தத்தில் (முயற்சி) ஒரு பொழுதும் மனமுடைந்து போக மாட்டீர்கள். கூட்டமைப்பில் ஒரு பொழுதும் பயப்பட மாட்டீர்கள். மனம் மற்றும் சொல்லின் ஒருங்கிணைந்த சேவை மூலமாக வேகமான பாதையில் சேவையின் தாக்கத்தை பார்ப்பீர்கள். இப்பொழுது சேவையின் இதே புதுமை மற்றும் விசேஷத் தன்மையில் நிறைந்தவராக ஆவீர்கள் என்றால், 9 இலட்சம் பிரஜைகள் சுலபமாக தயார் ஆகி விடுவார்கள்.

சுலோகன்: எப்பொழுது முழுமையாக (வைஸ்லெஸ்) நிர்விகாரியாக

இருப்பீர்களோ,

அப்பொழுது தான் புத்தி சரியான முடிவெடுக்கும்.

மாதேஸ்வரிஜியின் மதுர மகாவாக்கியம்

க-யுக சாரமற்ற உலகி-ருந்து, சத்யுக சாரம் நிறைந்த உலகிற்குச் செல்வது யாருடைய வேலை?

இந்த க-யுக உலகை சாரமற்ற உலகம் என்று ஏன் கூறுகின்றனர்? ஏனெனில் இந்த உலகில் எந்த சாரமும் இல்லை, அதாவது எந்த ஒரு பொருளிலும் சுகம், சாந்தி, தூய்மையின் சக்தியில்லை, இவ்வுலகில் ஏதோ ஒரு சமயத்தில் சுகம், சாந்தி, தூய்மை இம்மூன்றும் இருந்தது. இப்போது அந்த சக்திகள் இல்லை. ஏனெனில் இவ்வுலகில் 5 பூதங்கள் பிரவேசித்துள்ளன. அதனால்தான் இல்வுலகை பயத்தின் கடல் அதாவது கர்மபந்தனத்தின் கடல் எனக் கூறுகின்றனர். அதனால் தான் மனிதர்கள் கஷ்டப்படுகின்றனர். பரமாத்மா! எங்களை கட--ருந்து கரையேற்றுங்கள் என்று பரமாத்மாவை அழைக்கின்றனர். எனவே கண்டிப்பாக ஏதோ ஒரு சமயத்தில் பயமற்ற உலகம் கூட இருந்திருக்கிறது, அங்கு செல்ல விரும்புகின்றனர் என்பது நிரூபணமாகிறது. அதனால் இவ்வுலகை பாவ உலகம் என்று கூறுகின்றனர். இதைக் கடந்து புண்ணிய ஆத்மதாக்களின் உலகிற்குச் செல்ல விரும்புகின்றனர். ஆகவே உலகங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று சத்யுக சாரமுள்ள உலகம், மற்றொன்று க-யுக சாரமற்ற உலகம். இரண்டு உலகங்களும் இந்த சிருஷ்டியில்தான் இருக்கின்றன. நல்லது. ஓம் சாந்தி.

22.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே- பிராமணர்களின் இது புதிய விருட்சம் ஆகும், இதை நன்றாக வளர்க்க வேண்டும் பாதுகாக்க வேண்டும் ஏனெனில் புதிய மரம் ஆனதால் பறவைகள் சாப்பிட்டுவிடும்

கேள்வி:- பிராமணர்களின் விருட்சத்தில் இருந்து வெளிப்படும் இலைகள் வாடி விடுகின்றது ஏன்? காரணம் மேலும் அதற்கு நிவாரணம் என்ன?

பதில்: பாபா ஞானத்தில் அற்புதமான இரகசியங்கள் கூறியிருக்கிறார் அதைப் புரிந்து கொள்ளவில்லை அதன் காரணத்தினால் சந்தேகம் உருவாகிறது ஆகவே புதிய-புதிய இலைகள் கூட வாடி விடுகின்றது பிறகு படிப்பை விட்டுச் சென்றுவிடுகிறார்கள். இதில் புரிய வைக்கக் கூடிய குழந்தைகள் மிகவும் புத்திசா-யாக இருக்க வேண்டும். ஒருவேளை ஒருவருக்கு சந்தேகம் வந்தது என்றால் பெரியவர்களிடம் கேட்க வேண்டும். பதில் கிடைக்கவில்லை என்றால் பாபாவிடம் கூடக் கேட்கலாம்.

பாடல்: பிரியமானவரே வந்து சந்தியுங்கள்

ஓம்சாந்தி. பாடலையோ குழந்தைகள் அநேக முறை கேட்டு இருக்கிறீர்கள்,

துன்பத்தில் பகவானை அனைவரும் அழைக்கின்றார்கள். அவர் தங்களிடம் அமர்ந்துள்ளார். உங்களை அனைத்து வேதனையில் இருந்து விடுவித்துக் கொண்டிருக்கிறார். துக்கதாமத்தில் இருந்து சுகதாமத்திற்கு அவசியம் அழைத்துச் செல்லக் கூடியவர் சுகதாமத்திற்கு எஜமானர் கூறிக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் வந்துள்ளார், உங்கள் முன்னால் அமர்ந்துள்ளார் மேலும் இராஜயோகம் கற்பித்துக் கொண்டிருக்கிறார். இது மனிதர்களின் காரியம் கிடையாது. பரமபிதா பரமாத்மா நம்மை மனித நிலையில் இருந்து தேவதை ஆக்குவதற்காக இராஜயோகம் கற்பிக்கிறார் என்பதை நீங்கள் கூறுகிறீர்கள். மனிதன், மனிதனை தேவதை ஆக்க முடியாது. மனிதனை தேவதையாக ஆக்கும் தருணத்தில் வந்துவிட்டார் இந்த மகிமை எவருடையது? பாபாவுடையது. தேவதை அவசியம் சத்தியயுகத்தில் தான் இருப்பார்கள். இந்த நேரத்தில் தேவதைகள் இருப்பதில்லை. ஆகவே அவசியம் சொர்கத்தைப் படைப்பவர் தான் மனிதனை தேவதையாக்க முடியும். பரமபிதா பரமாத்மாவைத் தான் சிவன் என்று அழைக்கின்றோம், பதீதர்களை பாவனம் ஆக்க அவருக்கு இங்கே வர வேண்டியுள்ளது. இப்போது அவர் எவ்வாறு வருவார்? பதீத உலகத்தில் கிருஷ்ணரின் உடல் கிடைக்காது. மனிதர்கள் குழப்பம் அடைந்துள்ளார்கள். இப்போது குழந்தைகள் நீங்கள் முன்னால் அமர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் இந்த உலகத்தின் வரலாறு புவியியலை அறிவீர்கள். சரித்திரத்துடன் அவசியம் பூகோளமும் இருக்கிறது மேலும் மனித சிருஷ்டியில் சரித்திரம்-பூகோளம் அவசியம் இருக்கிறது. பிரம்மா-விஷ்ணு-சங்கரரின் சூட்சும வதனத்தில் சரித்திர-பூகோளம் இருக்கிறது என்று ஒருபோதும் கூறமாட்டார்கள். அது சூட்சுமவதனம். அங்கே மூவி தான் இருக்கும் அங்கு பேச்சின் சப்தம் இருக்காது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா முழு உலகத்தின் சரித்திர-பூகோளம், மூலவதனத்தின் செய்தி, அதை மூன்று லோகம் என்று கூறுகிறோம், அதனைப் பற்றி நமக்கு புரிய வைக்கின்றார். இப்போது பிராமணர்களின் புதிய மரம் நடுகிறார். இதை விருட்சம் என்று கூறப்படுகிறது. மற்ற மரங்களை விருட்சம் என்றுக் கூறுவதில்லை. கிருஸ்துவர்கள் கிருஸ்மஸ் மரம் என்பது தனிப்பட்டது என்று அறிகிறார்கள் ஆனால் இந்த அனைத்து கிளைகளும் அதனின் பெரிய விருட்சத்தில் இருந்து வெளிப்பட்டது என்று அவர்களுக்குத் தெரியாது. மனித சிருஷ்டி எவ்வாறு உருவானது என்று புரிய வைக்க வேண்டும். தாய்-தந்தை மேலும் குழந்தைகள் அனைவரும் ஒன்றாக உருவாக முடியாது. இரண்டில் இருந்து நான்கு, ஐந்து இலைகள் உருவாகும் ஆனால் சிலவற்றை பறவைகள் சாப்பிட்டு விடுகின்றது. இது மிகவும் சிறிய மரம் ஆகும். எவ்வாறு முத-ல் வளர்ந்ததோ அதுபோன்று மெல்ல-மெல்ல வளர்ச்சி அடைகிறது. குழந்தைகளாகிய உங்களுக்கு இப்போது எவ்வளவு ஞானம் கிடைக்கிறது! நீங்கள் திரிகாலதரிசி ஆகிறீர்கள், மூன்று லோகத்தையும் அறிகிறீர்கள், திரிலோகநாதன் அதாவது மூன்று லோகத்தையும் அறிகிறீர்கள். இலட்சுமி-நாராயணரை திரிலோகநாதன், திரிகாலதரிசி என்று கூற முடியாது. மனிதரை மற்றும் கிருஷ்ணரை திரிலோகநாதன் என்ற பெயரில் அழைக்கிறார்கள். எவர் சேவை செய்கின்றார்களோ அவருக்கு பிரஜைகள் உருவாகிறார்கள். தனக்கு வாரிசும் உருவாக்க வேண்டும், பிரஜைகளும் உருவாக்க வேண்டும். நாம் திரிலோகநாதன் என்பது தங்கள் புத்தியில் இருக்க வேண்டும். இந்த விஷயங்கள் மிகவும் அற்புதமானது. குழந்தைகள் நல்லவிதமாக புரிந்து கொள்ளாமல் இருப்பதின் காரணத்தினால் உருவாக்குவதற்கு பதிலாக அழித்து

விடுகிறார்கள். வெளிப்படும் இலையை வாடச் செய்து விடுகிறார்கள் பிறகு படிப்பை விட்டு விடுகிறார்கள். கல்பத்திற்கு முன்னாலும் கூட இவ்வாறு நடந்து இருக்கிறது என்று நாம் கூறுகிறோம், கடந்ததை கடந்ததாகப் பாருங்கள். இப்போது குழந்தைகள் நீங்கள் முழு சிருஷ்டியின் முதல்-இடை-கடை அனைத்தும் அறிவீர்கள், சரித்திரம்- பூகோளம் அறிகிறீர்கள். மற்றபடி மனிதர்கள் நிறைய விஷயங்கள் உருவாக்கியுள்ளார்கள், என்னென்ன எழுதுகிறார்கள், எவ்வாறு நாடகத்தை உருவாக்குகிறார்கள்!

பாரதத்தில் அநேகரை அவதாரம் எடுத்தார்கள் என்று ஏற்றுக் கொள்கிறார்கள். பாரதம் தானே தனது படகை மூழ்கச் செய்துவிட்டது. இப்போது குழந்தைகள் நீங்கள் முக்கியமாக பாரதத்தை, மற்றும் முழு உலகத்திற்கு முக்தி தருகிறீர்கள், இந்த உலகம் சக்கரம் போன்று சுற்றுகிறது, நாம் மேலே இருப்போம், நரகம் கீழே இருக்கும். எவ்வாறு சூரியன் மறையும் போது கீழே இறங்கும் போது அது கடலுக்குள் செல்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் அது கடலுக்குள் செல்வதில்லை. அது போன்று துவாரகை கூட நீரில் மூழ்கிவிட்டது என்று கருதுகிறார்கள். மனிதரின் புத்தியும் கூட அற்புதமாக இருக்கிறது அல்லவா! இப்போது நீங்கள் எவ்வளவு உயர்வு அடைகிறீர்கள்! எவ்வளவு மகிழ்ச்சி அடைய வேண்டும்! துன்பமான நேரத்தில் உங்களுக்கு லாட்டரி கிடைத்துக் கொண்டிருக்கிறது. தேவதைகளுக்கு கிடைத்துள்ளது. இங்கே தங்களுக்கு துன்பத்தில் இருந்து எல்லையில்லாத சுகம் கிடைக்கிறது. எவ்வளவு மகிழ்ச்சி இருக்கும், எதிர்காலத்தில் 21 பிறவிக்காக நாம் சொர்கத்தில் எஜமானர்களாக இருப்போம்!

கீதையின் ஞானம் சத்சங்கத்தில் நடைபெறுகிறது என்று மனிதர்கள் கருதுகிறார்கள். சாயிபாபாவின் சத்சங்கங் கள் ஆகியவைகள் எவ்வளவு இருக்கிறது! நிறைய கடைகள் இருக்கிறது. இது ஒன்று தான் பிரம்மாகுமாரிகளின் கடைத்தெரு ஆகும். ஜெகதம்பா பிரம்மாவின் முகவம்சாவளி ஆவார். பிரம்மாவின் மகள் சரஸ்வதி மிகவும் புகழ் பெற்றவர். தாய்-தந்தையிடம் இருந்து நாம் அளவில்லாத சுகத்தை அடைந்தோம் என்று நீங்கள் அறிவீர்கள். அப்பேர்ப்பட்ட தாய்-தந்தை நமக்கு கிடைத்துள்ளார்கள். மிகவும் அளவில்லாத சுகத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார். நல்லது, தாய்-தந்தைக்கு ஜென்மம் தருபவர் யார்? சிவபாபா. நமக்கு இரத்தினங்கள் சிவபாபா விடம் இருந்து கிடைக்கிறது. நாம் பேரன்-பேத்திகள் ஆகிவிட்டோம். நாம் இப்போது அளவில்லாத இந்த சுகத்தை எல்லையற்ற தந்தையிடம் இருந்து, பிரம்மா சரஸ்வதி, தாய்-தந்தை மூலமாக அடைந்து கொண்டி ருக்கிறோம். தருபவர் அவராக இருக்கிறார். எவ்வளவு எளிதான விஷயங்கள். பின்னர் நாம் இந்த பாரதத்தை சொர்கமாக ஆக்குகிறோம் என்று புரிய வைக்க வேண்டும். பிறகு நாம் அங்கே சென்று அளவில்லாத சுகத்தை அடைவோம். நாம் பாரதத்திற்கு சேவை செய்கிறோம். உடல்-மனம்-செல்வத்தால் நாம் சேவை செய்கிறோம். காந்திக்கு கூட உதவி செய்தார்கள் அல்லவா! யாதவர்கள், பாண்டவர்கள், கௌரவர்கள் என்ன செய்தார்கள் என்று நீங்கள் புரிய வைக்க முடியும். பாண்டவர்கள் பக்கம் பரமபிதா பரமாத்மா இருக்கிறார். பாண்டவர்கள் வினாசகாலத்தில் அன்புள்ள புத்தி உள்ளவர்கள், கௌரவர்கள், யாதவர்கள் வினாசகாலத்தில் விபரீதபுத்தி உள்ளவர்கள் ஆவார்கள். அவர்கள் பரமபிதா பரமாத்மாவை ஏற்றுக் கொள்வதேயில்லை. கல்-லும், முள்ளிலும் இருக்கிறார்

என்று கூறி விட்டார்கள். உங்களுக்கு அவரைத் தவிர வேறு எவரின் மீதும் இப்போது அன்பு இல்லை. ஆகவே மிகவும் பெருமையுடன் இருக்க வேண்டும். உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை மகிழ்ச்சி அடைய வேண்டும். குழந்தைகள் நிறைய பேர் இருக்கிறார்கள். நீங்கள் தாய்-தந்தை மூலமாக கேட்கிறீர்கள் ஆகவே தங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. முழு உலகத்திலும் நம்மைப் போன்று சௌபாக்கியசா-கள் வேறு எவரும் இருக்க முடியாது! நம்முள் சிலர் பத்மாபதம் பாக்கியசா-களாக இருக்கிறார்கள், சிலர் சௌபாக்கியசா-களாக இருக்கிறார்கள், சிலர் பாக்கியசா-களாக இருக்கிறார்கள் மேலும் துர்பாக்கியசா-களாகவும் இருக்கிறார்கள். எவர் ஆச்சரியமாகக் கேட்டுவிட்டு ஓடிவிடுகிறார்களோ அவர்களை மகான் துர்பாக்கியசா-கள் என்று கூறுவார். ஏதாவது காரணத்தால் பாபாவின் கையை விட்டுச் சென்று விடுகிறார்கள். பாபா மிகவும் இனிமையானவர். அறிவுரை கூறினால் எங்கே ஓடிப் போய் விடுவாரோ என்று எண்ணுகிறார். நீங்கள் விகாரத்தில் போய் குலத்தின் பெயரைக் கெடுத்து விடுகிறீர்கள் என்று புரிய வைக்கிறார். ஒருவேளை அவப்பெயரை ஏற்படுத்தினால் மிகவும் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். சத்குருவை நிந்தனை செய்பவர்கள் ஆஸ்தியை அடைய முடியாது .என்று அதற்குத் தான் கூறப்படுகிறது ஆனால் அவர்கள் தனது லௌகீக குருவுக்காக கூறப்பட்டுள்ளது என்று கருதுகிறார்கள். பெண்களை ஆண்கள் கூட இவ்வாறு கூறி பயமுறுத்துகிறார்கள். அமரநாத் பாபா இப்போது தங்களுக்கு அமரகதை கூறிக் கொண்டிருக்கிறார். நான் டீச்சராகவும் இருக்கிறேன், வேலைக்காரனாகவும் இருக்கிறேன் என்று கூறுகிறார். டீச்சரின் காலை யாராவது கழுவிக் குடிப்பார்களாக என்ன? குழந்தைகள் எஜமானர் ஆகக் கூடியவர்கள் நான் என்ன அவர்களின் மூலமாக காலைக் கழுவவைப்பேனா? இல்லை. நிராகாரமானவர் நிர்அகங்காரியாக இருக்கிறார் என்று மகிமை செய்கிறார்கள். இவரும் கூட அவரின் தொடர்பால் நிர்அகங்காரி ஆகிவிட்டார்.

அபலைப் பெண்களை கொடுமை செய்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. கல்பத்திற்கு முன்னாலும் கூட கொடுமை செய்யப்பட்டது. இரத்த வெள்ளம் ஓடும், பாவம் என்ற பானை நிரம்பும். இப்போது நீங்கள் யோக பலத்தால் எல்லையற்ற இராஜ்யத்தை அடைகிறீர்கள். நாம் பாபாவிடம் இருந்து ஸ்திரமான- அகண்ட இராஜ்யத்தை அடைகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் சூர்ய-வம்சத்தை சேர்ந்தவர்கள் ஆகின்றோம். ஆமாம், இதில் நம்பிக்கை வேண்டும். தன்னுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டே இருங்கள்-நமக்குள் எந்தவொரு விகாரமும் இல்லை தானே என்று பாருங்கள். எந்த விஷயத்திலாவது சந்தேகம் இருந்தால் பெரியவர்களிடம் கேளுங்கள், தன்னுடைய சந்தேகத்தை நீக்கி கொள்ளுங்கள். ஒருவேளை சகோதரிகளால் சந்தேகத்தை நீக்க முடிய வில்லை என்றால் பாபாவிடம் கேளுங்கள். இப்போது குழந்தைகள் நீங்கள் நிறைய விஷயங்கள் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எதுவரை உயிர் வாழ்கிறோமோ அதுவரை புரிய வைத்துக் கொண்டே இருப்பார். இப்போது நாங்கள் படித்துக் கொண்டிருக்கிறோம் என்றுச் சொல்லுங்கள். பாபாவிடம் நாங்கள் கேட்கிறோம் அல்லது இதுவரை பாபா இந்த விஷயத்தை புரிய வைக்கவில்லை என்று கூறுங்கள். வருங்காலத்தில் புரிய வைப்பார், பிறகு கேளுங்கள். நிறைய பாயிண்ட் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். யுத்தம் எப்போது ஏற்படும் என்று சிலர் கேட்கிறார்கள், பாபா திரிகாலதர்சி சொல்ல முடியும் அல்லவா! என்கிறார்கள், ஆனால் இதுவரை பாபா அதைப்பற்றி

ஒன்றும் கூறவில்லை. விண்ணப்பம் நம்முடையது, கூற வேண்டியது அவரின் விருப்பம் ஆகும். இதி-ருந்து எல்லாம் விடுபடுங்கள்.

பாபா ஞானக்கடல் என்றால் அவசியம் ஞானத்தின் டான்ஸ் செய்திருப்பார் என்று தோட்டத்தில் அமர்ந்திருக்கும் போது பாபா குழந்தைகளிடம் கேட்டார். நல்லது, பக்திமார்க்கத்தில் சிவபாபா அனைவரின் மனவிருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பார்ட்டை நடித்தார் அந்த நேரத்தில் அவருக்கு இந்த எண்ணம் உருவாகி இருக்கும் நான் பாரதத்தில் சங்கமயுகத்தில் சென்று குழந்தைகளுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுக்க வேண்டுமா? சொர்க்கத்திற்கு எஜமானன் ஆக்க வேண்டுமா? என்ற இந்த எண்ணம் எழும்புமா அல்லது தக்க நேரம் வரும்போது இந்த எண்ணம் தோன்றுமா?

இந்த எண்ணம் எப்போது தோன்றும் என்றால் அவருக்குள் இந்த ஞானம் மறைந்து இருக்கும் ஆனால் அவர் வரக் கூடிய தருணத்தில் இந்த எண்ணம் தோன்றும். இவ்வாறு தான் நமக்குள்ளும் கூட 84 பிறவிகளின் பாகம் மறைந்து இருக்கிறது அல்லவா! பகவானுக்கு புதிய சிருஷ்டியைப் படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது என்று கூறப்படுகிறது. அது எப்போது தக்க தருணம் வரும் போது அந்த எண்ணம் தோன்றும். அவரும் கூட நாடகத்திற்கு கட்டுப்பட்டு இருக்கிறார். இவைகள் மிகவும் ஆழ்ந்த இரகசியங்கள் ஆகும். நல்லது!

இனிமையிலும்-இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு தாய்-தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மேலும் காலை வணக்கம். ஆன்மிக தந்தை ஆன்மிக குழந்தைகளுக்கு நமஸ்காரம்.

இரவு-வகுப்பு 13.01.1969.

குழந்தைகள் எப்போது இங்கே வந்து அமர்கிறார்களோ அப்போது குழந்தைகளே! சிவபாபாவின் நினைவு இருக்கிறதா? என்று பாபா கேட்கின்றார். பின்னர் விஷ்வ இராஜ்யத்தை நினைவு செய்கிறீர்களா? என்று கேட்கிறார். எல்லையற்ற தந்தையின் பெயர் சிவன். பின்னர் மொழியின் காரணத்தினால் பலவிதமான பெயர்கள் வைத்துள்ளார்கள். எவ்வாறு பம்பாயில் பபுல்நாத் என்று அழைக்கிறார்கள் ஏனெனில் அவர் முள்ளை மலராக ஆக்குகிறார். சத்தியயுகத்தில் அனைவரும் மலராக இருக்கிறார்கள், இங்கே அனைவரும் முள்ளாக இருக்கிறார்கள். எனவே பாபா ஆன்மிக குழந்தைகளிடம் எல்லையற்ற தந்தையின் நினைவில் எவ்வளவு நேரம் இருக்கிறீர்கள்? என்று கேட்கிறார். அவருடைய பெயர் சிவன், அவர் கல்யாணகாரி ஆக இருக்கிறார். நீங்கள் எவ்வளவு நினைக்கிறீர்களோ அவ்வளவு பாவங்கள் அழியும். சத்தியயுகத்தில் பாவங்கள் இருக்காது. அது புண்ணிய ஆத்மாக்களின் உலகம், இது பாவ ஆத்மாக்களின் உலகம் ஆகும். பாவத்தைச் செய்விப்பவர் ஐந்து விகாரம் ஆகும். சத்தியயுகத்தில் இராவணன் இருப்பதில்லை. இவர் முழு உலகத்திற்கும் எதிரியாக இருக்கிறார். இந்த நேரத்தில் உலகம் முழுவதும் இராவண இராஜ்யம் நடக்கிறது. அனைவரும் துன்பத்தில் தமோபிரதானமாக இருக்கிறார்கள் இப்போது தான் என்னை நினைவு செய்யுங்கள் ஆஸ்தியை நினைவு செய்யுங்கள் என்று தந்தை தெரிவிக்கிறார். இது கீதையின் சொற்கள் ஆகும். பாபா தானே வந்து தேகம் தேக சம்பந்தம் அனைத்தையும் விடுத்து (மாமேகம்) என்னை நினைவு செய்யுங்கள் என்கிறார். முதன்-முத-ல் நீங்கள்

சுகமான சம்பந்தத்தில் இருந்தீர்கள், பின்னர் இராவணனின் பந்தத்தில் வந்து விட்டீர்கள். பின்னர் இப்போது மீண்டும் சுகத்தின் சம்பந்தத்தில் வர வேண்டும். தன்னை ஆத்மா என்று நினைத்து தந்தையை நினைவு செய்ய வேண்டும்- இந்தக் கல்வியை பாபா சங்கமயுகத்தில் மட்டும் தான் வந்து தருகிறார். நான் பரந்தாமத்தில் வசிப்பவன் என்று பாபா தானே தெரிவிக்கிறார், உங்களுக்குப் புரிய வைப்பதற்காக நான் இந்த உட-ல் பிரவேசம் செய்கிறேன் என்கிறார். நீங்கள் துôய்மை அடையாமல் என்னிடம் வர முடியாது என்று பாபா கூறுகிறார். இப்போது துôய்மை எப்படி அடைவது? என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்கிறார். பக்தி மார்கத்தில் கூட என்னை மட்டும் முத-ல் பூஜை செய்தீர்கள், அதை அவ்யபச்சார பக்தி (கலப்படமற்ற) என்று சொல்லப்பட்டது. இப்போது நான் பதீத- பாவனன் ஆக இருக்கிறேன். அதனால் என்னை நீங்கள் நினைவு செய்தால் ஜென்ம-ஜென்மமான பாவங்கள் அழியும் என்கிறார். 63 பிறவிகளின் பாவங்கள் உள்ளது. சன்யாசிகள் ஒருபோதும் இராஜயோகம் கற்பிக்க முடியாது, பாபா தான் கற்பிக்க முடியும். உண்மையில் இந்த சாஸ்த்திரம்- பக்தி ஆகியவைகள் இல்லறத்தைச் சேர்ந்தவர்களுக்காக இருக்கிறது. சன்யாசிகள் காட்டில் போய் அமர்ந்து கொண்டு பிரம்மத்தை நினைவு செய்கிறார்கள். நான் அனைவருக்கும் சத்கதியைத் தருபவன்- என்னை நினைவு செய்தால் நீங்கள் இது (இலட்சுமி-நாராயணர்) ஆகலாம் என்று தெரிவிக்கிறார். இலட்சியம் முன்னால் இருக்கிறது. எந்தளவு ஞானத்தை படித்து- படிக்க வைக்கிறீர்களோ அவ்வளவு உயர்ந்த பதவியை தெய்வீக இராஜ்யத்தில் அடைவீர்கள். ஒரு பாபா தான் அல்ப்(தந்தையாக) உள்ளார். படைப்பின் மூலமாக படைப்பின் ஆஸ்தியை பெற முடியாது. எல்லையற்ற தந்தை தான் எல்லையற்ற ஆஸ்தியைக் கொடுக்க முடியும். நீங்கள் சொர்கத்தில் சத்கதியில் இருப்பீர்கள். மற்ற அனைத்து ஆத்மாக்களும் வீட்டிற்குத் திரும்பச் சென்று விடுவார்கள். முக்தி-ஜீவன்முக்தி, கதி-சத்கதி என்ற வார்த்தைகள் தான் சாந்திதாமம், சுகதாமத்தைக் குறிப்பதாகும். பாபாவை நினைக்காமல் வீட்டிற்குத் திரும்பச் செல்ல முடியாது. ஆத்மாவிற்கு துôய்மை அவசியம் ஆக வேண்டும். இங்கே அனைவரும் நாஸ்திகர்களாக இருக்கிறார்கள். வினாச காலத்தில் விபரீத புத்தி உள்ளவர்கள் தோல்வி அடைகிறார்கள் என்று பாடப்படுகிறது. இப்போது வினாச காலம் அல்லவா! சக்கரம் அவசியம் சுற்றகிறது. வினாச காலத்தில் எவருடைய புத்தி பிரீத்த(அன்பு) புத்தியாக உள்ளதோ அவர்கள் வெற்றி அடைகிறார்கள். பாபா எவ்வளவு சுலபமாக புரிய வைக்கிறார்! ஆனால் இராவணன் மறக்கச் செய்து விடுகிறது. இப்போது இந்த பழைய உலகத்தின் முடிவு வந்து விடடது. அது அமரலோகம் அங்கே காலன் வருவதே கிடையாது. பாபாவை அழைக்கின்றார்கள் வாருங்கள் அனைவரும் சேர்ந்துச் செல்வோம் என்கிறார்கள். அவர் காலன் ஆகிவிட்டார் அல்லவா. சத்தியயுகத்தில் எவ்வளவு சிறிய விருட்சமாக இருக்கிறது. இப்போது மிகப்பெரிய மரமாக இருக்கிறது.

பிரம்மா மேலும் விஷ்ணுவின் கடமை என்ன? விஷ்ணுவை தேவதை என்கிறார்கள். பிரம்மாவிற்கு எந்த ஆபரணங்களும் போடுவதில்லை. அங்கே பிரம்மா இல்லை, விஷ்ணு இல்லை, சங்கரர் இல்லை. பிரஜாபிதா பிரம்மா இங்கே தான் இருக்கிறார். சூட்சும வதனத்தின் சாட்சாத்காரம் ஏற்படுகிறது. ஸ்துôல், சூட்சுமம், மூலவதனம் என்று இருக்கிறது அல்லவா! சூட்சுமவதனம் என்பது மூவி. இவைகள் புரிந்துக் கொள்ள வேண்டிய விஷயங்கள். இது கீதா பாடசாலை ஆகும், இங்கே நீங்கள் இராஜயோகம் கற்றுக் கொள்கிறீர்கள்.

சிவபாபா கற்பிக்கிறார் என்றால் சிவபாபா நினைவு தானே வரும் அல்லவா. நல்லது!

ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிக பாப்தாதாவின் அன்பு நினைவுகள் இரவு வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிக தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:-

1) துன்பமான நேரத்தில் எல்லையில்லாத சுகத்தின் லாட்டரி கிடைத்துள்ளது, ஒரு தந்தையிடம் உண்மையான அன்பு ஏற்பட்டுள்ளது, இதை நினைத்து சதா மகிழ்ச்சியில் இருக்க வேண்டும்.

2) பாப்தாதாவைப் போன்று நிராகாரி மேலும் நிர்அகங்காரி ஆக வேண்டும். தைரியமாக விகாரங்களை வெல்ல வேண்டும். யோகபலத்தால் இராஜ்யத்தை அடைய வேண்டும்.

வரதானம் : கர்மம் செய்யும் போது சக்திசாலி நிலைத்திருந்து நிலைத்திருந்து ஆன்மிகப் பர்சனாலிட்டியை அனுபவம் செய்விக்கக் கூடிய கர்மயோகி ஆகுக.

குழந்தைகள் நீங்கள் கர்மம் மட்டும் செய்பவர்கள் இல்லை. ஆனால் யோகயுக்த் நிலையில் இருந்து கர்மம் செய்யக்கூடிய கர்மயோகிகள் நீங்கள். ஆக, உங்கள் மூலம் ஒவ்வொருவருக்கும் இந்த அனுபவம் ஆக வேண்டும் -- இந்தக் காரியத்தையோ இவர் கையினால் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் காரியம் செய்தாலும் தமது சக்திசாலி ஸ்டேஜில் நிலைத்திருக்கிறார். சாதாரண ரீதியில் சென்று கொண்டிருந்தாலும் சரி, நின்று கொண்டிருந்தாலும் சரி, ஆனால் ஆன்மிகப் பர்சனாலிட்டி தூரத்தில் இருந்தே அனுபவம் ஆக வேண்டும். எப்படி உலகாயத பர்சனாலிட்டி கவர்ந்திழுக்கிறது, அது போல் உங்களது ஆன்மிகப் பர்சனாலிட்டி, தூய்மையின் பர்சனாலிட்டி, ஞானம் மற்றும் யோகம் நிறைந்த பர்சனாலிட்டி தானாகவே கவர்ந்து இழுக்கும்.

சுலோகன்: சரியான வழியில் நடப்பவர் மற்றும் அனைவருக்கும்

சரியான வழி காட்டுபவர் உண்மையிலும் உண்மையான லைட் ஹவுஸ் ஆவார்.

23.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! தேக அபிமானம் அழ வைக்கக்கூடியது, ஆத்ம அபிமானி ஆனீர்கள் என்றால் முயற்சி சரியாக இருக்கும், உள்ளத்தில் உண்மை இருக்கும், தந்தையை முழுமையாகப் பின்பற்ற முடியும்.

கேள்வி: எந்த சூழ்நிலையிலும் அல்லது ஆபத்தான சமயத்திலும் மனநிலை பயமற்றும் ஒரே சீராகவும் எப்போது இருக்க முடியும்?

பதில்: நாடகத்தின் ஞானத்தில் முழுமையான நம்பிக்கை இருக்கும்போது. எந்த ஆபத்தும் எதிரில் வரும்போது இது நாடகத்தில் இருந்தது என்று கூறுவீர்கள்.

கல்பத்திற்கு முன்பும் கூட இதனைக் கடந்து சென்றோம், இதில் பயப்படக்கூடிய விஷயம் ஏதுமில்லை. ஆனால் குழந்தைகள் மஹாவீரர்கள்ஆக வேண்டும். யார் தந்தைக்கு முழுமையான உதவியாளர்களாக, நல்ல குழந்தைகளாக, தந்தையின் இதயத்தில் இடம் பிடித்தவர்களாக இருக்கின்றனரோ, அப்படிப்பட்ட குழந்தைகள்தான் எப்போதும் (ஸ்திரமாக) நிலையாக இருப்பார்கள், மனநிலையும் கூட ஒரே (தந்தையின்) ரசனையில் சீராக இருக்கும்.

பாடல்: ஓ. . . தூரத்துப் பிரயாணியே. . .

ஓம் சாந்தி. வினாசத்தின் சமயம் வரும்போது, சிலர் தப்பித்து இருப்பார்கள், இராமனின் சேனை அல்லது இராவணனின் சேனை இரண்டு பக்கத்திலும் கண்டிப்பாக பிழைத்திருப்பார்கள். அப்போது இராவணனின் சேனையைச் சேர்ந்தவர்கள் கதறுவார்கள். ஒன்று நாம் உடன் செல்லவில்லையே மற்றது இறுதியில் மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது ஏனென்றால் ஐயோ ஐயோ என்ற கதறல் அதிகமாக இருக்கும். குழந்தைகளாகிய உங்களிலும் யார் நெருக்கமானவர்களாக இருக்கிறீர்களோ, அவர்கள்தான் வினாசத்தைப் பார்க்கத் தகுந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள்தான் தைரியமிக்கவர்களாக இருப்பார்கள். அங்கதன் எப்படி ஸ்திரமாக (நிலையாக, அசைக்க முடியாதவராக) இருந்ததாகக் கூறுகிறார்களோ, அது போல. குழந்தைகளாகிய உங்களைத் தவிர வேறு யாராலும் வினாசத்தைப் பார்க்க முடியாது. எப்படி அறுவைச் சிகிச்சை நடக்கும்போது யாராலும் பார்க்க முடியாதோ அப்படி ஐயோ ஐயோ என்ற அலறல் ஏற்படும்போது இருப்பார்கள். அதை நீங்கள் முன்பாகவே பார்த்தபடி இருப்பீர்கள். கூச்சல், குழப்பம் ஏற்பட்டபடி இருக்கும். நல்ல, நெருக்கமான குழந்தைகள், தந்தைக்கு முழுமையான உதவியாளர்களாக இருக்கும் நல்ல குழந்தைகள், தந்தையின் இதயத்தில் இடம் பிடித்திருப்பார்கள். அனுமான் யாரோ ஒருவர் மட்டுமல்ல. அனைத்து அனுமான், மஹாவீரர்களின் மாலையே ஆகும். ருத்ராக்ஷ மாலை உள்ளதல்லவா! ருத்ர பகவானுடைய மாலையின் பெயர்தான் ருத்ர மாலையாகும். ருத்ராக்ஷம் என்பது விலை உயர்ந்த ஒரு விதையாகும். ருத்ராக்ஷத்தில் சில உண்மையானதும் உள்ளன, சில போலிகளும் உள்ளன. அதே மாலை 100 ரூபாய்க்கும் கிடைக்கிறது, அதே மாலை 2 ரூபாய்க்கும் கிடைக்கிறது. ஒவ்வொரு பொருளும் இப்படித்தான் உள்ளது. தந்தை வைரத்திற்குச் சமமாக ஆக்குகிறார், அத்துடன் ஒப்பிடும்போது அனைவரும் செயற்கையானவர்களாக உள்ளனர். உண்மையான பரமாத்மாவுக்கு முன்னால் அனைவரும் பைசா அளவும் மதிப்பற்றவர்களாக உள்ளனர். ஒரு பழமொழி உண்டல்லவா - சூரியனுக்கு முன்னால் காரிருளை ஒருபோதும் மூடி மறைக்க முடியாது. உங்களுக்கு உண்மையான விஷயம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. உண்மையான ஈஸ்வரன் தந்தையைக் குறித்து மனிதர்கள் பொய்யானதையே கூறுகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இப்போது நீங்கள் புரிய வைக்கிறீர்கள் - கீதையின் பகவான் சிவன், தெய்வீக குணங்கள் நிறைந்த தேவதையான ஸ்ரீகிருஷ்ணர் அல்ல. இப்போது சங்கமயுகம், பிறகு சத்யுகம் கண்டிப்பாக வரும். ஸ்ரீகிருஷ்ணரின் ஆத்மா இப்போது ஞானம் எடுத்துக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் ஸ்ரீகிருஷ்ணரின் ஆத்மா ஞானம் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்று புரிந்து கொள்கின்றனர். எவ்வளவு வித்தியாசம் ஏற்பட்டுவிட்டது! அவர் தந்தை, இவர் குழந்தை. தந்தையை

ஒரேடியாக மறைத்து விட்டனர், மேலும் குழந்தையின் பெயரைப் போட்டு விட்டனர். இந்த விஷயங்களை நீங்கள் அறிவீர்கள். ஸ்ரீகிருஷ்ணர் அல்லது தேவி தேவதைகளுடைய ஆத்மாக்கள் 84 பிறவிகளை முடித்துள்ளனர். ஆத்மாவும் பரமாத்மாவும் வெகு காலமாகப் பிரிந்திருந்தனர் என்று பாடவும் படுகிறது. நாம்தான் அனைவருக்கும் முன்னர் பிரிந்தோம். மற்ற ஆத்மாக்கள் அனைவரும் பாபாவுடன் அங்கே இருப்பார்கள். இதனுடைய அர்த்தத்தை யாரும் புரிந்து கொள்வதில்லை. உங்களுக்குள்ளும் சரியான முறையில் புரிய வைப்பவர்கள் அபூர்வமாக சிலர் தான் இருக்கிறீர்கள். தேக அபிமானம் தான் மிகவும் அழ வைக்கிறது. ஆத்ம அபிமானிகள் தான் சரியாக முயற்சி செய்வார்கள். எனவே தாரணையும் நல்ல விதமாக ஏற்பட முடியும். ஆகையால் தந்தையைப் பின்பற்றுங்கள் (ஃபாலோ ஃபாதர்) என்று கூறப்படுகிறது. தந்தை கர்மத்திலும் வருகிறார். இருவருமே தந்தையாக ஆகின்றனர். இதை எந்த தந்தை கூறுகிறார் என்பது உங்களுக்குத் தெரிவதில்லை, ஏனென்றால் தந்தை-தாதா (பாப்தாதா) இருவருமே இந்த ஒரே சரீரத்தில் உள்ளனர். கர்மத்தில் வரக்கூடிய ஒருவர் பின்பற்றப்படுகிறார். தந்தை புரிய வைக்கிறார் - குழந்தைகளே, ஆத்ம அபிமானி ஆகுங்கள். பல நல்ல குழந்தைகளும் கூட தேக அபிமானிகளாக உள்ளனர், ஏனென்றால் பாபாவை நினைவு செய்வதில்லை. யார் யோகிகளாக இல்லையோ, அவர்கள் தாரணை செய்ய முடியாது. இங்கே உண்மையாக இருக்க வேண்டும். முழுமையாகப் பின்பற்ற வேண்டும். கேட்பவற்றை தாரணை செய்து பிறருக்குப் புரிய வைத்தபடி இருங்கள். பயமற்றவராக இருக்க வேண்டும். நாடகத்தின் மீது உறுதியாக இருக்க வேண்டும். ஏதும் ஆபத்து வந்தது என்றால் இது நாடகத்தில் உள்ளது என்று புரிந்து கொள்கிறோம். கஷ்டம் கடந்து சென்று விட்டது அல்லவா. நீங்கள் அனைவரும் மஹாவீரர்கள் அல்லவா. உங்களுடைய பெயர் பிரபலமானதாகும். நல்ல மஹாவீரர்கள் 8 பேர், 108 பேர் அவர்களை விட குறைந்தவர்கள், 16000 பேர் அவர்களையும் விட குறைந்தவர்கள். கண்டிப்பாக ஆக வேண்டும். இந்த இராஜ்யம் கல்பத்திற்கும் முன்பும் கூட ஸ்தாபனை ஆகியது, அதுவே மீண்டும் ஆகவேண்டியுள்ளது. மிகவும் சந்தேகத்தில் வந்து விடுகின்றனர். நம்பிக்கை இருந்தது என்றால் இப்படிப்பட்ட தந்தையை விட்டுச் செல்ல முடியாது. வ-யுறுத்தி அமிர்தம் குடிக்க வைத்தாலும் குடிப்பதில்லை, எப்படி சிறிய குழந்தைகள் இருக்கின்றனர் அல்லவா! பாபா ஞானப்பால் கொடுக்கிறார் என்றாலும் குடிப்பதில்லை. ஒரேடியாக முகத்தை திருப்பிக் கொண்டு விடுகின்றனர். அப்போது முழுக்க முழுக்க பயனற்றவராகி விடுகின்றனர். எனக்கு தாய் தந்தை ஒருவரும் தேவையில்லை, நான் ஸ்ரீமத்படி நடக்க முடியாது என்று கூறி விட்டால் பிறகு எப்படி சிரேஷ்டமாக ஆவார்கள்? ஸ்ரீமத் பகவானுடையதாகும். நிராகார ஞானக்கடல் பதீத பாவன பகவான் சிவாச்சாரியாரின் மஹா வாக்கியம் - மாதர்கள் சொர்க்கத்தின் நுழைவாயில் என்ற ஒரு சுலோகனைக் கூட எழுதி வைக்க வேண்டும். புரிய வைப்பதற்காக புத்தியில் விஷயங்கள் வர வேண்டும். மாணவர்கள் அனைவரும் கண்டிப்பாக வரிசைக்கிரமமாக இருப்பார்கள். நாடகத்தில் தம்முடைய அதே நடிப்பை நடித்துக் கொண்டிருக்கின்றனர். துக்கத்தில் நாம் அவரை நினைவு செய்கிறோம். தூரதேசத்தில் தந்தை இருக்கிறார், ஆத்மாக்களாகிய நாம் அவரை நினைவு செய்கிறோம். துக்கத்தில் அனைவரும் நினைக்கின்றனர், சுகத்தில் நினைப்பவர் யாருமில்லை. இப்போது துக்கம் நிறைந்த உலகமாக உள்ளதல்லவா! இதை புரிய வைப்பது மிகவும் சகஜமாகும். தந்தை சொர்க்கத்தைப் படைக்கக்

கூடியவர், ஆக நாம் ஏன் சொர்க்கத்தின் இராஜ்யத்தை அடையக் கூடாது என்று முதன் முதலில் புரிய வைக்க வேண்டும். அனைவரும் ஆஸ்தி அடைய முடியாது என்பதையும் தெரிந்திருக்கிறோம். அனைவரும் சொர்க்கத்திற்கு வந்து விட்டால் பிறகு நரகமே இருக்காது. எப்படி விருத்தி ஏற்படும்?

இதுவும் பாடப்பட்டுள்ளது - பாரதம் அழிவற்ற கண்டம். அதாவது அழிவற்ற தந்தையின் பிறப்பிடம் ஆகும். பாரதம்தான் சொர்க்கமாக இருந்தது, 5000 வருடங்களுக்கு முன்பு சொர்க்கம் இருந்தது என்று நாம் மகிழ்ச்சியுடன் சொல்கிறோம். சொர்க்கத்தின் எஜமானர்களின் சித்திரம் கூட இருக்கிறது அல்லவா. கிறிஸ்துவுக்கு 3000 வருடங்களுக்கு முன்பு பாரதம் சொர்க்கமாக இருந்தது என்று சொல்லவும் செய்கிறார்கள். கண்டிப்பாக பாரதத்தில்தான் சூரிய வம்சத்தவர், சந்திர வம்சத்தவர் இருந்தனர். சித்திரங்கள் கூட அவர்களுடைய தாகும். எவ்வளவு சகஜமானது. புத்தியில் இந்த ஞானம் ஓடுகிறது. பாபாவுடைய ஆத்மாவில் இந்த ஞானம் இருந்தது. ஆக ஆத்மாக்களாகிய நமக்கும் தாரணை செய்ய வைக்கிறார். அவரோ ஞானம் நிறைந்தவர். பிறகு சொல்கிறார் - இந்த பிரஜாபிதா பிரம்மாவின் மூலமாக இராஜயோகத்தை கற்பிக்கிறேன். இதன் மூலம் நீங்கள் இராஜாக்களுக்கெல்லாம் இராஜா ஆகி விடுகிறீர்கள். பிறகு இந்த ஞானம் மறைந்து போய்விடும். இப்போது ஞானம் உங்களுக்கு மீண்டும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது குழந்தைகளாகிய நீங்கள் சவால் விட வேண்டும். இதில் மிக நல்ல முதல் தரமான புத்தி வேண்டும். பாபா தன்னிடம் ஒரு போதும் விலை உயர்ந்த பொருளை வைத்துக் கொள்வதில்லை. இத்தனை கட்டிடங்கள் போன்றவை உருவாக்கினார். அதைக்கூட குழந்தைகள் தங்குவதற்காக உருவாக்கினார். இல்லையென்றால் குழந்தைகள் எங்கே தங்குவார்கள்? ஒரு நாள் எல்லா கட்டிடங்களும் நம்முடைய கைக்கு வந்து விடும். பகவானுடைய வாசலில் பக்தர்களுடைய கூட்டம் வந்தே தீரும். அவர்களோ பல பகவான்களை உருவாக்கி விட்டார்கள். உண்மையில் இவர்தான் பகவான் அல்லவா. எவ்வளவு கூட்டம் வரும் என்று நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். உலகத்தில் நிறைய மூட நம்பிக்கை உள்ளது. திருவிழாக்களில் எவ்வளவு கூட்டம் ஏற்பட்டு விடுகிறது. அவ்வப்போது தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். கூட்டத்தில் எவ்வளவு பேர் இறந்தும் போய் விடுகிறார்கள். மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது. ஆக, இந்த சுயதரிசன சக்கரம் மிக நன்றாக இருக்கிறது. சுலோகன் கூட கண்டிப்பாக எழுத வேண்டும். கடைசியில் மாதர்கள் முன்பு அனைவரும் தலை வணங்க வேண்டும். சக்திகளுக்கு அப்படிப்பட்ட சித்திரங்களை உருவாக்குகிறார்கள். பாபா குழந்தை களுக்காக ஞான துப்பாக்கிகளை உருவாக்க வைக்கிறார். நிரூபியுங்கள் என்று சொல்கிறார். இது சகஜமான தாகும். பக்தர்கள் பகவானை நினைவு செய்கிறார்கள். பகவானை சந்திக்க சாதுக்கள் சாதனைகள் செய்கின்றனர். இறைவன் தந்தை என்று சொல்லப்படுகிறார். நாம் அவருடைய குழந்தைகளாக இருக்கிறோம். சகோதரத்துவம் என்று சொல்கிறோம் அல்லவா. சீனர்கள் இந்துக்கள் சகோதர சகோதரர்கள் என்கிறோம். ஆக, தந்தை ஒருவர்தான் அல்லவா. ஸ்தூல ரூபத்தில் பிறகு சகோதர சகோதரி ஆகி விடுகின்றனர். விகாரமான பார்வை இருக்க முடியாது. இது தூய்மையாக இருப்பதற்கான யுக்தி ஆகும். காமம் மிகப் பெரிய எதிரி என்று பாபா சொல்கிறார். ஆனால் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமானது ஒரு விஷயம் - பகவான் அனை வருடைய தந்தை ஆவார். தந்தை சொர்க்கத்தைப் படைக்கக் கூடியவர் எனும்போது

தந்தையிடமிருந்து கண்டிப்பாக ஆஸ்தி கிடைக்க வேண்டும். ஆஸ்தி இருந்தது, இப்போது இழந்து விட்டீர்கள். இது சுக துக்கத்திற்கான விளையாட்டாகும். இதை நன்றாகப் புரிய வைக்க வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சத்தியத்தை தாரணை செய்து தந்தையின் ஒவ்வொரு நடத்தையையும் பின்பற்ற வேண்டும். ஞான அமிர்தத்தைக் குடிக்க வேண்டும், குடிக்க வைக்க வேண்டும். பயமற்றவராக ஆக வேண்டும்.

2. நாம் பகவானுடைய குழந்தைகள், ஒருவருக்கொருவர் சகோதர சகோதரர்கள் ஆவோம் என்ற நினைவின் மூலமாக தன்னுடைய பார்வை, உள்ளுணர்வை தூய்மையாக்க வேண்டும்.

வரதானம்: ஒவ்வொருவரின் விசேசத்தன்மைகளை பார்த்து அவற்றை சேவையில்

ஈடுபடுத்தி ஆசிர்வாதங்களுக்கு உரியவர் ஆகுங்கள்.

பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தைளிடம் உள்ள விசேசத்தன்மை மீது அன்பு இருக்கிறது. ஒவ்வொரு வரிடமும் ஏதேனும் விசேசத் தன்மை இருப்பதனால், அனைவரின் மீதும் அன்பு இருக்கிறது. அதே போன்று நீங்களும் அனைவரிடமுள்ள விசேசத்தன்மையைப் பாருங்கள். எவ்வாறு அன்னப்பறவையானது கற்களை விடுத்து இரத்தினங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும். அதே போன்று அன்னப் பறவைகளாகிய உங்களுடைய வேலையே பிறரிடம் உள்ள விசேசதாவை மட்டும் பார்த்து அவைகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும். அவர்களிடம் உள்ள விசேசதாவை உற்சாகப்படுத்தி சேவையில் ஈடுபடுத்தும் போது அவர்களுடைய ஆசிர்வாதம் உங்களுக்கு கிடைக்கும். மேலும் அவர்கள் செய்கின்ற சேவையில் உங்களுக்கும் பங்கு கிடைக்கும்.

சுலோகன்: உங்கள் மூலமாக பிறருக்கும் பாபாவின் நினைவு வருகின்ற அளவிற்கு

பாப்தாதாவுடன் இணைந்தே இருங்கள்.

மாதேஸ்வரி அவர்களின் இனிய மகாவாக்கியங்கள்

தமோகுணி மாயாவின் விஸ்தாரம்

சதோகுணி, ரஜோகுணி, தமோகுணி என மூன்று சொற்களைச் சொல்கின்றனர்.

இவற்றை யதார்த்தமாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த மூன்று குணங்களும் ஒரே நேரத்தில் சேர்ந்தாற்போல் நடைமுறையில் இருப்பதாக நினைக்கின்றனர். ஆனால் விவேகம் வினவுகிறது -- இந்த மூன்று குணங்களும் ஒன்றாக நடைபெறுகின்றனவா அல்லது மூன்று குணங்களின் பாகங்கள் தனித்தனி யுகங்களில் நடைபெறு கின்றனவா? விவேகமோ இப்படித் தான் சொல்கிறது -- அதாவது இந்த மூன்று குணங்களும் ஒன்றாக நடைபெறுவதில்லை. சத்யுகத்தில் சதோகுணம், துவாபரயுகத்தில் ரஜோகுணம், மற்றும் கலியுகத்தில் தமோகுணம். சதோ இருக்கும் போது ரஜோ, தமோ இருக்காது. ரஜோ இருக்கும் போது சதோகுணம் இருக்காது. இந்த மனிதர்களோ இப்படியே புரிந்து கொண்டுள்ளனர் -- அதாவது இந்த மூன்று குணங்களும் ஒரே நேரத்தில் நடைபெறுவதாக. இவ்வாறு சொல்வது பிழையாகும். மனிதர்கள் உண்மை பேசும் போது பாவங்கள் செய்வதில்லை, அதனால் சதோகுணியாக உள்ளனர் என நினைக்கின்றனர். ஆனால் விவேகம் சொல்கிறது -- சதோகுணம் என்று நாம் சொல்லும் போது, சதோகுணம் என்பதன் அர்த்தம் சம்பூர்ண சுகம். முழு சிருஷ்டியும் சதோகுணியாக இருக்கும் என்று அர்த்தமாகிறது. மற்றப்படி இது போல் சொல்ல மாட்டார்கள் -- அதாவது உண்மை பேசுகிறவர் சதோகுணி, பொய் பேசுகிறவர் கலியக தமோகுணி, இப்படியே தான் உலகம் நடந்து வந்துள்ளது. நாம் சத்யுகம் என்று சொல்லும் போது இதன் அர்த்தம் முழு சிருஷ்டி மீதும் சதோகுண சதோப்ரதானம் இருக்க வேண்டும். ஆம், ஏதோ ஒரு சமயம் அத்தகைய சத்யுகம் இருந்தது. அங்கே முழு உலகுமே சதோகுணியாக இருந்தது. இப்போது அந்த சத்யுகம் இல்லை. இப்போதோ கலியுக உலகமாக உள்ளது. அதாவது முழு சிருஷ்டி மீதும் தமோப்ரதானத் தன்மையின் இராஜ்யம் உள்ளது. இந்தத் தமோகுணி சமயத்தில் பிறகு சதோகுணம் எங்கிருந்து வந்தது? இப்போது பயங்கர அஞ்ஞான இருள் சூழ்ந்துள்ள நேரம். இது பிரம்மாவின் இரவு எனச் சொல்லப் படுகிறது. பிரம்மாவின் பகல் சத்யுகம் மற்றும் பிரம்மாவின் இரவு கலியுகம். ஆகவே நாம் இரண்டையும் ஒன்றாக ஆக்கிவிட முடியாது. நல்லது. ஓம் சாந்தி.

24.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! உங்கள் மனதில் உண்மையும் தூய்மையும் இருக்கும் போது உங்களுடைய உண்மையான (ஞான) கருத்துக்கள் கேட்பவர் மனதில் அம்பு போல் பதியும். உங்களுக்கு சத்தியமான தந்தையின் சேர்க்கை (துணை) கிடைத்துள்ளது. அதனால் உண்மையானவர்களாக ஆகுங்கள்.

கேள்வி : நீங்கள் அனைவரும் மாணவர்கள், நீங்கள் எந்த விசயத்தின் சிந்தனை வைக்க வேண்டியது அவசியம்?

பதில்: எப்போதாவது ஏதேனும் தவறு நேர்ந்தால் உண்மையைச் சொல்ல வேண்டும். உண்மை பேசுவதன் மூலம் தான் முன்னேற்றம் ஏற்படும். உங்களுடைய சேவையை மற்றவரிடமிருந்து நீங்கள் பெறக் கூடாது. இங்கே சேவை பெற்றுக் கொண்டால் அங்கே சேவை செய்ய நேரிடும். மாணவர்களாகிய நீங்கள் நன்றாகப் படித்து மற்றவர்களுக்கும் கற்றுத் தருவீர்களானால் பாபாவும் குஷியடைவார். பாபா அன்புக்கடலானவர். அவருடைய அன்பே இது தான் - அவர் உங்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்து உயர்ந்த பதவி கிடைக்கச்

செய்கிறார்.

பாடல் : யார் இந்த விளையாட்டை யெல்லாம் உருவாக்கினார்?...........

ஓம் சாந்தி. இப்போது - நாங்கள் கீதா ஜெயந்தியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்று. செய்திகள் வருகின்றன. இப்போது கீதைக்கு ஜென்மம் கொடுத்தவர் யார்? இது தான் தலைப்பு. ஜெயந்தி எனச் சொல்கின்றனர் என்றால் அவசியம் ஜென்மமும் ஏற்பட்டிருக்கும் இல்லையா? ஸ்ரீமத் பகவத்கீதை என்று சொல்கின்றனர் என்றால் அதற்கு ஜென்மம் கொடுப்பவரும் இருக்க வேண்டும் அல்லவா? அனைவரும் ஸ்ரீகிருஷ்ண பகவான் வாக்கு என்று சொல்கின்றனர். அப்போது ஸ்ரீகிருஷ்ணர் முதலில் வருகிறார், கீதை பின்னால் வருகின்றது. இப்போது கீதையைப் படைப்பவர் நிச்சயமாக வேண்டும். ஸ்ரீகிருஷ்ணரை அதுபோல் சொல்வதானால் முதலில் ஸ்ரீகிருஷ்ணர், பின்னால் கீதை வரவேண்டும். ஆனால் ஸ்ரீகிருஷ்ணரோ சின்னக் குழந்தையாக இருந்தார். அவர் கீதை சொல்ல முடியாது. இதை உறுதிப் படுத்த வேண்டியிருக்கும் - கீதைக்கு ஜென்மம் தருபவர் யார்? இது ஆழமான விசயமாகும். கிருஷ்ணரோ மாதாவின் கர்ப்பத்தில் ஜென்மம் எடுக்கிறார். அவரோ சத்யுகத்தின் இளவரசர். அவர் தாமே கீதை மூலமாக இராஜயோகத்தைக் கற்று இளவரசர் பதவி பெற்றுள்ளார். இப்போது கீதைக்கு ஜென்மம் கொடுப்பவர் யார்? பரமபிதா பரமாத்மாவா, அல்லது ஸ்ரீகிருஷ்ணரா? ஸ்ரீகிருஷ்ணரை உண்மையில் திரிலோகிநாத், திரிகாலதரிசி என்றும் சொல்ல இயலாது. திரிலோகிநாத், திரிகாலதரிசி என்று ஒருவரை மட்டுமே சொல்வார்கள். திரிலோகிநாத் என்றால் மூன்று உலகங்கள் மீதும் இராஜ்யம் செய்கின்றார். மூல வதனம், சூட்சும வதனம், ஸ்தூல வதனம் ஆகிய மூன்றும் திரிலோகம் எனச் சொல்லப் படுகின்றது. இவற்றை அறிந்திருப்பவர் திரிலோகிநாத், திரிகாலதரிசி பரமபிதா பரமாத்மா சிவன். இந்த மகிமை அவருடையதாகும், ஸ்ரீகிருஷ்ணருடையது அல்ல. கிருஷ்ணருடைய மகிமையாவது - 16 கலை சம்பூர்ண, சர்வகுண சம்பன்ன......... அவர் சந்திரனோடு ஒப்பிடப் படுகின்றார். பரமாத்மாவை சந்திரனோடு ஒப்பிட மாட்டார்கள். அவருடைய செயல்களே வேறு. அவர் கீதைக்கு ஜென்மம் கொடுக்கக் கூடிய படைப்பவராவார். கீதையினுடைய ஞானம் மற்றும் இராஜயோகத்தினால் தான் தேவதைகள் உருவாகின்றனர். மனிதர்களை தேவதை ஆக்குவதற்காக பாபா வந்து ஞானம் கொடுக்க வேண்டியுள்ளது. இப்போது இந்த ஞானத்தைத் தருபவர்கள் மிகவும் திறமைசாலிகளான பிரம்மாகுமார்-குமாரிகள் வேண்டும். அனைவரும் ஒரே மாதிரி சொல்லிப் புரிய வைக்க முடியாது. பெண்குழந்தைகள் அனைவருமே நம்பர்வார் உள்ளனர். தலைப்பும் இதுபோல் வைக்க வேண்டும் - ஸ்ரீமத் பகவத் கீதைக்கு ஜென்மம் கொடுத்தவர் யார்? இதற்கான வித்தியாசத்தைப் புரிய வைக்க வேண்டும். பகவானோ ஒருவர் தான் - பரமபிதா பரமாத்மா சிவன். அந்த ஞானக்கடல் மூலம் ஞானம் கேட்டு கிருஷ்ணர் இந்தப் பதவியை அடைந்திருந்தார். சகஜ இராஜயோகத்தின் மூலம் இந்தப் பதவியை எப்படிப் பெற்றார்? இதைப் புரிய வைக்க வேண்டும். பிரம்மா மூலம் தான் முதலில் பாபா பிராமணர்களைப் படைக்கிறார். அனைத்து வேத-சாஸ்திரங்களின் சாரத்தைச் சொல்கிறார். பிரம்மாவுடன் கூட பிரம்மா முகவம்சாவளியும் வேண்டும். பிரம்மாவுக்குத் தான் திரிகாலதரிசி பற்றிய ஞானம் கிடைக்கின்றது. திரிலோகி அதாவது மூன்று உலகங்கள் பற்றிய ஞானமும் கிடைக்கின்றது. மூன்று

காலங்கள்-ஆரம்பம், இடை, கடைசியைச் சேர்த்து சொல்லப் படுகின்றது. மற்றும் மூன்று உலகங்கள் என்றால் மூல, சூட்சும, ஸ்தூல வதனம். இந்த வார்த்தைகளை நினைவு வைக்க வேண்டும். அநேகக் குழந்தைகள் மறந்து போகின்றனர். தேக அகங்காரமாகிய மாயா தான் மறக்கடித்துள்ளது. ஆக, கீதையின் படைப்பாளர் பரமபிதா பரமாத்மா சிவன். ஆவார், கிருஷ்ணரல்ல. பரமபிதா பரமாத்மா தான் திரிகாலதரிசி மற்றும் திரிலோகிநாத் ஆவார். கிருஷ்ணரிடமோ அல்லது லட்சுமி- நாராயணரிடமோ இந்த ஞானம் கிடையாது. ஆம், யார் இந்த ஞானத்தை பாபாவிடமிருந்து பெற்றார்களோ, அவர்கள் உலகத்தின் எஜமானர் ஆகி விட்டனர். எப்போது சத்கதி கிடைத்து விட்டதோ அதன் பிறகு இந்த ஞானம் புத்தியிலிருந்து மறைந்து விடுகின்றது. அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் அவர் ஒருவர் தான். அவர் புனர்ஜென்மம் எடுப்பவர் அல்ல. புனர்ஜென்மம் எடுப்பது ஆரம்பமானது, சத்யுகத்தின் தொடக்கத்தி-ருந்து கலியுகத்தின் கடைசி வரை 84 பிறவிகள் எடுக்கின்றனர். இதைப் புரிய வைக்க வேண்டியுள்ளது. அனைவரும் 84 பிறவிகள் எடுப்பதில்லை. யார் இந்த கீதையை எழுதினாரோ அவரைத் திரிகாலதரிசி எனச் சொல்ல மாட்டார்கள். ஸ்ரீகிருஷ்ண பகவான் வாக்கு என்று முதலிலேயே எழுதப் பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானதாகும். தவறாகவும் நிச்சயமாக ஆகியே தீர வேண்டும். எப்போது அனைத்து சாஸ்திரங்களும் தவறாக ஆகின்றனவோ, அப்போது பாபா வந்து சரியானதைச் சொல்கிறார். நிச்சயமாக பிரம்மா மூலம் வேத-சாஸ்திரங்களின் உண்மையான சாரத்தைச் சொல்கிறார். அதனால் அவர் சத்தியமானவர் எனச் சொல்லப்படுகிறார். இப்போது உங்களுடைய தொடர்பு சத்தியமானவருடன் அவர் உங்களுக்கு சத்தியத்தைச் சொல்கிறார்.

பிரஜாபிதா பிரம்மா மற்றும் அவருடைய முகவம்சாவளி இந்த ஜெகதம்பா சரஸ்வதி. பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் அனைவரும் தங்களுக்குள் சகோதர-சகோதரிகள் ஆகின்றனர். எங்காவது கோவில்களில் போய் சொற்பொழிவு செய்ய வேண்டும். நடந்து சுற்றி வருவதற்காகவும் அங்கே அநேகர் வருகின்றனர். ஒருவருக்குப் புரிய வைத்தால் சத்சங்கம் கூடிவிடும். மயானத்திற்கும் செல்ல வேண்டும். அங்கே மனிதர்களுக்கு வைராக்கியம் ஏற்படுகின்றது. ஆனால் பாபா சொல்கிறார், என்னுடைய பக்தர்களுக்குப் புரிய வைப்பதன் மூலம் அவர்கள் உடனே புரிந்து கொள்வார்கள். ஆக, சிவபாபாவின் கோவில், லட்சுமி-நாராயணின் கோவில்களுக்குச் செல்ல வேண்டும். லட்சுமி-நாராயணரை பாபா மம்மா எனச் சொல் வதில்லை. சிவனை பாபா எனச் சொல்கின்றனர் என்றால் நிச்சயமாக மம்மாவும் இருப்பார். அவர் குப்தமாக உள்ளார். படைப்பவராகிய சிவபாபாவை தாய்-தந்தை என்று எப்படிச் சொல்கின்றனர்? - இந்த குப்தமான விசயத்தை யாருமே அறிந்து கொள்ள முடியாது. லட்சுமி - நாராயணருக்கென்று ஒரு குழந்தை மட்டுமே இருக்கும். மற்றப்படி இவருடைய பெயர் பிரஜாபிதா பிரம்மா. விஷ்ணு மற்றும் சங்கரை உயர்வாக வைப்பதில்லை. உயர்ந்தவராக திரிமூர்த்தி பிரம்மாவை வைக்கின்றனர். எப்படி படைப்பவர் என சிவ பரமாத்மாவைச் சொல்கின்றனர், அதுபோலவே பிரம்மாவும் கூட படைப்பவர் எனச் சொல்லப் படுகிறார். அவரோ அவிநாசியாகவே உள்ளார். படைப்பவர் என்ற சொல்லைச் சொன்னால் கேட்பார்கள் - எப்படிப் படைத்தார்? அவரோ படைப்பவர் தான். ஆனால் படைப்பு நடைபெறுவது பிரம்மா மூலமாக. இப்போது பிரம்மா மூலம் பரமாத்மா அனைத்து ஆத்மாக்களுக்கும் சிருஷ்டியின் முதல்-இடை-கடை பற்றிய

ஞானத்தைத் தருகிறார். வேத-சாஸ்திரங்கள் முதலிய அனைத்தும் பக்தி மார்க்கத்தின் சாதனங்கள். பக்தி மார்க்கம் அரைக்கல்பம் நடைபெறுகின்றது. இது ஞான காண்டம் (ஞானத்தின் தொகுப்பு). எப்போது பக்தி முடிவடைகிறதோ, அப்போது அனைவரும் தூய்மையற்று கீழான நிலையில் வந்து விடுகின்றனர். அப்போது நான் வருகிறேன். முதலில் சதோபிரதானில் இருந்து சதோ, ரஜோ, தமோவில் வருகின்றனர். மேலிருந்து வரும் தூய்மையான ஆத்மாக்கள் துக்கம் அனுபவிக்கின்ற அளவுக்கு அப்படிப்பட்ட கர்மம் எதையும் செய்திருக்கவில்லை. கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தனர் என்று சொல்கின்றனர். ஆனால் அதுபோல் நடைபெற முடியாது. புது ஆத்மா தர்ம ஸ்தாபனை செய்வதற்காக வரும்போது அவருக்கு துக்கம் கிடைக்க முடியாது. ஏனென்றால் அவரோ கர்மாதீத் அவஸ்தாவில் உள்ள செய்தித் தூதுவராகிய ஆத்மா, தர்ம ஸ்தாபனை செய்வதற்காக வந்தார். சண்டையிலும் தூதுவரை அனுப்புகின்றனர் என்றால் அவர் வெள்ளைக்கொடி ஏந்தி வருகிறார். இதன் மூலம் மக்கள் புரிந்து கொள்கின்றனர், இவர் ஏதோ செய்தி கொண்டு வந்துள்ளார். அவருக்கு யாரும் கஷ்டம் கொடுப்பதில்லை. ஆக, தூதுவர் வரும்போது அவரை ஒன்றும் சிலுவையில் அறைய முடியாது. துக்கத்தை ஆத்மா தான் அனுபவிக்கின்றது. ஆத்மா நிர்லேப் (பாவ புண்ணியங்களுக்கு அப்பாற் பட்டது) அல்ல. இதை எழுத வேண்டும். ஆத்மாவை நிர்லேப் எனச் சொல்வது தவறாகும். இதை யார் சொன்னார்? சிவபகவான் சொன்னார். இந்தப் பாயின்ட்டை நீங்கள் குறித்து வைக்க வேண்டும். எழுதுவதற்கு மிகவும் விசால புத்தி வேண்டும். கண்காட்சியில் கிறிஸ்துவர்கள் வருகிறார்கள் என்றால் அவர்களுக்கும் கூட சொல்ல முடியும்- கிறிஸ்துவின் ஆத்மா சிலுவையில் அறையப் படவில்லை. மற்றப்படி அவர் யாருக்குள் பிரவேசமானாரோ, அந்த ஆத்மாவுக்கு துக்கம் ஏற்பட்டது. ஆக, இதுபோன்ற விசயங்களைக் கேட்டு வியப்படைவார்கள். அந்த தூய்மையான ஆத்மா வந்து தர்ம ஸ்தாபனை செய்தார். இறைத்தந்தையின் கட்டளைப்படி. இதுவும் டிராமா. டிராமாவையும் அநேகர் புரிந்து கொண்டுள்ளனர், ஆனால் அதன் முதல்-இடை-கடை பற்றி அவர்களுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட விசயங்களைக் கேட்டு அவர்கள் கொஞ்சம் புரிந்து கொள்ள முயற்சி செய்கின்றனர். கிருஷ்ணருக்கும் யாரும் நிந்தனை செய்ய முடியாது. நிச்சயமாக நிந்தனைகள் இப்போது தான் கிடைத்துக் கொண்டிருக்கின்றன-யாருக்கு? சிவபாபாவுக்கு அல்ல. இந்த சாகாருக்கு (பிரம்மா). ஆசிரியரோ பாபா-தூய ஆத்மா, இவர் (பிரம்மா) தூய்மையற்றவர், தூய்மையாக ஆகிக் கொண்டிருக்கிறார். யார் புரிந்து கொண்டுள்ளனரோ, அவர்கள் எதையாவது பிதற்ற மாட்டார்கள். இல்லையென்றால் இதுவோ கற்பிக்கப் பட்டுள்ளது என்று புரிந்து கொள்வார்கள். பிறகு அந்த விசயம் யாருக்கும் தோன்றுவதில்லை. புத்தியில் பதிவதில்லை. உண்மை-தூய்மை மிகவும் வேண்டும். யார் தாங்களே விகாரிகளாக உள்ளனரோ, அவர்கள் மற்றவர்களுக்கு காமம் மகாசத்ரு எனச் சொல்வார்களானால் அவர்கள் சொல்வது கேட்பவர்களின் புத்தியில் பதியாது. எப்படி பண்டிதர், உதாரணம் - ராம்-ராம் எனச் சொல்வதால் நதி அல்லது கடலைத் தாண்டிச் சென்று விடுவார்கள் என்று கூறுவார்கள். அது இப்போதைய விசயம் தான். சிவபாபா சொல்கிறார், என்னை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் இந்த விஷக்கடலில் இருந்து அப்பால் சென்று விடுவீர்கள். எந்தக் கடல்? இதைப் பண்டிதர்கள் அறிய மாட்டார்கள். வேஷ்யாலத்தில் இருந்து சிவாலயத்திற்குச் சென்று விடுவீர்கள். மிக நன்றாக ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். சொல்கின்றனர் இல்லையா-பாபா,

நீங்கள் அன்பு காட்டினாலும் சரி, எட்டி உதைத்தாலும் சரி....... இங்கோ ஞானம் புரிய வைக்கப் படுகின்றது, அவ்வளவு தான். இருந்தாலும் அநேகர் பிணங்களாக ஆகி விடுகின்றனர். குழந்தைகளுக்கோ எழுதப் படிக்க சொல்லித்தரப் படுகின்றது. பாபா அன்புக்கடலாக உள்ளார். அதாவது படிப்பு சொல்லித் தந்து உயர்ந்த பதவி கிடைக்கச் செய்கிறார். இது அவரது அன்பாகும். பாபா படிப்பு சொல்லித் தருகிறார் எனும்போது படித்து, மற்றவர்களுக்கும் படிப்பு சொல்லித்தர வேண்டும். பாபாவைக் குஷிப் படுத்த வேண்டும். பாபாவின் சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும். பாபாவின் சேவை என்பது இது தான் - தன்னுடைய உடல்-மனம்-செல்வத்தின் மூலம் பாரதத்துக்கு உண்மையிலும் உண்மையான சேவை செய்யுங்கள். நீங்களோ உரத்த சப்தமிட்டுப் புரிய வைக்க வேண்டும். அனைவரும் வரிசைக்கிரமமாக உள்ளனர். இராஜதானியிலும் கூட வரிசைக்கிரமமாக இருப்பார்கள். இவர் தெய்வீக ராஜதானியில் என்ன நம்பர் பெறுவார் என்று டீச்சர் (சிவபாபா) புரிந்து கொள்வார். சேவை மூலம் யார்-யார் முக்கியமானவராக ஆவார்கள் என்று புரிந்து கொள்ள முடியும். தானே கூடப் புரிந்து கொண்டுள்ளனர், நாம் பாபா-மம்மா அளவுக்கு சேவை செய்யவில்லை என்றால் தாச-தாசி ஆக வேண்டியது வரும். இன்னும் போனால் உங்கள் அனைவருக்கும் எல்லாமே தெரிய வரும். நாம் ஸ்ரீமத் படி நடக்கவில்லை என்பதெல்லாம் தெளிவாகி விடும். குழந்தைகள் நீங்கள் இச்சமயம் மாணவர்கள். இச்சமயம் நீங்கள் உங்களுக்கு தாசிகளை அமர்த்திக் கொண்டால் நீங்களே தாசிகளாக ஆக நேரிடும். இங்கேயே மகாராணி ஆவதென்பது தேக அபிமானமாகும். உண்மை கூற வேண்டும் - பாபா, இந்தத் தவறு நேர்ந்து விட்டது. இப்போது சம்பூர்ணமாகவோ அனைவரும் ஆகவில்லை. பரீட்சையில் அனைவரும் ஃபெயிலாகி விட்டாலோ வெட்கப் படவும் செய்கின்றனர்.

பாபாவுக்கு இரவில் சிந்தனை ஓடியது - மனிதர்கள் 21 பிறவிகள் எனச் சொல்கின்றனர், பாடவும் செய்கின்றனர். இப்போது இந்த ஈஸ்வரிய ஜென்மம் ஒன்று தனிப்பட்டது. 8 ஜென்மங்கள் சத்யுகத்தில், 12 ஜென்மங்கள் திரேதாயுகத்தில், 21 ஜென்மங்கள் துவாபரயுகத்தில், 42 ஜென்மங்கள் கலியுகத்தில். இந்த உங்களுடைய ஈஸ்வரிய ஜென்மம் அனைத்திலும் உயர்ந்த ஜென்மம் - தத்தெடுக்கப் பட்டது. பிராமணர்களாகிய உங்களுக்குத் தான் இந்த சௌபாக்கியசாலி ஜென்மம் உள்ளது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம் :

1) அன்புக்கடலான பாபாவின் அன்புக்குப் பிரதிபலன் தரவேண்டும். நல்லபடியாகப் படித்து, பிறகு மற்றவர்களுக்குப் படிப்பிக்கவும் வேண்டும். ஸ்ரீமத் படி நடக்க வேண்டும்.

2) உண்மை மற்றும் தூய்மை மூலம் முதலில் தனக்குள் தாரணை செய்து பிறகு மற்றவர்களுக்கும் தாரணை செய்விக்க வேண்டும். ஒரு பாபாவின் சங்கத்திலேயே இருக்க வேண்டும்.

வரதானம்: நிமித்த ஆத்மாக்களின் கட்டளையின் மகத்துவத்தை அறிந்து

பாவங்களி-ருந்து விடுபடக் கூடிய புத்திசா- ஆகுக.

யாரோ ஒருவர் கூறுவதைக் கேட்டு நிமித்த ஆத்மா இந்த கட்டளை கூறிக் கொண்டு இருக்கின்றார் என்று புத்திசா- குழந்தைகள் ஒருபோதும் நினைக்கமாட்டார்கள். நிமித்தமாக இருக்கின்ற ஆத்மாக்களின் மீது ஒருபோதும் இந்த வீண் எண்ணங்களை கொண்டு வரக் கூடாது. ஒருவேளை அவ்வாறு செய்திருந்தாலும், அது உங்களுக்கு சரியாக தோன்றவில்லை என்றாலும் நீங்கள் அதற்கு பொறுப்பு கிடையாது. உங்களுக்கு பாவம் ஏற்படாது. ஏனெனில் இவரை நிமித்தமாக ஆக்கிய தந்தை பாவத்தை மாற்றி விடுவார். இது குப்தமான இரகசியம், மறைமுகமான தொழிற்கூடம் இது.

சுலோகன்: யார் ஓய்வுப் பிரியராக இல்லாமல் பிரபுவிற்கு பிரியமானவர், உலகிற்குப் பிரியமானவராக இருக்கிறார்களோ அவர்களே நேர்மையானவர்கள்.

மாதேஸ்வரி அவர்களின் இனிய மகாவாக்கியம் -

மனிதர்கள் 84 பிறவிகள் எடுக்கின்றனர், 84 இலட்ச பிறவிகள் அல்ல

பிரபு, குழந்தைகளாகிய எங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று இப்பொழுது நாம் கூறுகின்றோம். அக்கரை என்றால் என்ன? அக்கரை என்றால் பிறப்பு இறப்புச் சக்கரத்தில் வராமல் இருப்பது அதாவது முக்தி அடைவதாகும் என்று மனிதர்கள் புரிந்திருக்கின்றனர். இது மனிதர்களுடைய கூற்று ஆகும். ஆனால், அவர் கூறுகின்றார், குழந்தைகளே, எங்கு முழுமையான சுகம் சாந்தி உள்ளதோ, துக்கம் அசாந்தி இல்லையோ, அதை உலகம் என்று சொல்வதில்லை. மனிதர்கள் சுகத்தை விரும்புகிறார்கள் எனில் அது கூட இந்த வாழ்வில் இருக்க வேண்டும், சத்தியுகம் வைகுண்டம் தேவதைகளின் உலகத்தில் முழுமையான சுகம் நிறைந்த வாழ்க்கை இருந்தது. அந்த தேவதைகளை அமரர்கள் என்று கூறினார்கள். இப்பொழுது அமரர் என்ற வார்த்தைக்கும் கூட அர்த்தம் இல்லாமல் ஆகிவிட்டது. தேவதைகள் ஆயுள் மிகவும் நீளமானது, அவர்கள் ஒருபொழுதும் மரணம் அடைய மாட்டார்கள் என்பது கிடையாது. அவர்களுடைய இந்த கூற்று தவறானது. ஏனெனில், தேவதைகள் அவ்வாறு கிடையாது. அவர்களுடைய ஆயுள் சத்தியுக திரேதாயுகம் வரை மட்டும் இருப்பதில்லை, ஆனால், தேவி தேவதைகளின் பிறப்பானது சத்தியுக திரேதாயுகத்தில் மிக அதிகமாக இருக்கிறது, 21 பிறவிகளுக்கு அவர்கள் சிறப்பாக இராஜ்யம் செய்தனர் மற்றும் பிறகு, 63 பிறவிகள் துவாபரயுகத்தில் இருந்து கலியுகத்தின் இறுதி வரை மொத்தம் ஏறும் கலையில் 21 பிறவிகளும் பிறகு இறங்கும் கலையில் 63 பிறவிகளும் எடுக்கின்றனர், ஆக மொத்தம் மனிதர்கள் 84 பிறவிகள் எடுக்கின்றனர். மற்றபடி, மனிதர்கள் 84 இலட்ச பிறவிகளை அனுபவிக்கின்றார்கள் என்று மனிதர்கள் புரிந்திருக்கின்றனர், இந்தக் கூற்று தவறானதாகும். ஒருவேளை மனிதர்கள் தன்னுடைய பிறவிகளில் சுகம் துக்கம் ஆகிய இரண்டு பாகத்தையும் நடிக்க முடிகிறது எனில், பிறகு, விலங்காகப் பிறவி எடுத்து அனுபவிப்பதற்கான அவசியம் என்ன உள்ளது? இப்பொழுது மனிதர்களுக்கு இந்த ஞானமே கிடையாது. மனிதர்கள் 84 பிறவிகள் எடுக்கின்றனர், மற்றபடி சிருஷ்டியில்

விலங்குகள், பறவைகள் முதலியவை மொத்தம் 84 இலட்ச உயிரினங்கள் உள்ளன. அனேக விதமான பிறவிகள் உள்ளன, அதிலும் கூட மனிதர்கள் மனிதப் பிறவியிலேயே தனது பாவம், புண்ணியத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றனர். மேலும், மிருகங்கள் தன்னுடைய பிறவிகளில் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றன. மனிதன் மிருகமாகப் பிறப்பதில்லை மற்றும் மிருகம் மனிதப் பிறவி எடுப்பதில்லை. மனிதர்கள் தன்னுடைய பிறவியிலேயே வினைப்பயன்களை அனுபவிக்க வேண்டியதாக உள்ளது, எனவே, துக்கம் சுகத்தின் உணர்வு வருகிறது. அவ்வாறே மிருகங்களும் கூட தன்னுடைய பிறவிகளில் சுகம் துக்கத்தை அனுபவிக்கின்றன. ஆனால், இந்த வினைப்பயன் எந்த செயல் செய்ததால் கிடைத்தது என்று புரிந்து கொள்ளும் புத்தி மிருகங் களுக்குக் கிடையாது. அவற்றினுடைய வினைப்பயனைக் கூட மனிதர்கள் உணர்கின்றனர். ஏனெனில், மனிதர்கள் புத்திவான்களாக உள்ளனர். மற்றபடி, மனிதர்கள் 84 இலட்ச பிறவிகளை அனுபவிக்கின்றனர் என்பது கிடையாது. ஜடமான மரங்களில் பல வகைகள் உள்ளன, ஜடமான மரம் கணக்கு வழக்கு உருவாகும் வண்ணம் அத்தகைய என்ன கர்மம், அகர்மம் செய்துள்ளது? என்பது புரிந்துகொள்வதற்கான சுலபமான விசயம் ஆகும். இறுதிக் காலத்தில் யார் தன்னுடைய புத்திரர்களை நினைத்து கவலையுடன் மரணத்தை அடைகிறார்களோ, அவர்கள் பன்றியாகப் பிறவி எடுத்து எடுத்து இறங்கி விடுவார்கள் என்ற மகாவாக்கியத்தை குருநானக் கூறியிருக்கின்றார். ஆனால், மனிதர்கள் பன்றியின் பிறவி எடுக்கிறார்கள் என்பது இந்த மகாவாக்கியத்தின் அர்த்தம் அல்ல. ஆனால், பன்றியின் பிறப்பு என்றால், மனிதர்களின் காரியம் மிருகங்களின் காரியத்தைப் போன்று உள்ளதாக அர்த்தம். மற்றபடி, மனிதர்கள் ஒன்றும் மிருகங்களாகப் பிறவி எடுப்பதில்லை. மனிதர்களை பயமுறுத்துவதற்காக இவ்வாறு போதிக்கின்றனர். எனவே, தன்னை இந்த சங்கமயுக சமயத்தில், தன்னுடைய வாழ்க்கையை மாற்றி பாவ ஆத்மாவிலிருந்து புண்ணிய ஆத்மா ஆக வேண்டும். நல்லது. ஓம்சாந்தி.

25.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! ஞானத்தின் வானம்பாடிகளாக ஆகி முழு நாளும் ஞானத்தைப் பற்றி உரையாடிக் கொண்டேயிருந்தால் லௌகீக மற்றும் பரலௌகீக தாய்-தந்தையை வெளிப்படுத்த முடியும்.

கேள்வி: தன்னைப் பற்றி சிந்தித்தால் போதை அதிகரிக்கும் என்ற பழமொழி இருக்கிறது. இதன் விளக்கம் என்ன?

பதில்: தனது சிறப்பம்சங்கள் அதாவது புத்தியோகத்தை இங்கு அங்கு என்று அலையவிடாமல் ஒரு தந்தையை நினைவு செய்ய வேண்டும். ஒரு தந்தை புத்தியில் இருந்தால் போதை அதிகரிக்கும். ஆனால் இதில் தேக அபிமானம் அதிக தடையை ஏற்படுத்துகிறது. சிறிது நோய் வந்துவிட்டால் குழப்பமடைந்து விடுகிறார்கள், உற்றார்-உறவினர்களின் நினைவு வந்துவிடுகிறது. ஆகையால் போதை அதிகரிப்பது கிடையாது. யோகாவில் இருந்தால் வலியும் குறைந்துவிடும்.

பாட்டு: நீங்கள் இரவெல்லாம் தூங்கிக் கழித்தீர்கள் ........

ஓம்சாந்தி. இந்த அனைத்து விசயங்களும் சாஸ்திரங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது. ஒருவருக்கொருவர் புரிய வைக்கவும் செய்கின்றனர். பலவிதமான வழிகளை குருக்கள் கொடுக்கின்றனர். மிக நல்ல நல்ல பக்தர்கள் சிறிய அறையில் அமர்ந்து, பசுவின் வாய் போன்ற துணிக்குள் கை வைத்து மாலையை உருட்டுகின்றனர். இதுவும் கற்றுக் கொடுக்கப்பட்ட ஃபேஷன் ஆகும். இப்பொழுது தந்தை கூறுகின்றார் - இவை அனைத்தையும் விட்டுவிடுங்கள். ஆத்மாவானது தந்தையை நினைவுச் செய்ய வேண்டும். இதில் மாலை உருட்ட வேண்டிய விசயம் கிடையாது. அனைத்தையும் விட மிக நல்ல பாட்டு சிவாய நமஹ என்பதாகும். இதில் தான் நீங்கள் தாய் தந்தை என்பதும் புரிய வைக்கப்படுகிறது. பகவானைத் தான் படைக்கும் தந்தை என்று கூறுகிறோம். படைப்பவர் என்று கூறுகிறோம் எனில் எதைப் படைக்கிறார்? புது உலகைத் தான் படைப்பார் என்பதை அவசியமாக அனைவரும் புரிந்திருப்பர். நீங்கள் தாய் தந்தை, நாங்கள் குழந்தைகளாக இருக்கிறோம் .... என்று பாடுகின்றனர் எனில் முதலில் ஈஸ்வரன் அனைவருக்கும் தந்தையாகி விடுகின்றார். தந்தை இருக்கிறார் எனில் தாயும் அவசியம் தேவை. தாயில்லாமல் படைக்க முடியாது. எப்படிப் படைக்கிறார்? என்பதை யாரும் அறியவில்லை. மற்றொன்று அனைவரும் தங்களுக்குள் சகோதரன் சகோதரிகளாக ஆகிவிடுகிறீர்கள். பிறகு விகாரப்பார்வை ஏற்பட முடியாது. ஒரு தாய் தந்தை அல்லவா! ஆக இந்தக் கருத்து புரிந்து கொள்ள மற்றும் புரிய வைப்பதற்கு மிகவும் நல்ல கருத்தாகும். மூன்றாவது, அவசியமாக தந்தை உலகைப் படைத்திருப்பார். நாம் குழந்தைகளாக இருந்தோம், இப்பொழுது மீண்டும் ஆகியிருக்கிறோம். 84 பிறவிச் சக்கரம் முடிவடைந்த பின்பு மீண்டும் இப்பொழுது தாய் தந்தை யினுடையவர்களாக ஆகியிருக்கிறோம். அவருக்குத் தான் பக்தி மார்கத்தில் புகழ் பாடப்படுகிறது. தாய் தந்தை உலகைப் படைக்கின்றனர், அவரது குழந்தைகளாக ஆகின்றோம் எனில் கண்டிப்பாக சுகமான உலகை கொடுத்திருப்பார். பரமாத்மா தாய் தந்தையாகவும் இருக்கிறார் என்பதை யாரும் அறியவில்லை, ஆசிரியராகவும் இருக்கிறார், சத்குருவாகவும் இருக்கிறார்.

நாம் பிரம்மாவின் வம்சத்தினர்கள், தங்களுக்குள் சகோதர சகோதரிகள் ஆகிறோம். பிரம்மா குமார், குமாரிகள் என்றும் கூறிக் கொள்கிறோம். இவர்களையும் படைப்பவர் அவர் ஆவார். சுகமான பூமியை அடைவதற்காக தாய் தந்தையிடமிருந்து இராஜயோகம் கற்றுக் கொண்டிருக்கிறோம். சுகமான பூமியை நாம் துக்கத்திலிருக்கும்பொழுது தான் அடைகிறோம், எதிர்காலத்தில் சுகமாக இருக்கும் பொழுது வந்து போதனைகள் கொடுப்பார் என்பது கிடையாது. எப்பொழுது நாம் துக்கத்திலிருக்கிறோமோ அப்பொழுது சுகத்தில் செல்வதற்கான போதனைகளை அடைகின்றோம். அதே தாய் தந்தை வந்து சுகம் கொடுக்கிறார்கள். ஆதாம், ஏவாள் மிகவும் பிரபலமானவர்கள். அவர்களும் கண்டிப்பாக தந்தையின் குழந்தைகள் ஆவர். பிறகு கடவுள் யார்?

தந்தை கொடுக்கும் ஞானம் அனைத்து தர்மத்தினருக்கானது என்பதைக் குழந்தைகள் அறிவீர்கள். முழு உலகத்தில் உள்ளவர்களின் புத்தியோகமும் அவரிடமிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. மாயை என்ற பேய் புத்தியோகத்தை ஏற்படுத்த விடுவது கிடையாது, மேலும் புத்தியோகத்தை துண்டிக்கிறது. தந்தை வந்து பேயின் மீது வெற்றியடையச் செய்கின்றார். இன்றைய நாட்களில் மாயாஜாலம் செய்பவர்களும் பலர் இருக்கின்றனர். இது பேய்களின்

உலகமாகும். காம விகாரம் என்ற பேய் ஒருவரையொருவர் முதல், இடை, கடை துக்கம் கொடுக்கிறது. ஒருவருக்கொருவர் துக்கம் கொடுப்பது பேயின் வேலையாகும். சத்யுகத்தில் பேய் இருக்காது. பேய் என்ற பெயர் பைபிளில் இருக்கிறது என்பதும் புரிய வைக்கப்பட்டிருக்கிறது. இராவணன் என்றால் பேய், இது பேயின் இராஜ்யமாகும். சத்யுகத்தில் இராம இராஜ்யத்தில் பேய்கள் இருக்காது. அங்கு சுகமான பூமியாக இருக்கும்.

ஓம் நமச் சிவாய என்ற பாடல் மிக நன்றாக இருக்கிறது. சிவன் தாய் தந்தையாக இருக்கிறார். பிரம்மா, விஷ்ணு, சங்கரை தாய் தந்தை என்று கூறுவது கிடையாது. சிவனைத் தான் தந்தை என்று கூறுகிறோம். ஆதாம், ஏவாள் என்றால் பிரம்மா, சரஸ்வதி இங்கு இருக்கின்றனர். அங்கு கிறிஸ்தவர்கள் இறை தந்தையிடம் பிரார்த்தனை செய்கின்றனர். இந்த பாரதம் தாய் தந்தையின் ஊராகும். அவரது பிறப்பு இங்கு தான் ஏற்படுகிறது. நீங்கள் தான் தாய் தந்தை என்று பாடுகிறீர்கள் எனில் தங்களுக்குள் சகோதரன் சகோதரிகளாக ஆகிவிடுகிறீர்கள் அல்லவா என்று புரிய வைக்க வேண்டும். பிரஜாபிதா பிரம்மாவின் மூலம் பிரஜைகளை படைக்கின்றார். அவர் தத்தெடுக்கின்றார். சரஸ்வதியும் தத்தெடுக்கப்படுகிறார். பிரஜாபிதா பிரம்மா தத்தெடுக்கின்றார். அதனால் தான் இவ்வளவு பிரம்மா குமார், குமாரிகள் உருவாகியிருக்கின்றனர். சிவபாபா தத்தெடுக்க வைக்கின்றார். புது உலகம் பிரம்மாவின் மூலம் உருவாக்கப்படுகிறது. புரிய வைப்பதற்கு பல யுக்திகள் உள்ளன. ஆனால் முழுமையாகப் புரிய வைப்பது கிடையாது. பாபா பலமுறை புரிய வைத்திருக்கின்றார் - இந்த சிவாய நமஹ என்ற பாட்டு பல இடங்களில் ஒலிபரப்புங்கள். நாம் தாய் தந்தையின் குழந்தைகளாக ஆகியிருப்பது எப்படி? என்பதை அவர் அமர்ந்துப் புரிய வைக்கின்றார். பிரம்மாவின் மூலம் புது உலகை ஸ்தாபனைச் செய்திருந்தார். இப்பொழுது கலியுகத்தின் இறுதியாகும். மீண்டும் சத்யுகம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. புத்தியில் தாரணைச் செய்ய வேண்டும். ஞானம் மிகவும் எளியது ஆகும். மாயையின் புயல் ஞான யோகத்தில் நிலைத்திருக்க விடுவது கிடையாது. புத்தி மயக்கத்தில் வந்து விடுகிறது. படைப்பவர் பகவான் அனைவருக்கும் ஒரே ஒருவர் தான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள், அனைவரும் தந்தை என்று கூறுவார்கள் அல்லவா! அவர் நிராகாரமானவர் பிறப்பு இறப்பில் வராதவர். பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கு சூட்சும சரீரம் இருக்கிறது. மனிதர்கள் 84 பிறவிகள் இங்கேயே எடுக்கின்றனர், சூட்சும வதனத்தில் எடுப்பது கிடையாது. தாய் தந்தையின் குழந்தைகள் நாம் என்பதை நீங்கள் அறிவீர்கள். நாம் புதுக் குழந்தைகள். தந்தை தத்தெடுத்திருக்கின்றார். பிரஜாபிதா பிரம்மா இருக்கின்றார் எனில் எத்தனை பிரஜைகள் இருப்பர்? அவசியம் தத்தெடுத்திருக்க வேண்டும். பிரம்மாவிற்கு பல புஜங்களைக் காண்பிக்கின்றனர், எந்த பொருளையும் புரிந்துக் கொள்வது கிடையாது. சித்திரங்கள் என்னவெல்லாம் உருவாக்கப்பட்டிருக்கிறதோ அதாவது சாஸ்திரங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறதோ இவையனைத்தும் நாடகத்தின் மீது ஆதாரமாக வைக்க வேண்டியிருக்கிறது. பிரம்மாவின் பகலாக இருந்தது, பிறகு பக்தி மார்க்கம் ஆரம்பமானது, அது நடைபெற்று வந்து கொண்டிருக்கிறது. இந்த இராஜயோகத்தை தந்தை வந்து தான் கற்றுக் கொடுக்கின்றார். இதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தன்னைப் பற்றி சிந்தித்தால் போதை அதிகரிக்கும் என்று கூறுகின்றனர்

அல்லவா! ஆனால் புத்தியோகம் தந்தையிடம் இருக்க வேண்டும். இங்கு பலரது புத்தியோகம் அலைந்துக் கொண்டேயிருக்கிறது. பழைய உலகின் உற்றார்-உறவினர்கள் போன்றவைகளின் பக்கம் அல்லது தேக அபிமானத்தில் மாட்டியிருக்கிறது. சிறிது வியாதி வந்து விட்டால் குழப்பமடைந்து விடுகின்றனர். அட, யோகாவில் இருந்தால் வலியும் குறைந்து விடும். யோகா இல்லையெனில் வியாதி எப்படி நீங்கும்? நம்பர் ஒன் பாவனமாகும் தாய், தந்தை தான் பிறகு அனைவரையும் விட கீழே இறங்குகின்றனர் என்று சிந்திக்க வேண்டும். அவர்கள் அதிகக் கணக்குகளை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆனால் யோகாவில் இருக்கின்ற காரணத்தினால் வியாதிகள் நீங்கிக் கொண்டே செல்கின்றன. இல்லையெனில் இவர் தான் அனைவரையும் விட அதிகம் அனுபவிக்க வேண்டும். ஆனால் யோகா பலத்தினால் துக்கம் தூரமாகி விடுகிறது, மேலும் அதிகக் குஷியில் இருக்கின்றார் - பாபாவிடமிருந்து நான் சொர்க்கத்தின் சுகத்தை அடையப் போகிறேன். பல குழந்தைகள் தங்களை ஆத்மா என்று புரிந்துக் கொள்வதே கிடையாது. முழு நாளும் தேகத்தின் நினைவு தான் இருக்கிறது.

பாபா வந்து ஞானத்தைப் பற்றிய உரையாடலைக் கற்றுக் கொடுக்கின்றார். ஆக நீங்கள் ஞானத்தின் வானம்பாடிகளாக ஆக வேண்டும். வெளியில் பல நல்ல நல்ல சிறிய சகோதரிகள் இருக்கின்றனர், ஞானத்தைஓதுகின்றனர். பீஷ்மபிதாமகர் போன்றவர்களுக்கும் கூட குமாரிகளின் மூலம் ஞானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சிறு சிறு குழந்தைகளை சேவையில் நிலை நிறுத்த வேண்டும். சிறிய குழந்தைகள் லௌகீக- பரலௌகீக தாய் தந்தையை வெளிப்படுத்துகின்றனர். லோகம், பரலோகம் இன்பம் தரக்கூடியதாக இருக்கும் அல்லவா! ஆக லௌகீக தாய் தந்தையையும் கூட எழுப்ப வேண்டும். சின்னஞ்சிறு சகோதரிகளும் தாய் தந்தையை எழுப்புவதை நீங்கள் பார்ப்பீர்கள். குமாரிகளுக்கு மரியாதை ஏற்படும். குமாரிகளை அனைவரும் நமஸ்கரிக்கின்றனர். சிவசக்தி சேனையில் அனைவரும் குமாரிகள் ஆவார். தாய்மார்களும் இருக்கின்றனர், ஆனால் அவர்களும் குமாரிகள் என்று கூறப்படுகின்றனர் அல்லவா! நல்ல நல்ல குமாரிகள் வெளிப்படுவர். சிறு சிறு சகோதரிகள் தான் மிகப் பெரிதாக வெளிப்படுத்துவார்கள். சில சிறிய சகோதரிகள் மிகவும் நன்றாக இருக்கின்றனர். ஆனால் சிலரிடத்தில் மோகமும் அதிகமாக இருக்கின்றன அல்லவா! இந்த மோகம் மிகவும் கொடியது. இதுவும் ஒரு பூதமாகும். தந்தையிடமிருந்து முகத்தைத் திருப்பி விடுகிறது. மாயை என்ற பேயின் வேலையே பரம்பிதா பரமாத்மாவிடமிருந்து முகத்தைத் திருப்புவதாகும்.

ஓம் நமச் சிவாய என்ற பாட்டு அனைத்தையும் விட நன்றாக இருக்கிறது. இதிலிருந்து தான் நீ தாய் தந்தையாக ...... என்ற வார்த்தை கிடைக்கிறது. இராதை கிருஷ்ணர் கோயிலில் ஜோடியாகத் தான் காண்பிக்கின்றனர். கீதையில் கிருஷ்ணருடன் இராதையின் பெயர் கிடையாது. கிருஷ்ணரின் மகிமை தனிப் பட்டது - சர்வகுண சம்பன்ன, 16 கலைகள் நிறைந்தவர் ..... சிவனின் மகிமை தனிப்பட்டது. சிவனுக்கு ஆரத்தி எடுக்கின்ற பொழுது எவ்வளவு மகிமைப் பாடுகின்றனர்! எந்தப் பொருளையும் புரிந்துக் கொள்வது கிடையாது. பூஜை செய்து செய்து களைப்படைந்து விட்டனர். மம்மா, பாபா மற்றும் பிராமணர்களாகிய நாம் அனைவரையும் விட அதிகமாக பூஜாரிகளாக

ஆகியிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது மீண்டும் வந்து பிராமணர்களாக ஆகியிருக்கிறோம். அதிலும் வரிசைக்கிரமம் இருக்கிறது. கர்மக் கணக்கும் இருக்கிறது, அதை யோகாவின் மூலம் அழிக்க வேண்டும். தேக அபிமானத்தை நீக்க வேண்டும். தந்தையை நினைவு செய்து அதிகக் குஷியில் இருக்க வேண்டும். தாய், தந்தையிடமிருந்து நமக்கு அதிக சுகம் கிடைக்கிறது. பாபாவிடமிருந்து நமக்கு ஆஸ்தி கிடைக்கிறது, பாபா எனது இரதத்தை எடுத்திருக்கிறார் என்று இந்த பிரம்மாவும் கூறுவார் அல்லவா! இப்பொழுது பாபா இந்த இரதத்தைக் கவனிப்பார். ஆத்மாவாகிய நான் இந்த இரதத்திற்கு உணவளிக்கிறேன் என்று முன்பு புரிந்திருந்தார். இதுவும் இரதம் அல்லவா! இதற்கும் உணவளிப்பவர் அவர் தான் என்று இப்பொழுது கூறுவார். இந்த இரதத்தை பராமரிக்க செய்ய வேண்டும். குதிரையில் எஜமானர்கள் ஏறுகின்ற பொழுது குதிரைக்குக் கையினால் உணவளிப்பர், சில நேரங்களில் குதிரையைத் தட்டிக் கொடுப்பர். அதிகம் கவனிப்பர். ஏனெனில் அதன் மீது சவாரி செய்கின்றனர். பாபா இதில் சவாரி செய்கின்றார் எனில் பாபா கவனிக்க மாட்டாரா என்ன? பாபா குளிக்கின்ற பொழுது நானும் குளிக்கிறேன், பாபாவையும் குளிப்பாட்ட வேண்டும் என்று நினைப்பார். ஏனெனில் அவர் இந்த இரதத்தை லோனாக எடுத்திருக்கின்றார். நானும் உனது சரீரத்தை குளிப்பாட்டுகிறேன், உணவளிக்கிறேன் என்று சிவபாபாவும் கூறுகின்றார். நான் சாப்பிடுவது கிடையாது, சரீரத்திற்கு உணவளிக்கிறேன். பாபா உணவளிக்கிறாரே தவிர சாப்பிடுவது கிடையாது. இவ்வாறு ஒவ்வொரு அடியிலும் எண்ணங்கள் ஓடிக் கொண்டே இருக்கிறது - குளிக்கும் நேரத்தில், வெளியில் செல்லும் நேரத்தில். இது அனுபவ விசயம் அல்லவா! பாபா தானே கூறுகின்றார் - பல பிறவிகளின் கடைசிப் பிறவியில் பிரவேசிக்கிறேன். இவர் தனது பிறப்புகளைப் பற்றி அறியவில்லை, நான் அறிவேன். பாபா மீண்டும் நமக்கு ஞானம் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். சொர்க்கத்தின் ஆஸ்தி அடைய வேண்டும். சத்யுகத்தில் இராஜா, பிரஜை அனைவரும் இருப்பர். தந்தையிடமிருந்து முழு ஆஸ்தி அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது அடையவில்லையெனில் பிறகு கல்ப கல்பத்திற்கும் இழந்து விடுவீர்கள், அந்த அளவிற்கு உயர்ந்த பதவி அடைய முடியாது. ஜென்ம ஜென்மங்களுக்கான பிராப்தி எனும் பொழுது ஸ்ரீமத் படி எவ்வளவு நடக்க வேண்டும்! கல்ப கல்பத்திற்கும் நிமித்தம் ஆவீர்கள். கல்ப கல்பத்திற்கு ஆஸ்தி அடைந்து வந்தீர்கள். கல்ப கல்பத்திற்கான படிப்பு இதுவாகும். இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். 7 நாட்களில் இலட்சியம் அடைந்து பிறகு முரளியை வீட்டிலும் படிக்க முடியும். முற்றிலும் எளிதாக்கி விடுகின்றார். நாடகம் புத்தியில் இருக்க வேண்டும் அல்லவா!

இது உலக பல்கலைக்கழகம் என்று கூறப்படுகிறது. ஆக அமெரிக்கா போன்று எங்கு வேண்டுமென்றாலும் செல்லுங்கள், தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைய முடியும். ஒருவாரம் தாரணை செய்து விட்டு சென்றாலும் போதும். பகவானின் குழந்தைகள் எனில் சகோதரன், சகோதரிகளாக ஆகிவிடுகிறீர்கள் அல்லவா! பிரஜாபிதா பிரம்மா இருக்கிறார் எனில் அவரது அனைத்துக் குழந்தைகளும் சகோதரன் சகோதரிகள் ஆகிவிடுகின்றனர். இல்லறத்தில் இருந்தாலும் அவசியம் தங்களுக்குள் சகோதரன் சகோதரிகளாக இருந்தால் தூய்மையாக இருக்க முடியும். மிகவும் எளிது அல்லவா! நல்லது.

இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாய் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தன்னை மாயை என்ற பேயிடமிருந்து (கோஸ்ட்) காப்பாற்றிக் கொள்ள ஞான, யோகத்தில் தயாராக இருக்க வேண்டும். மோகம் என்ற பூதத்தைத் தியாகம் செய்து தந்தையை வெளிப்படுத்த வேண்டும். ஞானத்தைப் பற்றி உரையாட வேண்டும்.

2) படிப்பில் முழு கவனம் கொடுத்து தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைய வேண்டும். கல்ப கல்பத்திற்கான இந்த வாய்ப்பை எந்த சூழ்நிலையிலும் விட்டு விடக் கூடாது

வரதானம்: நேரத்தின் அனுசாரம் ரூப்பசந்த் அதாவது ஞானி மற்றும் யோகம் நிறைந்த ஆத்மாவாக ஆகக்கூடிய சுயத்தை ஆளுபவர் ஆகுக.

யார் தன்னை ஆளக்கூடியவர்களாக இருக்கின்றார்களோ, அவர்கள் எந்த சமயம் விரும்புகின்றார்களோ அப்பொழுது ஞானம் நிறைந்தவராக (ரூப்) ஆகிவிடுவார்கள், மேலும், எந்த சமயம் விரும்புகின்றார்களோ யோகம் நிறைந்தவராக (பசந்த்) ஆகிவிடுவார்கள். இரண்டு ஸ்திதிகளையும் ஒரு நொடியில் உருவாக்க முடியும். ஆகவிரும்புவதோ ரூப் ஆக, ஆனால், நினைவு வந்துகொண்டிருப்பதோ ஞானத்தைப் பற்றிய விசயங்கள் என்று அவ்வாறு இருக்கமாட்டார்கள். ஒரு நொடியை விடவும் குறைவான நேரத்தில் முற்றுப்புள்ளி வைத்துவிடுவார்கள். சக்திவாய்ந்த பிரேக்கிற்கான வேலை எங்கே நிறுத்துகின்றோமோ, அங்கே நின்றுவிடும். இதற்காக எந்த சமயம், எந்த விதியினால் எங்கே மனம், புத்தியை ஈடுபடுத்த விரும்புகின்றீர்களோ, அங்கே ஈடுபட்டிருப்பதற்கான பயிற்சி செய்யுங்கள். அவ்வாறே கண்ட்ரோலிங் பவர் மற்றும் ரூலிங் பவர் இருக்க வேண்டும்.

சுலோகன்: யார் புயலை உருவாக்கக் கூடியவர்களுக்குக் கூட அமைதியின் பரிசு வழங்குகின்றார்களோ, அவர்கள் தான் அமைதிதூதுவர் ஆவார்

மாதேஸ்வரி அவர்ககளின் இனிமையான மகா வாக்கியங்கள்

மனித ஆத்மாக்கள் பரமாத்மாவிடம் கேட்பதும், பிராப்தியும்

தாயும் நீயே, தந்தையும் நீயே, நாங்கள் உங்களுடைய குழந்தைகள், உங்களுடைய கிருபையால் அளவற்ற சுகம்... இந்த மகிமைகள் யாருக்காக பாடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக பரமாத்மாவிற்காக பாடப்பட்டிருக்கிறது. ஏனென்றால் பரமாத்மா தானே தாய், தந்தை ரூபத்தில் வந்து இந்த சிருஷ்டிக்கு அளவற்ற சுகத்தைக் கொடுக்கிறார். நிச்சயமாக பரமாத்மா எப்போதோ சுகம் நிறைந்த சிருஷ்டியை உருவாக்கியிருக்கிறார். அதனால் தான் தாய், தந்தை என்று கூறி அழைக்கிறார்கள். ஆனால், மனிதர்களுக்கு சுகம் என்றால் என்னவென்று தெரியவில்லை. இந்த சிருஷ்டியில் அளவற்ற சுகம் இருந்த

போது சிருஷ்டியில் அமைதியும் இருந்தது. ஆனால் இப்போது அந்த சுகம் இல்லை. இப்போது மனிதர்களுக்கு அந்த சுகம் எங்களுக்கு வேண்டும் என்ற விருப்பம் எழுவது நிச்சயம். பிறகு சிலர் பணம், பொருட்களைக் கேட்கிறார்கள், சிலர் குழந்தை வேண்டும் எனக் கேட்கிறார்கள். இன்னும் ஒரு சிலரோ பதிவிரதை ஆக வேண்டும், சதா சுமங்கலி ஆக வேண்டும் எனக் கேட்கிறார்கள். ஆசையோ சுகத்தைப் பற்றிதான் இருக்கிறது அல்லவா! எனவே, பரமாத்மாவும் ஏதோ ஒரு நேரத்தில் அவர்களின் விருப்பத்தை நிச்சயம் நிறைவேற்றுவார். எனவே, சத்யுகத்தில் சிருஷ்டி சொர்க்கமாக இருந்த போது சதா சுகம் இருக்கிறது. அங்கே ஒரு போதும் பெண்கள் விதவை ஆவதில்லை. எனவே, அந்த ஆசை சத்யுகத்தில் நிறைவேறுகிறது. அங்கே அளவற்ற சுகம் இருக்கிறது. மற்றபடி இச்சமயமோ கலியுகம் தான். இச்சமயத்தில் மனிதர்கள் துக்கத்தையே அனுபவிக்கிறார்கள். நல்லது.

26.11.2023 காலை முரளி ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா

ரிவைஸ் 31.12.1996 மதுபன்

புதிய வருடத்தில் அனுபவம் நிறைந்தவராகி அனைவரையும் அனுபவிகளாக ஆக்குங்கள்

இன்று பார்வையாலேயே நன்மை செய்யும் பாப்தாதா தனது அனைத்து மிக அன்பிற்குரிய சகயோகி, அன்பில் ஐக்கியமாகியிருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில், இதயத்தில், அன்பின் நிரூபணம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது (ஹா-ல் பின்னால் அமர்ந்திருக்கும் சகோதர, சகோதரிகளிடம்) நாங்களோ பின்னால் அமர்ந்திருப்பவர்கள் என்றால் தென்பட மாட்டோம் என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் பாப்தாதாவின் கண்களில் தூரத்தி-ருக்கும் ஒவ்வொன்றும் எதிரில் தென்படும் அளவிற்கு அந்த மாதிரியான புதுமையான டி.வி இருக்கிறது. எங்காவது ஏதாவது மூலையில் அமர்ந்திருந்தால் கூட பாப்தாதாவின் எதிரில் இருக்கிறீர்கள். இருந்தாலும் இப்பொழுதோ சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள் தான் இல்லையா (கை தட்டினார்கள்) இன்று மிகுந்த ஊக்கம் உற்சாகம் மற்றும் குஷி இருக்கிறது தான் இல்லையா, அது கை தட்டல் மூலம் தென்படுகிறது ஆனால் பாப்தாதா உங்களுடைய இதயத்தின் குஷியைத் தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் சகயோகத்தின் நிரூபணம் கொடுப்பதில் மிகுந்த குஷி ஏற்படுகிறது என்று பாப்தாதா பார்க்கிறார். எனவே ஆயிரம் புஜங்கள் உடையவராகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படி புஜங்கள் சகயோகத்தின் அடையாளம் ஆகும். ஒவ்வொரு குழந்தையும் நாலாபுறங்களிலும் பாரத தேசத்திலும், வெளிநாட்டிலும் உடலால், மனதால், பொருளால் அனைவரும் அவசியம் சகயோகம் கொடுத்திருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார், மேலும் உங்கள் அனைவரின் சகயோகத்தின் விளைவாக இன்று நீங்கள் அனைவரும் சௌகரியமாக பார்த்துக் கொண்டும் இருக்கிறீர்கள், கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். இப்பொழுது கை தட்டுவதை அதிகமாகச் செய்யாதீர்கள். உங்களுடைய குஷியின் மனதின் கை தட்டல் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது.

பாருங்கள். இன்று இரண்டு விசேஷங்கள். ஒன்று இந்த சாந்திவனத்தில் நீங்கள் அனைவரும் மிகுந்த ஊக்கம், உற்சாகத்துடன் எதைக் கட்டியிருக்கிறீர்கள் அதனுடைய திறப்பு விழாவை பாப்தாதாவிடன் சேர்ந்து குழந்தைகள் நீங்களும் செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் இன்று நாடகப்படி புது வருடமும் தொடங்கத்தான் போகிறது. எனவே அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா தனது இரு கரங்களையும் விரித்து இரண்டு விசயங்களுக்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். மேலும் எப்படி இந்த நேரம் இப்பொழுது சாகார ரூபத்தில் தந்தையிடம் சேர்ந்து ஊக்கம் உற்சாகம் மற்றும் குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். அதே போலவே புதிய வருடத்தில் எப்பொழுதும் நிரந்தரமாக அவ்யக்த ரூபத்தில் துணைவன் என்று புரிந்து அனுபவம் செய்ய வேண்டும் இந்த துணையின் அனுபவம் மிகப்பிரியமானது. பாப்தாதாவிற்கும் குழந்தைகள் இல்லாமல் நன்றாக இருப்பதில்லை ( மைக் வேலை செய்யவில்லை) முதல் முதல் அனுபவம் தான் இல்லையா. எனவே இதுவும் நாடகத்தின் காட்சி என்று புரிந்து கொள்ளுங்கள். எந்த விசயத்திலும் மேலே கீழே செல்லாதீர்கள். நல்லது தான். மேலும் நல்லதாகவே இருக்கும். மிக நல்லது, மிக நல்லது என்று கூறி நீங்களும் நல்லவர்கள் ஆகி விடுவீர்கள். மேலும் நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் நல்லதாகி விடும். ஏனென்றால் உங்களுடைய நல்லதாவதின் எண்ண அலைகள் எந்த மாதிரியான காட்சியாக இருந்தாலும் எதிர்மறையை நேர்மறையில் மாற்றி விடும். இந்த அளவு சக்தி குழந்தைகள் உங்களிடம் இருக்கிறது. அதை உபயோகிக்க மட்டும் செய்யுங்கள். சக்திகள் மிக அதிகமாக இருக்கிறது, தேவையான நேரத்தில் உபயோகம் செய்து பார்த்தீர்கள் என்றால் மிக நல்ல நல்ல அனுபவம் செய்வீர்கள்.

இது புதிய ஹால் மேலும் புதிய வருடம் என்றால் இதில் என்ன செய்வீர்கள்? புதிய வருடத்தில் ஏதாவது புதுமை செய்வீர்கள் இல்லையா? அப்படி இந்த வருடம் அனுபவம் நிறைந்தவர் ஆகி மற்றவர்களுக்கும் அனுபவம் செய்விப்பதற்கான வருடம் ஆகும். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று? அனுபவம் செய்ய வேண்டும். வாய்மொழி மூலமாக வர்ணனையோ செய்யவே செய்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு சக்தியின் ஒவ்வொரு குணத்தின் அனுபவம் செய்ய வேண்டும். நீங்கள் அனுபவி மூர்த்தி தான் இல்லையா? அனுபவியாக இருந்த போதிலும் ஆனால் இந்த வருடத்தில் எந்தவொரு குழந்தையும் எனக்கு இந்த விசயங்களின் அனுபவமோ இருக்கிறது, ஆனால் இந்த விசயத்தின் அனுபவம் மிகக் குறைவு என்று கூறக்கூடாது. அந்த மாதிரி எந்தக் குழந்தையும் இருக்கக் கூடாது. ஏனென்றால் ஞானத்தின் அர்த்தமே புரிந்து கொள்வது மட்டுமல்ல ஆனால் அனுபவம் செய்வது. மேலும் எதுவரை அனுபவம் செய்யவில்லை என்றால் மற்றவர்களையும் அனுபவியாக ஆக்க முடியாது. ஒருவேளை வார்த்தை அளவில் இருக்கிறது. அனுபவம் வரை இல்லை என்றால் எந்த ஆத்மாக்களின் சேவைக்கான பொறுப்பாளர் ஆகிறீர்களோ அவர்களும் வார்த்தை மூலமாக மிக நன்றாக இருக்கிறது. மிக நன்றாக இருக்கிறது அதிசயமாக இருக்கிறது என்று இதுவரை வருகிறார்கள். அனுபவியாக ஆகி விடுவது. இது கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலராக இருக்கிறார்கள். மேலும் பிரத்யக்ஷத்தின் ஆதாரம் அனுபவம் ஆகும். அனுபவம் நிறைந்த ஆத்மாக்கள் ஒருபொழுதும் வாயுமண்டலம் மற்றும் எவருடைய தொடர்பின் பாதிப்பிலும் வர முடியாது. வார்த்தைகளின் பிரபாவத்தில் மட்டும் வருபவர்கள் சில நேரம் நடனமாடுவார்கள். மேலும் சில நேரம் யோசிப்பார்கள்.

அனுபவம் என்றால் உறுதியான அஸ்திவாரம். பாதி அனுபவம் இருக்கிறது என்றால் பாதி அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறது. அதன் அடையாளமானது அவர் சிறிய பெரிய விசயங்களில் ஆடுவார் உறுதியாக இருக்க மாட்டார். ஏனென்றால் வரும் விசயங்கள் மற்றும் பிரச்சனைகள் பலம் நிறைந்ததாகி விடுகிறது. எனவே, அரைகுறை அஸ்திவாரம் உள்ளவர்கள் ஆடுவார்கள், விழ மாட்டார்கள் ஆனால் ஆட்டம் காண்பார்கள். எனவே முத-ல் இந்த வருடத்தில் தன்னுடைய அனுபவம் நிறைந்தவர் என்ற அஸ்திவாரத்தை உறுதியாக்குங்கள். அனேக குழந்தைகள் இன்று வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் மற்றும் நாளை முகம் கொஞ்சம் மாறியதாக இருக்கிறது, இதற்கான காரணம் என்ன? அனுபவத்தின் அஸ்திவாரம் உறுதியாக இல்லை. அனுபவம் நிறைந்த ஆத்மாக்கள் எவ்வளவு பெரிய பிரச்சனையானாலும் அது ஒன்றுமே இல்லை என்ற மாதிரி அதற்கான தீர்வு காண்பார்கள். வந்தது மேலும் சாட்சியாகி தன்னுடைய பங்கை செய்தார், விலகியவராக மற்றும் அன்பானவர்களாகி விளையாட்டுக்குச் சமமாக பார்ப்பார்கள். விசயமல்ல ஆனால் விளையாட்டு, பொழுதுபோக்கு. பொழுதுபோக்கு பிடிக்கும் இல்லையா? அப்படி எந்த விசயமாக இருந்தாலும் அப்பொழுது அந்த விசயம் பெரியதாக அனுபவம் ஆகிறது. 75 சதவிகிதம் உறுதியானாலும், 90 சதவிகிதம் உறுதியானாலும் கூட ஆடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பாப்தாதாவிற்கு குழந்தைகளின் கடின உழைப்பு அதாவது யுத்தம் செய்வது பிடிப்பதில்லை. ஏன் கஷ்டப்பட வேண்டும்? ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? யோகிக்கு பதிலாக யுத்தம் செய்பவராக ஆகப் போகிறவர்களா நீங்கள் அல்லது யோகி ஆத்மாக்களா? யுத்தம் செய்யக்கூடிய சம்ஸ்காரம் சந்திரவம்சத்தில் எடுத்துச் சென்று விடும் ஆனால் யோகி ஆத்மாவின் சம்ஸ்காரம் சூரியவம்சத்தில் கொண்டு செல்லும். அப்படியானால் என்ன ஆக வேண்டும்? சூரிய வம்சியாக ஆக வேண்டுமா அல்லது சந்திர வம்சியாக ஆக வேண்டுமா? சூரியவம்சி ஆக வேண்டும் என்றால் யுத்தம் முடிவடைந்து விட வேண்டும். இந்த வருடத்தின் யுத்தம் செய்வது முடிவடைந்து விட்டதா? இந்த விசயத்தில் ஆம் அல்லது இல்லை என்று கூறுவதில்லை. சொல்வதினால் கூறுகிறீர்களா? பாப்தாதாவோ பார்க்காவிட்டாலும் கூட குழந்தைகளின் ரிசல்ட்டைப் பார்த்து விடுகிறார், ஒவ்வொரு நேரத்தின் ரிசல்ட் கண்களின் எதிரில் அல்ல ஆனால் இதயத்தில் வந்தே விடுகிறது. இங்கு சாகார உலகத்தில் நீங்கள் எப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் அல்லது அதிகமாக ஆடுகிறீர்கள் என்றால் அங்கே வதனத்தில் தந்தைக்கு யாரோ ஆடுகிறார்கள் என்று அனுபவம் ஆகிறது. எனவே எப்படி சாந்திவனத்தில் குஷி இந்த ஹா-ல் குஷி இருக்கிறதோ அதே போல் பாப்தாதா மற்றும் இவ்வளவு பெரிய சபையின் நடுவில் இந்த வருடத்தில் குழப்பத்தி-ருந்து விலகி ஆடாத அசையாதவராக ஆகவே தான் வேண்டும். ஆவோம் என்றல்ல ஆகியே தீருவோம் என்ற உறுதிமொழியை எடுங்கள். அந்த மாதிரி எடுப்பீர்களா? அந்த மாதிரி யோசிப்போம் செய்வோம். பார்ப்போம் என்றில்லாமல் ஆகத்தான் வேண்டும் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. வாழ்த்துக்கள். மேலும் யார் ஏதாவது காரணத்தினால் கையை உயர்த்தவில்லையோ, ஆகவே முடியாது என்று அப்படி இருக்கவே முடியாது. ஆனாலும் ஏதாவது காரணத்தினால் கையை உயர்த்தவில்லை என்றால் அவர்கள் எழுந்திருங்கள். வெட்கம் வருகிறதா கையை உயர்த்துவதற்கு? அப்படியானால் எப்பொழுது கையை உயர்த்துவதில் வெட்கம் வருகிறது என்றால் செய்யும் நேரத்திலும் வெட்கப்பட வேண்டும் என்று யோசியுங்கள். இது

வெட்கப்படுவதற்கான விசயம் என்று நினைத்தீர்கள் என்றால் அது மீண்டும் நடக்காது. உறுதியானவர் ஆகி பொறுப்பி-ருக்கும் குழந்தைகளிடம் அல்லது ஆன்மீக உரையாட-ல் அடிக்கடி பாப்தாதாவிடம் பாபா வினாசத்தின் தேதியைக் கூறுங்கள் என்ற ஒரே கேள்வியைத் தான் கேட்கிறார்கள். அனைவரின் கேள்விதான் இல்லையா? நல்லது பாப்தாதாவும் இரண்டாயிரம் ஆண்டில் முடிவடைந்து விடும் என்று கூறினால் கூட என்ன செய்வீர்கள். இது தேதி ஒன்றையும் தரவில்லை தவறாகப் புரிந்து கெள்ள வேண்டாம். பாப்தாதா உங்களிடம் கேட்கிறார் உதாரணமாக இரண்டாயிரம் ஆண்டு வரை முடிந்து விடும் என்று கூறினால் என்ன செய்வீர்கள்? அலட்சியமானவராக ஆவீர்களா? அல்லது தீவிரமாக முயற்சி செய்பவராக ஆவீர்களா? தீவிரமான முயற்சியாளர் ஆவீர்கள். மேலும் இந்த வருடத்தில் வினாஷத்தின் குழப்பம் ஏற்பட்டது என்றால் என்ன செய்வீர்கள் என்று பாப்தாதா கேட்கிறார். இன்றும் தீவிர முயற்சி செய்வீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் தேதியின் உணர்விலேயே இருப்பீர்களா? அல்லது ஆத்ம உணர்வில் இருப்பீர்களா? என்ன செய்வீர்கள்? அலட்சியமானவராக ஆக மாட்டீர்களா? இன்னும் நான்கு வருடங்கள் இருக்கின்றன என்று அப்படி நினைக்க மாட்டீர்களா? என்ன ஆகி விட்டது கடைசி வருடத்தில் செய்து விடுவோம் என்று அந்த மாதிரி அலட்சியமானவராக ஆக மாட்டீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் ஆகி விடுவீர்களா? நீங்கள் ஆகா விட்டாலும் கூட மாயா கேட்டுக் கொண்டிருக்கிறது, மேலும் அது அந்த மாதிரியான விசயங்களை உங்கள் எதிரில் கொண்டு வரும் அதனால் அலட்சியம் சோம்பல் இடையிடையே வரும். பின்பு என்ன செய்வீர்கள்? எனவே தேதியின் உணர்வுள்ளவர்களாக ஆகாதீர்கள் ஆனால் ஒவ்வொரு நேரமும் கடைசி நேரம், அந்த அளவு ஒவ்வொரு நேரமும் எவரெடியாக இருங்கள் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். நல்லது உதாரணமாக இரண்டாயிரமாவது வருடத்திற்குப் பிறகு நடக்கும் என்று பாப்தாதா கூறுகிறார் அதை நீங்களும் நம்பிவிட்டீர்கள். உண்மை அல்ல. ஆனாலும் நம்பிவிட்டீர்கள் என்றால் நீங்கள் இரண்டாயிரமாவது ஆண்டில் சம்பூர்ணம் ஆவீர்களா? மேலும் மற்றவர்களை எப்பொழுது ஆக்குவீர்கள்? சத்யுகத்தில் ஆக்குவீர்களா என்ன? ஆக்குபவர்கள் மிகக் குறைவானவர்கள் மேலும் ஆகுபவர்கள் மிக அதிகமானவர்கள் என்றால் அவர்களுக்காக நேரம் வேண்டுமா இல்லையா? சென்ற சீசனிலும் குறைந்தது சத்யுகத்தின் தொடக்கத்தில் உள்ள 9 லட்சம் டேர்கள் உருவாகியிருக்கிறார்களா என்று கேட்டிருந்தோம். ஆகவில்லை என்றால் வினாஷம் எப்படி நடக்கும்? யார் மேல் இராஜ்யம் செய்வீர்கள்? பழைய ஆத்மாக்கள் மேல் ராஜ்யம் செய்வீர்களா? புதிய ஆத்மாக்களோ தயாராகவில்லை மேலும் வினாஷம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வீர்கள்? எனவே பாப்தாதா இந்த காரியத்தை தன்னுடைய குழந்தைகளிடம் யார் ஜோஷியர்களாக இருக்கிறார்களோ அவர்களிடமே பொறுப்பைக் கொடுத்தோம். ஜோதிடர் என்ன காரியம் செய்ய முடியுமோ அதை தந்தை ஏன் செய்ய வேண்டும்? இருந்தாலும் அவர்களும் தந்தையின் குழந்தைகளே அவர்களையும் சம்பாதிக்க விடுங்கள். அவர்களுடைய சம்பாத்தியத்தின் சாதனமே இது தான். ஒருவேளை யாருக்காவது மிக அவசரமாக இருக்கிறது என்றால் அந்தக் குழந்தைகளிடம் (ஜோதிடர்களிடம்) கேளுங்கள். தந்தை கூற மாட்டார்.

இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? அனுபவம் நிறைந்தவர் ஆக வேண்டும். அனேக குழந்தைகள் ஆன்மீக உரையாட-ல்

மிகவும் இனிமையிலும் இனிமையான உரையாடல் செய்து கொண்டே என்ன செய்வது பாபா, இந்த அளவோ செய்தாகிவிட்டது, மீதி உள்ளதை நீங்கள் செய்து விடுங்கள் என்று கூறுகிறார்கள். இராஜ்யம் நாங்கள் செய்வோம். ஆனால் சம்பூர்ணமானவராக நீங்கள் ஆக்கி விடுங்கள் என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி ஆகுமா? தந்தை அவசியம் உதவி செய்பவராக இருக்கிறார், மேலும் இறுதிவரை இருப்பார் என்ற இது உத்திரவாதம் ஆனால் யாருடைய உதவியாளராக இருப்பார்? யார் முத-ல் தைரியம் என்ற காலை முன்னுக்கு வைக்கிறார் என்றால் பின்பு தந்தை இரண்டாவது காலை வைப்பதில் முழுமையாக உதவி செய்கிறார். தைரியம் என்ற காலை எடுக்கவே இல்லை மற்றும் பாபா நீங்கள் செய்து விடுங்கள். செய்து விடுங்கள். என்று கூட மட்டும் செய்கிறார்கள் என்றால் பாப்தாதாவும் பார்க்கலாம். முத-ல் காலையோ வையுங்கள் என்று தான் கூறுவார். ஒரு கால் கூட வைக்கவில்லை என்றால் எப்படி நடக்கும். எனவே இந்த வருடத்தில் தைரியம் என்ற கால் உறுதியாக இருக்கிறதா என்று ஒவ்வொரு நேரமும் சோதனை செய்யுங்கள். தந்தையிடம் கூறுவதற்கு முன்பு இதை சோதனை செய்யுங்கள் தைரியம் என்ற காலை எடுத்து வைத்தீர்கள் மற்றும் உதவி கிடைக்கவில்லை என்ற இத அசம்பவம் ஆகும். கொஞ்சம் தைரியம் என்ற காலை மட்டும் எடுத்து வையுங்கள். எனவே தான் இந்த மாதிரியான வர்ணனை இருக்கிறது. அதில் முதல் வார்த்தையாக என்ன வருகிறது? தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. இதை தலைகீழாக ஆக்காதீர்கள். உதவி தந்தையினுடையது. தைரியம் குழந்தைகளினுடையது என்று அப்படியல்ல. தந்தையோ ஆஹா! எனது செல்லமான குழந்தைகளே ஆஹா! என்று புன்முறுவல் செய்கிறார். நிச்சயத்துடன் தைரியம் என்ற காலை கொஞ்சமாவது முன்னுக்கு எடுத்து வைத்தீர்கள் என்றால் பல மடங்கு உதவிக்காக ஒவ்வொரு குழந்தைக்காக தந்தை ஒவ்வொரு நேரமும் தயாராக இருக்கிறார்.

நல்லது! புதிய வருடத்தில் வேறு என்ன செய்வீர்கள்? இது வரையிலும் சேவையின் ஒரு விசயம் இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அது எது? கீதை சொன்ன பகவானோ நிரூபணம் ஆகிவிடும் ஆனால் பாப்தாதா சென்ற வருடத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் அன்பிற்குரிய சகயோகி, நெருக்கத்தில் உள்ளவர்களோ அதிகம் உருவாகியிருக்கிறார்கள் இன்னும் உருவாவார்கள் ஆனால் இப்பொழுது வாரிசு குழந்தைகளை உருவாக்குங்கள் என்று கூறியிருந்தோம். வாரிசு குழந்தைகளை குறைவாக உருவாக்குகிறீர்கள் ஏனென்றால் பாப்தாதா ஒவ்வொரு சேவை நிலையத்தின் தினசரி ரிசல்ட்டைப் பார்க்கிறார். அப்படி நாலாபுறங்களிலுமுள்ள ரிசல்ட்டில் வாரிசு குழந்தைகள் குறைவாக இருக்கிறார்கள். அன்பிற்குரிய சகயோகிகள் நல்லவர்கள் தான். ஆனால் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்யுங்கள் அல்லது யாராவது புதியவர்களை, கடைசியில் வந்தவர்களையும் அதிவேகமாக முன்னேற்றி வாரிசு குழந்தையாக தந்தையின் எதிரில் கொண்டு வாருங்கள். சில சில குழந்தைகள் அப்படி உருவாகிறார்கள். ஆனால் விரல் விட்டு எண்ணும் எண்ணிக்கையில் மட்டுமே இருக்கிறார்கள். எப்பொழுது இரண்டாயிரமாவது ஆண்டு வரை மாற்றம் ஏற்பட்டு விட வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அனைவருமே அப்படித் தான் விரும்புகிறீர்கள் என்றால் வாரிசாக எத்தனை பேர்களை ஆக்கியிருக்கிறீர்கள்? சத்யுகத்தின் பிரஜை கூட இராயலானவர் கள் தேவையாக இருக்கிறது. அது குறைவாக இருக்கிறது. பிரஜைகள்

உருவாகியிருக்கிறார்கள். இந்த அனேக விதமான மாநாடுகள் செய்தீர்கள் மற்றும் வெளியுலக மேடையில் என்னென்ன நிகழ்ச்சிகள் கிடைத்தனவோ அதன் மூலம் இந்த வருடத்தில் பிரபாவமும் ஏற்பட்டது மற்றும் பிரஜைகளும் உருவானார்கள். இது நல்ல ரிசல்ட்டாக இருந்தது ஆனால் பாப்தாதா என்ன விரும்புகிறார்? இப்பொழுது வாரிசு தரமுள்ளவர்களைத் தயார் செய்யுங்கள். இங்கு வாரிசு தயார் செய்தீர்கள் என்றால் தான் அட்வான்ஸ் பார்ட்டியும் வெளிப்படுவார்கள். மேலும் தந்தையின் பெயர், பிரத்யக்ஷதாவின் முரசு நாலாபுறமும் ஒ-க்கும். இதுவரையிலுமான ரிசல்ட்டில் இவர்களும் நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள் அல்லது இவர்கள் தான் செய்ய முடியும் என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் பரமாத்மாவின் பக்கம் கவனம் செல்ல வேண்டும். பரமாத்மாவின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்ற இந்த விசயம் மறைந்திருக்கிறது. குழந்தைகள் அவர்களுடைய சக்தியினால், அன்பினால் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இந்த அளவு அன்பிற்குரியவர்கள, சகயோகிகள் இருக்கிறார்கள் இருந்தும் தந்தையின் பிரத்யக்ஷதா மைதானத்தில் வரவில்லை. இந்த அளவு நடந்திருக்கிறது என்பது நல்லது தான். ஆனால் இப்பொழுது நேரம் வந்தாகிவிட்டது. தந்தை வந்து விட்டார் என்று அனைவரின் வாயி-ருந்து வெளியாக வேண்டும். அப்பொழுது தான் வினாஷமும் வரும். எனவே வினாசம் எப்பொழுது ஏற்படும் என்று தந்தையிடம் கேட்காதீர்கள் என்று தந்தை கூறுகிறார். நீங்கள் எப்பொழுது தயார் ஆவீர்கள் என்று உங்களிடம் தந்தை கேட்கிறார். தயாராகி விட்டீர்களா? திரையை அகற்றலாமா? அல்லது திரை அகற்றப்பட்டு விடும். மேலும் நீங்கள் தயாராகிக் கொண்டே இருப்பீர்களா? குறைந்தது 16108 மிக உறுதியான இரத்தினங்களையாவது பிரத்யக்ஷம் செய்யுங்கள். மாலையையாவது உருவாக்குங்கள். தயாராகிவிட்டது என்று தந்தையும் பார்க்க வேண்டும். இந்த அளவு வாய்ப்பு இருக்கிறது. அதிகமாக எதையும் கூறவில்லை 9 லட்சம் உருவாக்குங்கள் அப்படி இந்த வருடம் உருவாக்குங்கள். 16108-ன் தடையற்ற உறுதியான மாலை தயாராகி விட்டதா என்று பார்ப்போம் அல்லது இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் மேலே கீழே செல்வீர்களா? கொஞ்சம் கொஞ்சம் விளையாட்டைக் காண்பிப்பீர்களா? பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? கூறுங்கள், தயாராகி விட்டீர்களா? தாதிகளோ ஆம் என்று கூறுகிறார்கள். அனைத்து சக்திகளும் ஆம் என்று கூறுகிறீர்களா? 16108 - தயாராகி விட்டதா? நல்லது 18-ம் தேதியன்று மாலையை உருவாக்கிக் கொடுங்கள் கையை உயர்த்தச் சொன்னால் பாதி சபை 16000-ல் இருக்கிறோம் என்று கூறும். நான் 16000-ல் நான் 16000-ல் இருக்கிறேன் அல்லது 108-ல் இருக்கிறேன் என்று ஒரு சிறு காகிதத்தில் எழுதிக் கொடுங்கள். பிறகு தாதிகள் அதை தேர்வு செய்வார்கள். எழுதிக் கொடுத்து விட்டோம் என்று மட்டும் நினைக்காதீர்கள். முத-ல் அவர்கள் தேர்வு செய்வார்கள் பிறகு பாப்தாதா தேர்வு செய்வார். பின்பு முடிவு ரிசல்ட்டைக் கூறுவோம். நல்லது !

நாலா புறங்களிலுமுள்ள அனைத்து ஊக்கம் உற்சாகத்தினால் முன்னேறிச் சென்று கொண்டிருக்கக்கூடிய, எப்பொழுதும் சிக்கனத்தின் அவதாரமாகி நேரம், எண்ணம், வார்த்தை மற்றும் செய-ன் சேமிப்புக் கணக்கில் சேமிக்கக்கூடிய சாகார மற்றும் ஆகார ரூபத்தில் புது வருடத்தைக் கொண்டாடும் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு நாலாபுறங்களிலுமுள்ள

குழந்தைகள் சாகாரத்தில் இல்லை என்றாலும் ஆகார ரூபத்தில் மதுபன்னில் தான் இருக்கிறார்கள் மற்றும் ஆகார ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். அப்படி அனைவருக்கும் பாப்தாதா புதிய வருடத்திற்கான, சாந்தி வனத்தின் ஸ்தாபனைக்கான வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். அனைத்து திருப்தி மணிகளுக்கும் நமஸ்காரம்.

வரதானம்: தனது ஆதி அனாதி சொரூபத்தின் நினைவு மூலம் அனைத்து பந்தனங்களையும் அழிக்கக்கூடிய பந்தனத்தில் இருந்து விடுபட்டவர் ஆகுக

ஆத்மாவின் ஆதி அனாதி சொருபம் சுதந்திரமானது. எஜமானாக இருப்பது. இப்போது அது கட்டுண்டு (சார்ந்து) விட்டது. ஆகையால் தனது ஆதி, அனாதி சொரூபத்தின் நினைவில் இருந்து பந்தனத்தி-ருந்து விடுபட்டவர் ஆகுங்கள். மனதில் கூட பந்தனம் என்பது கூடாது. ஒருவேளை மனம் பந்தனத்தில் இருந்தால் அந்த பந்தனமானது மற்ற பந்தனங்களை கொண்டு வந்துவிடும். பந்தனத்தில் இருந்து விடுபடுவது என்றால் இராஜா அதாவது சுயராஜ்ய அதிகாரி. இந்தமாதியான பந்தனத்தில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக இருக்கும் ஆத்மாக்கள் தான் மதிப்புடன் தேர்சி பெற்றவர் (பாஸ் வித் ஹானர்) ஆவார்கள். அதாவது முதல் பிரிவில் (டிவிஷன்) வருவார்கள்.

சுலோகன்: மாஸ்டர் துக்கத்தை நீக்குபவர் ஆகி துக்கத்தினை

ஆன்மீக சுகமாக மாற்றுவது தான் உண்மையான சேவை ஆகும்.

27.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! பகலில் சரீர நிர்வாகத்திற்காகக் கர்மங்கள் செய்யுங்கள். இரவில் அமர்ந்து ஞானத்தை சிந்தனை செய்யுங்கள். பாபாவை நினைவு செய்யுங்கள். புத்தியில் சுயதரிசனச் சக்கரத்தைச் சுற்றுங்கள். அப்போது போதை அதிகரிக்கும்.

கேள்வி : மாயா எந்தக் குழந்தைகளை நினைவில் இருப்பதற்கு கூட விடுவதில்லை?

பதில்: யார் ஒருவருடைய புத்தி வேறு யாரிடமாவது சிக்கிக் கொண்டுள்ளதோ, யாருடைய புத்திக்குப் பூட்டுப் போடப் பட்டுள்ளதோ, படிப்பை நன்றாகப் படிப்பதில்லையோ, மாயா அவர்களை நினைவில் அமர்வதற்குக் கூட விடுவதில்லை. அவர்கள் மன்மனாபவ நிலையில் இருக்க முடியாது. பிறகு சேவைக்காகவும் அவர்களின் புத்தி செயல்படுவதில்லை. ஸ்ரீமத் படி நடக்காத காரணத்தால் பெயரைக் கெடுத்து விடுகின்றனர். ஏமாற்றி விடுகின்றனர் என்றால் தண்டனைகள் அடைய நேரிடுகின்றது.

பாடல் : உங்களை அழைக்க மனம் விரும்புகிறது........

ஓம் சாந்தி. குழந்தைகள் பாடலைக் கேட்டீர்கள். இறைத்தந்தையைத் தான் அழைக்கின்றனர், கிருஷ்ணரை அல்ல. வாருங்கள், மீண்டும் கம்சபுரிக்கு

பதிலாக கிருஷ்ணபுரியை உருவாக்குங்கள் என்று பாபாவுக்குச் சொல்வார்கள். கிருஷ்ணரையோ அழைக்க மாட்டார்கள். கிருஷ்ணபுரியோ சொர்க்கம் எனச் சொல்லப்படுகின்றது. இதை யாருமே அறிந்திருக்கவில்லை. ஏனெனில் கிருஷ்ணரை துவாபரயுகத்திற்குக் கொண்டு சென்று விட்டனர். இந்த அனைத்துத் தவறுகளும் சாஸ்திரங்களால் ஏற்பட்டுள்ளன. இப்போது பாபா உண்மையான விசயங்களைப் புரிய வைக்கிறார். உண்மையில் முழு உலகத்தின் உயர்வான இறைத் தந்தை (காட் ஃபாதர்) அவர். அனைவரும் அந்த ஓர் இறைத்தந்தையை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். மனிதர்கள் கிறிஸ்து, புத்தர் அல்லது தேவதைகள் முதலானவர்களை நினைவு செய்கின்றனர் என்ற போதிலும் ஒவ்வொரு தர்மத்தைச் சேர்ந்தவர்களும் தர்ம ஸ்தாபகரை நினைவு செய்கின்றனர். நினைவு செய்வது துவாபர யுகத்திலிருந்து ஆரம்பமாகி யுள்ளது. பாரதத்தில் பாடப்படவும் செய்கிறது. துக்கத்தில் அனைவரும் நினைவு செய்வார்கள், சுகத்தில் யாருமே நினைவு செய்வதில்லை. பிற்காலத்தில் தான் நினைவு செய்வதற்கான வழக்கம் வந்துள்ளது. ஏனென்றால் துக்கம். முதல்-முதலில் பாரதவாசிகள் நினைவு செய்யத் தொடங்கினர். அவர்களைப் பார்த்து மற்ற தர்மங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் தர்ம ஸ்தாபகர்களை நினைவு செய்யத் தொடங்கினர். பாபாவும் தர்ம ஸ்தாபனை செய்பவர். ஆனால் மனிதர்கள் பாபாவை மறந்து ஸ்ரீகிருஷ்ணரின் பெயரைப் போட்டு விட்டனர். லட்சுமி-நாராயணரின் தர்மத்தினைப் பற்றி அவர் களுக்குத் தெரியாது. லட்சுமி-நாராயணரையோ கிருஷ்ணரையோ நினைவு செய்யக் கூடாது. ஒரு தந்தையை மட்டுமே நினைவு செய்ய வேண்டும். அவர் தான் ஆதி சநாதன தேவி-தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார். பிறகு எப்போது பக்தி மார்க்கத்தில் சிவனுக்குப் பூஜை செய்யத் தொடங்குகின்றனரோ, அப்போது பு, கீதையின் பகவான் கிருஷ்ணர் என்று புரிந்து கொள்கின்றனர். அதனால் அவரை நினைவு செய்கின்றனர். இவர்களைப் பார்த்து மற்ற தர்மத்தினரும் தங்கள் தர்ம ஸ்தாபகரை நினைவு செய்கின்றனர். இந்த தேவதா தர்மத்தை பகவான் ஸ்தாபனை செய்தார் என்பதை மறந்து விடுகின்றனர். கீதையை உரைப்பவர் கிருஷ்ணரல்ல, சிவபாபா என்று நாம் எழுத முடியும். அவர் நிராகார். இது அற்புதமான விசயம் ஆகிறது இல்லையா? எவரிடத்திலும் சிவபாபாவின் அறிமுகம் கிடையாது. அவர் நட்சத்திரமாக உள்ளார். அனைத்து இடங்களிலும் சிவாலயங்கள் உள்ளன என்றால் அவர்கள் நினைக்கின்றனர், இவ்வளவு பெரிய உருவமுள்ளவர், அகண்ட ஜோதி தத்துவம். ஆனால் அவரோ மகாதத்துவத்தில் வசிக்கின்றார். ஆத்மாவின் ரூபம் நிச்சயமாக நட்சத்திரம் போன்றது தான், பரமபிதா பரமாத்மாவும் நட்சத்திரம் தான். ஆனால் அவர் ஞானம் நிறைந்தவர், விதை வடிவமாக இருக்கின்ற காரணத்தால் அவருக்குள் சக்தி உள்ளது. ஆத்மாக்களின் தந்தை (விதை) என்று பரமாத்மாவைச் சொல்வார்கள். அவர் நிராகாராகத் தான் இருக்கிறார். மனிதர்களையோ ஞானக்கடல், அன்புக்கடல் எனச் சொல்ல முடியாது. அதனால் புரிந்து கொள்ளக் கூடிய குழந்தைகளிடம் அத்தாரிட்டி வேண்டும். அவர்களின் புத்தி விசாலமாக இருக்க வேண்டும். உங்கள் அனைவரிலும் முக்கியமானவர்கள் மம்மா, வந்தே மாதரம் எனவும் பாடப்பட்டுள்ளது. கன்னியர்களின் மூலமாக (ஞானத்தின்) பாணங்கள் விடுமாறு செய்தார். அதர் கன்யா, குமாரி கன்யா பற்றிய ரகசியங்கள் எங்கும் கிடையாது. கோவில்கள் மூலம் தான் தெரிய வருகின்றன. ஜெகதம்பாவும் நிச்சயமாக

இருக்கிறார். ஆனால் அவர் யார் என்று அவர்களுக்குத் தெரியாது.

பாபா சொல்கிறார், நான் பிரம்மாவின் கமலவாய் மூலம் படைப்பவர் மற்றும் படைப்பு பற்றிய முதல்- இடை-கடையின் ரகசியத்தைச் சொல்கிறேன். டிராமாவில் என்ன உள்ளது - இது மனிதர்களின் புத்தியில் வர வேண்டும். இது எல்லையற்ற டிராமா. இதில் நாம் நடிகர்கள் என்று சொன்னால் டிராமாவின் முதல்-இடை-கடை பற்றிய ரகசியம் புத்தியில் இருக்க வேண்டும். யாருடைய புத்தியில் இது இருக்கிறதோ, அவர்களுக்கு மிகுந்த போதை இருக்கும். நாள் முழுவதும் சரீர நிர்வாகம் செய்தீர்கள், இரவில் அமர்ந்து நினைவில் கொண்டு வாருங்கள் - இந்த டிராமா எப்படிச் சுற்றி வருகின்றது? இதுவே மன்மனாபவ ஆகும். ஆனால் மாயா இரவில் கூட நினைவில் அமர விடுவதில்லை. நடிகர்களின் புத்தியிலோ டிராமாவின் ரகசியம் இருக்க வேண்டும் இல்லையா? ஆனால் மிகவும் கஷ்டம். எங்காவது சிக்கிக் கொள்கின்றனர் என்றால் பாபா புத்தியின் பூட்டைப் பூட்டி விடுகிறார். மிக உயர்ந்த குறிக்கோள். நன்றாகப் படிப்பவர்கள் பிறகு நல்ல சம்பளமும் பெறுகிறார்கள். இதுவும் படிப்பாகும். ஆனால் வெளியில் சென்றதும் மறந்து விடுகின்றனர். பிறகு தன்னுடைய வழிப்படி நடக்கின்றனர். பாபா சொல்கிறார் - இனிமையான குழந்தைகளே, ஸ்ரீமத்படி நடப்பதில் தான் உங்களுக்கு நன்மை உள்ளது. இது தூய்மை இல்லாத உலகம். விகாரம் விஷம் எனச் சொல்லப் படுகின்றது. அதை சந்நியாசிகள் சந்நியாசம் செய்து விடுகின்றனர். இந்த இராவண இராஜ்யம் துவாபரயுகத்தில் இருந்து ஆரம்பமாகிறது. இந்த வேத-சாஸ்திரங்கள் அனைத்தும் பக்தி மார்க்கத்தின் சாதனங்கள். சேவைக்காக குழந்தைகளின் புத்தியை ஓட்ட (சிந்தனை) வேண்டும். ஸ்ரீமத்படி நடந்தால் தாரணையும் ஆகும். குழந்தைகள் அறிவார்கள், விநாசம் முன்னாலேயே நின்று கொண்டுள்ளது. அனைவரும் துக்கத்தில் வந்து கூக்குரல் இடுகின்றனர் - ஹே பகவானே, இரக்கம் வையுங்கள். ஐயோ-ஐயோ எனக் கூக்குரலிடும் போது பகவானை நினைவு செய்வார்கள். பிரிவினை சமயத்தில் எவ்வளவு நினைவு செய்தனர்! - ஹே பகவானே! கருணை செய்யுங்கள், காப்பாற்றுங்கள். இப்போது என்ன பாதுகாப்பு செய்வார்? காப்பாற்றுபவரையே அறிந்து கொள்ளவில்லை என்றால் எப்படிக் காப்பாற்றுவார்? இப்போது பாபா வந்துள்ளார், பாபா புரிய வைக்கிறார். ஆனால் யாருடைய புத்தியிலாவது பதிவதென்பது கஷ்டம். இப்படி-இப்படி சேவை செய்யுங்கள் என்று. இந்த ஸ்ரீமத் பாபாவிடமிருந்து கிடைக்கிறது. அப்படிப்பட்ட தந்தையை அறிந்து கொள்ள முடியவில்லை - இதுவும் எப்படிப்பட்ட அதிசயமாக உள்ளது! எவ்வளவு புரிந்து கொள்ள வேண்டிய விசயங்கள்! நாள் முழுவதும் சிவபாபாவின் நினைவு புத்தியில் இருக்க வேண்டும். இவரும் அவருடைய ரதம், துணையாகிறார் இல்லையா?

பாபா பார்க்கிறார் - குழந்தைகள் இன்று மிக நல்ல நிச்சயபுத்தியுடன் இருக்கிறார்கள். நாளை சந்தேக புத்தியுள்ளவர்களாக ஆகி விடுகிறார்கள். மாயாவின் புயல் வருவதால் மனநிலை கீழிறங்குகிறது என்றால் பாபா இதில் என்ன செய்ய இயலும்? நீங்கள் ஞானத்தில் வந்தீர்கள், சமர்ப்பணமானீர்கள் என்றால் நீங்கள் டிரஸ்டி ஆகிறீர்கள். நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்? சமர்ப்பணமாகி விட்டால் பிறகு சேவையும் செய்ய வேண்டும், அப்போது பிரதிபலன் கிடைக்கும். சமர்ப்பணமாகி விட்டுப் பிறகு சேவை செய்யவில்லை என்றால் கூட அவர்களுக்கு உணவளிக்கத் தான் வேண்டும். அந்தப் பணத்தால்

உண்டு-உண்டு தங்களு டையதை அழித்துக் கொள்கிறார்கள். சேவை செய்வதில்லை. மனிதர்களை வைரம் போல் ஆக்கு வதற்கான சேவையை நீங்கள் செய்ய வேண்டும். முக்கியமாக பாபாவின் ஆன்மீக சேவை செய்ய வேண்டும், இதன் மூலம் மனிதர்கள் உயர்ந்தவர்களாக ஆக வேண்டும். சேவை செய்யவில்லை என்றால் அங்கு போய் தாச-தாசி ஆவார்கள். யார் படிப்பை நன்கு படிக்கிறார்களோ, அவர்களுக்கு மதிப்பும் உயர்ந்த தாக இருக்கும். யார் ஃபெயிலாகி விடுகிறார்களோ, அவர்கள் போய் தாச-தாசி ஆவார்கள்.

பாபா சொல்கிறார் - குழந்தைகளே, என்னை நினைவு செய்யுங்கள், ஆஸ்தியைப் பெற்றுக் கொள்ளுங்கள். போதும், இந்த மன்மனாபவ என்ற சொல் சரியானது தான். ஞானக்கடல் சொல்கிறார், என்னை நினைவு செய்வீர்களானால் உங்களுடைய விகர்மங்கள் விநாசமாகும். இதுபோல் கிருஷ்ணர் சொல்ல முடியாது. பாபா தான் சொல்கிறார்-என்னை மட்டுமே நினைவு செய்யுங்கள், மேலும் வருங்கால இராஜ்ய பதவியை நினைவு செய்யுங்கள். இது இராஜயோகம் அல்லவா? இதன் மூலம் இல்லற மார்க்கம் உறுதியாகின்றது. இதை நீங்கள் தான் புரிய வைக்க முடியும். உங்களிலும் சேவையில் சிறந்தவர்கள் அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் சாமர்த்திய சாலிகள் என்பது புரிய வைக்கப் படுகின்றது. குழந்தைகள் யுக்தி நிறைந்தவர்களாக ஆக வேண்டும். ஸ்ரீமத் படி நடக்கவில்லை என்றால் பெயரைக் கெடுக்கின்றனர். ஏமாற்றுகின்றனர் என்றாலோ பிறகு தண்டனைகள் அடைய நேரிடும். தீர்ப்பாயமும் அமர்கின்றது இல்லையா? நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

இரவு வகுப்பு:

குழந்தைகளுக்கு முதல்-முதலில் தந்தை பற்றிய அறிமுகம் கொடுக்க வேண்டும். எல்லையற்ற தந்தை தான் உங்களுக்கு கற்பிக்கிறார். கீதை படிக்கிறவர்கள் கிருஷ்ணரை பகவான் எனச் சொல்கின்றனர். பகவான் எனச் சொல்லப் படுபவர் நிராகார் தான் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். தேகதாரிகளோ ஏராளமான பேர் உள்ளனர். தேகம் இல்லாதவர் ஒருவர் தான். அவர் உயர்ந்தவரிலும் உயர்ந்தவரான சிவபாபா. இதை நல்லபடியாக புத்தியில் பதிய வையுங்கள். எல்லையற்ற தந்தையிடமிருந்து எல்லையற்ற ஆஸ்தி கிடைக்கின்றது. அவர் தான் உயர்ந்தவரிலும் உயர்ந்த பரமபிதா பரமாத்மா. அவர் எல்லையற்ற தந்தை, இவர் எல்லைக்குட்பட்ட தந்தை. வேறு யாரும் 21 பிறவிகளுக்கான ஆஸ்தி தருவ தில்லை. அமர பதவி பெறுவதற்கு இப்படிப்பட்ட ஒரு தந்தையைத் தவிர வேறு எவரும் கிடையாது. அமரலோகம் என்பது சத்யுகம். இது மரண உலகம். ஆக, பாபாவின் அறிமுகம் கொடுப்பதால் புரிந்து கொள்வார்கள், பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. அது தெய்வீக சுயராஜ்யம் என்று சொல்லப்படுகிறது. அதை பாபா தான் தருகிறார். அவர் தான் பதீதபாவனன் எனப் பாடப்படுகிறார். அவர் சொல்கிறார், தன்னை ஆத்மா என உணர்ந்து என்னை நினைவு செய்வீர்களானால் பாவங்கள் அழிந்து விடும். தூய்மை யில்லா நிலையி-ருந்து தூய்மையாகி தூய்மையான உலகத்திற்குச் செல்வதற்குத் தகுதி உள்ளவர்களாக நீங்கள் ஆக முடியும்.

கல்ப-கல்பமாக பாபா சொல்கிறார், என்னை மட்டுமே நினைவு செய்யுங்கள். நினைவு யாத்திரை மூலமாகத் தான் தூய்மை ஆக வேண்டும். இப்போது தூய்மையான உலகம் வந்து கொண்டிருக்கிறது. தூய்மை அற்ற உலகம் விநாசமாகப் போகின்றது. முதல்-முதலில் பாபாவின் அறிமுகம் கொடுத்து உறுதி யானவர்களாக ஆக்க வேண்டும். எப்போது மிகச் சரியாக பாபாவைப் புரிந்து கொள்கிறார்களோ, அப்போது பாபாவிடம் இருந்து ஆஸ்தி கிடைக்கும். இதில் மாயா அதிகமாக மறக்கடித்து விடுகின்றது. நீங்கள் பாபாவை நினைவு செய்வதற்கு முயற்சி செய்கிறீர்கள். பிறகு மறந்து விடுகிறீர்கள். சிவபாபாவை நினைவு செய்வதன் மூலம் தான் பாவங்கள் நீங்கும். அந்த (சிவ)பாபா இவர்(பிரம்மா) மூலம் சொல்கிறார், குழந்தைகளே, என்னை நினைவு செய்யுங்கள். பிறகும் கூட வேலை முதலியவற்றால் மறந்து போகின்றனர். இதை மறக்கக் கூடாது. இது தான் முயற்சியின் விசயம். பாபாவை நினைத்து-நினைத்தே கர்மாதீத் அவஸ்தா வரை சென்று சேர வேண்டும். கர்மாதீத் அவஸ்தா நிலை அடைந்தவர்கள் ஃபரிஸ்தா எனச் சொல்லப்படுகின்றனர். ஆகவே எப்படி யாருக்குச் சொல்லிப் புரிய வைப்பது என்று இதை நன்றாகச் சிந்தனை செய்யுங்கள். மனதில் நிச்சயமும் உறுதியும் இருக்க வேண்டும்-நாம் சகோதரர்களுக்கு (ஆத்மாக்களுக்கு) சொல்லிப் புரிய வைக்கிறோம். அனைவருக்கும் பாபாவின் செய்தியைக் கொடுக்க வேண்டும். பாபாவிடம் செல்ல வேண்டும், காட்சிகளைப் பார்க்க வேண்டும் என்று அநேகர் சொல்கின்றனர். ஆனால் இதில் காட்சி பார்த்தல் (சாட்சாத்காரம்) முதலியவற்றின் விசயம் கிடையாது. பகவான் வந்து கற்றுத் தருகிறார். மேலும் வாயின் மூலம் சொல்கிறார்-நீங்கள் நிராகார் தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள். நினைவு செய்வதால் அனைத்துப் பாவங்களும் நீங்கி விடுகின்றன. எங்கு வேண்டுமானாலும் வேலை முதலியவற்றில் அமர்ந்து கொண்டே அவ்வப்போது பாபாவை நினைவு செய்ய வேண்டும். பாபா உத்தரவிட்டுள்ளார் - என்னை நினைவு செய்யுங்கள். நிரந்தரமாக நினைவு செய்பவர்கள் தான் வெற்றி பெறுவார்கள். இந்தப் படிப்பே மனிதரில் இருந்து தேவதை ஆவதற்கானது. அதை ஒரு தந்தை மட்டுமே கற்றுத் தருகிறார். நீங்கள் சக்கரவர்த்தி ராஜா ஆக வேண்டும் என்றால் 84 பிறவிகளின் சக்கரத்தையும் கூட நினைவு செய்ய வேண்டும். கர்மாதீத் அவஸ்தா வரை சென்று சேர்வதற்காக முயற்சி செய்ய வேண்டும். அது கடைசியில் நடைபெறும். கடைசி நேரம் எப்பபொழுது வேண்டுமானாலும் வரலாம். அதனால் புருஷார்த்தத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும். தினமும் உங்கள் புருஷார்த்தம் நடந்து கொண்டே இருக்க வேண்டும். லௌகிக தந்தை உங்களுக்கு - தேகத்தின் அனைத்து சம்மந்தங்களையும் விட்டு தன்னை ஆத்மா என்று உணருங்கள் என்று இதுபோல் சொல்ல மாட்டார். சரீரத்தின் உணர்வை விட்டு என்னை நினைவு செய்வீர்களானால் பாவங்கள் நீங்கும். இதையோ எல்லையற்ற தந்தை தான் சொல்கிறார் - குழந்தைகளே, என் ஒருவனின் நினைவில் இருப்பீர்களானால் அனைத்துப் பாவங்களும் நீங்கி விடும். நீங்கள் சதோபிர தானமானவர்களாக ஆகி விடுவீர்கள். இந்தத் தொழிலையோ குஷியுடன் செய்ய வேண்டும் இல்லையா? உணவு உண்ணும் போதும் பாபாவை நினைவு செய்ய வேண்டும். நினைவில் இருப்பதற்கான குப்த அப்பியாசம் குழந்தைகளாகிய உங்களிடம் நடைபெற்றுக் கொண்டே இருக்குமானால் நல்லது. அதில் உங்களுக்குத் தான் நன்மை. தன்னைத் தானே பார்க்க வேண்டும்-பாபாவை எவ்வளவு நினைவு செய்கிறேன்? நல்லது!

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு அன்பு நினைவு, குட்நைட் மற்றும் வணக்கம். ஓம் சாந்தி.

தாரணைக்கான முக்கிய சாரம் :

1) மனிதர்களை வைரம் போல் ஆக்குவதற்கான ஆன்மீக சேவை செய்ய வேண்டும். ஒருபோதும் சந்தேக புத்தி உள்ளவராகி படிப்பை விட்டுவிடக் கூடாது. டிரஸ்டி ஆகி இருக்க வேண்டும்.

2) சரீர நிர்வாகத்திற்காகக் கர்மம் செய்து கொண்டே கூட பாபாவை நினைவு செய்ய வேண்டும். ஸ்ரீமத்தில் தான் தங்களுடைய நன்மை உள்ளது என உணர்ந்து கொண்டே இருக்க வேண்டும். தன்னுடைய வழிமுறையை நடத்தக் கூடாது.

வரதானம்: மனம் மற்றும் வாக்கு சக்தியினை யதார்த்தமாகவும் சக்தி வாய்ந்ததாகவும்

செய-ல் ஈடுபடுத்தி தீவிர முயற்சியாளர் ஆகுக.

தீவிர முயற்சியாளர் என்பவர் முதல் தரமாக வருவதற்காக எண்ணம், சொல், சக்தியினை யதார்த்தமாகவும் ஆக்கப்பூர்வமாகவும் செயல்படுத்துவார்கள். அவர்கள் இதில் கவனக்குறைவாக இருக்க மாட்டார்கள். குறைவாக பேசுக, மெதுவாக பேசுக, இனிமையாக பேசுக என்ற சுலோகனை என்றுமே நினைவில் வைத்திருப்பார்கள். அவர்களது ஒவ்வொரு சொல்லும் யோக நிலையிலும், யுக்தியாகவும் இருக்கும். அவர்கள் அவசியமான சொற்களையே பேசுவார்கள். வீணாகவோ, விரிவாகவோ பேசி தனது சக்தியை அழிக்க மாட்டார்கள். அவர்கள் என்றுமே ஏகாந்தப்பிரியராக இருப்பார்கள்.

சுலோகன்: எனது எனும் அதிகாரத்தையும் தியாகம் செய்தவரே

முற்றிலும் மோகத்தை விட்டவர் ஆவார்.

மாதேஷ்வரி அவர்களின் மதுர மகா வாக்கியம்

மனதின் அமைதியின்மைக்கு காரணம் கர்மபந்தனம் - அமைதிக்கு ஆதாரம் கர்மாதீத நிலை.

நமக்கு மன அமைதி கிடைத்து விட வேண்டும் என்று உண்மையில் ஒவ்வொரு மனிதனுக்கும் விருப்பம் அவசியம் இருக்கிறது. எனவே அநேக முயற்சிகள் செய்தபடியே வந்துள்ளார்கள். ஆனால் மன அமைதி இதுவரையும் பிராப்தி ஆகவில்லை. இதற்கான சரியான காரணம் என்ன? இப்பொழுது முதலில் மனதில் அமைதியின்மைக்கான முதல் வேர் என்ன என்பது பற்றி சிந்திப்பது அவசியம். மனதின் அமைதியின்மைக்கான முக்கிய காரணமாவது - கர்மபந்தனத்தில் சிக்கிக் கொள்வது. மனிதன் இந்த ஐந்து விகாரங்களின் கர்ம பந்தனத்திலிருந்து விடுபடாத வரையும், மனிதர்கள் அமைதியின்மையிலிருந்து விடுபட முடியாமல் இருப்பார்கள். கர்ம பந்தனம் அறுபட்டு விடும் பொழுது, மன

அமைதி அதாவது ஜீவன் முக்தியை அடைந்து விட முடியும். இந்த கர்ம பந்தனம் எப்படி அறுபடும் என்பது பற்றி இப்பொழுது சிந்திக்க வேண்டும். மேலும் அதற்கு விடுதலை கொடுப்பவர் யார்? எந்தவொரு மனித ஆத்மாவும், எந்தவொரு மனித ஆத்மாவிற்கும் விடுதலை அளிக்க முடியாது என்பதையோ நாம் அறிந்துள்ளோம். இந்த கர்மபந்தனத்தின் கணக்கு வழக்கை துண்டிப்பவர் ஒரேயொரு பரமாத்மா மட்டுமே ஆவார். அவரே வந்து இந்த ஞான யோக பலத்தினால் கர்மபந்தனத்திலிருந்து விடுவிக்கிறார். எனவே தான் பரமாத்மாவிற்கு சுகம் அளிக்கும் வள்ளல் என்று கூறப்படுகிறது. முதலில் நான் ஆத்மா ஆவேன், உண்மையில் நான் யாருடைய குழந்தையாக உள்ளேன், எனது உண்மையான குணம் என்ன? என்ற ஞானம் முதலில் இருக்கவில்லை. இது எப்பொழுது புத்தியில் வந்து விடுகிறதோ, அப்பொழுது தான் கர்மபந்தனம் அறுபட முடியும். இப்பொழுது இந்த ஞானம் நமக்கு பரமாத்மா மூலமாகத் தான் பிராப்தி ஆகிறது. அதாவது பரமாத்மா மூலமாகத் தான் கர்மபந்தனம் அறுபடுகிறது. நல்லது. ஓம் சாந்தி.

28.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! ஞானம் என்பது வெண்ணெய். பக்தி என்பது மோர். தந்தை உங்களுக்கு ஞானம் என்ற வெண்ணெய் அளித்து உலகிற்கு அதிபதியாக ஆக்கி விடுகிறார். எனவே கிருஷ்ணரின் வாயில் வெண்ணெய் காண்பிக்கிறார்கள்.

கேள்வி: நிச்சயபுத்தியின் அடையாளம் என்ன? நிச்சயத்தின் ஆதாரத்தில் என்ன பிராப்தி ஆகிறது?

பதில்: (1) நிச்சய புத்தி குழந்தைகள் ஒளி மீது ப- (தியாகம்) ஆகக் கூடிய உண்மையான விட்டில் பூச்சிகளாக இருப்பார்கள். வட்டமிட்டு வருபவர்கள் அல்ல. ஒளி மீது ப- ஆகுபவர்கள் இராஜ்யத்தில் வருவார்கள். வட்டமிட்டு வருபவர்கள் பிரஜைகளில் சென்று விடுவார்கள். (2) பூமியே பிளந்தாலும் தர்மத்தை விட மாட்டோம் என்ற வாக்குறுதி நிச்சய புத்தி குழந்தைகளினுடையது ஆகும். அவர்கள் உண்மையான அன்பான புத்தி உடையவர்களாக ஆகி தேகத்துடன் சேர்த்து தேகத்தின் அனைத்து தர்மங் களையும் மறந்து தந்தையின் நினைவில் இருக்கிறார்கள்.

பாடல்: ஆகாய சிம்மாசனத்தை விட்டாவது.. .. ..

ஓம் சாந்தி. பகவான் கூறுகிறார். நிராகார பரமபிதாவிற்கு பகவான் என்று கூறப்படுகிறது. பகவானுவாச் - யார் கூறியது? அந்த நிராகார பரமபிதா பரமாத்மா கூறினார். நிராகார தந்தை நிராகார ஆத்மாக்களுக்கு அமர்ந்து புரிய வைக்கிறார். நிராகார ஆத்மா இந்த சரீரம் என்ற கர்ம இந்திரியங்கள் மூலமாக கேட்கிறது. ஆத்மாவிற்கு ஆண் என்றோ பெண் என்றோ கூறப்படுவதில்லை. ஆத்மாவிற்கு ஆத்மா என்று தான் கூறப்படுகிறது. ஆத்மா சுயம் இந்த உறுப்புக்கள் மூலமாக கூறுகிறது, நான் ஒரு சரீரத்தை விட்டு மற்றொன்று எடுக்கிறேன். மனிதர்கள் அனைவருமே சகோதரர்கள் ஆவார்கள். நிராகார பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள் எனும் பொழுது தங்களுக்குள் அனைவரும் சகோதர சகோதரர்கள் ஆவார்கள். பிரஜா பிதா பிரம்மாவின்

குழந்தைகள் என்னும் பொழுது சகோதர சகோதரிகள் ஆவார்கள். இதை எப்பொழுதும் அனைவருக்கும் புரிய வைத்துக் கொண்டு இருங்கள். பகவான் ரட்சகர் ஆவார். பக்தர்களுக்கு பக்தியின் பலனை அளிக்கக் கூடியவர் ஆவார்.

அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் நான் ஆவேன் என்பதை தந்தை புரிய வைக்கிறார். அனைவருக்கும் ஆசானாக ஆகி ஸ்ரீமத் அளிக்கிறேன். மேலும் அனைவரின் சத்குருவும் ஆவேன். அவருக்கென்று தந்தையோ ஆசிரியரோ குருவோ கிடையாது. அதே தந்தை பழமையான பாரதத்தின் இராஜயோகம் கற்பிப்பவர் ஆவார். கிருஷ்ணர் அல்ல. கிருஷ்ணரை தந்தை என்று கூற முடியாது. அவருக்கு தெய்வீக குணங்கள் நிறைந்த சொர்க்கத்தின் இளவரசர் என்று கூறப்படுகிறது. பதீத பாவனர் சத்கதி அளிக்கும் வள்ளல் என்று ஒருவருக்கு கூறப்படுகிறது. இப்பொழுது எல்லாம் துக்கம் உடையவர்களாக, பாவ ஆத்மாக்களாக மற்றும் பிரஷ்டாச்சாரியாக (இழிவானவர்களாக) உள்ளார்கள். பாரதம் தான் சத்யுகத்தில் தெய்வீகமானதாக (சிரேஷ்டாச்சாரி) உயர்ந்ததாக இருந்தது. பின்னர் அது பிரஷ்டாச்சாரி (தாழ்ந்த) அசுர இராஜ்யமாக ஆகி விடுகிறது. எல்லோருமே பதீத பாவனரே வாரும் வந்து இராம இராஜ்யத்தை ஸ்தாபனை செய்யுங்கள் என்று கூறுகிறார்கள். எனவே இப்பொழுது இராவண இராஜ்யம் ஆகும். இராவணனை எரிக்கவும் செய்கிறார்கள். ஆனால் எந்த ஒரு வித்வான், ஆசாரியர் மற்றும் பண்டிதர் ஆகியோரும் இராவணனை அறியாமல் உள்ளார்கள். சத்யுகத்திலிருந்து திரேதாவரை இராம இராஜ்யம் ஆகும். துவாபர முதல் கலியுகம் வரையும் இராவண இராஜ்யம். பிரம்மாவின் பகல் என்பது பிரம்மா குமார் குமாரிகளுக்கும் பகல். பிரம்மாவின் இரவு என்பது பிரம்மா குமாரி, பிரம்மா குமார்களுக்கும் இரவு. இப்பொழுது இரவு முடிந்து பகல் வரப் போகிறது. விநாசகாலத்தில் விபரீதமான புத்தி என்றும் பாடப்பட்டுள்ளது. மூன்று சேனைகளும் கூட இருக்கிறார்கள். பரமபிதா மிகவும் அன்பிற்குரிய தந்தை, ஞானக் கடல் என்று கூறப்படுகிறார். எனவே அவசியம் ஞானம் அளித்திருக்கக் கூடும் அல்லவா? சிருஷ்டியின் சைதன்ய விதை ரூபமானவர் ஆவார். சுப்ரீம் ஸோல் - பரம ஆத்மா ஆவார் அதாவது உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் ஆவார். அப்படி இன்றி சர்வவியாபி என்பதல்ல. சர்வ வியாபி என்று கூறுவது தந்தையை இழிவு படுத்துவது ஆகும். நிந்தனை செய்து செய்து தர்மத்திற்கு நிந்தனை ஆகி விட்டுள்ளது. பாரதம் ஏழையாக இழிவான நிலை ஆகி விட்டுள்ளது. அப்பேர்ப்பட்ட நேரத்தில் தான் நான் வர வேண்டி இருக்கிறது. பாரதம் தான் எனது ஜன்ம பூமி ஆகும். சோம நாதரின் கோவில், சிவனின் கோவில் கூட இங்கு தான் உள்ளது. நான் எனது ஜன்ம பூமியைத் தான் சொர்க்கமாக ஆக்குகிறேன். பிறகு இராவணன் நரகமாக ஆக்குகிறான். அதாவது இராவணனின் வழிப்படி நடந்து நரகவாசி, அசுர சம்பிரதாயத்தினராக ஆகி விடுகிறார்கள். பிறகு அவர்களை மாற்றி நான் தெய்வீக சம்பிரதாயத்தினராக சிரேஷ்டாச்சாரியாக ஆக்குகிறேன். இது விகாரக் கடல் ஆகும். அது பாற்கடல் ஆகும். அங்கு நெய்யாறு ஓடுகிறது. சத்யுக திரேதாவில் பாரதம் சதா சுகமுடையதாக செழிப்புடன் இருந்தது. வைரம் வைடூரியங்களின் அரண்மனைகள் இருந்தன. இப்பொழுதோ பாரதம் 100 சதவிகிதம் திவால் ஆகி விட்டுள்ளது. நான் தான் வந்து 100 சதவிகிதம் செழிப்புடையதாக சிரேஷ்டாச்சாரியாக ஆக்குகிறேன்.இப்பொழுதோ தங்களது தெய்வீக தர்மத்தையே மறந்து விட்டிருக்கும் அளவிற்கு (ப்ரஷ்டாச்சாரி) தாழ்ந்தவர்களாக ஆகி

விட்டுள்ளார்கள்.

பக்தி மார்க்கம் என்பது மோர், ஞான மார்க்கம் என்பது வெண்ணெய் என்று தந்தை வந்து புரிய வைக்கிறார். கிருஷ்ணரின் வாயில் வெண்ணெய் காண்பிக்கிறார்கள். அதாவது உலகத்தின் ராஜ்யம் இருந்தது. லட்சுமி நாராயணர் உலகின் அதிபதியாக இருந்தார்கள். தந்தை தான் வந்து எல்லையில்லாத ஆஸ்தியை அளிக்கிறார். அதாவது உலகின் அதிபதி ஆக்குகிறார். நான் உலகின் அதிபதி ஆவதில்லை என்று கூறுகிறார். ஒரு வேளை நான் அதிபதி ஆனேன் என்றால் பின் மாயையிடம் தோற்க வேண்டியும் வரும். மாயையிடம் நீங்கள் தோற்கிறீர்கள். பிறகு வெற்றியும் நீங்கள் தான் அடைய வேண்டி உள்ளது. இந்த 5 விகாரங்களில் சிக்கி விட்டுள்ளீர்கள். இப்பொழுது நான் உங்களை கோவிலில் வீற்றிருப்பதற்குத் தகுதி உடையவர்களாக ஆக்குகிறேன். சத்யுகம் பெரிய கோவில் ஆகும். அதற்கு சிவாலயம் என்று கூறப்படுகிறது. சிவனால் ஸ்தாபிக்கப்பட்டது ஆகும். கலியுகமானது வேசியாலயம் என்று கூறப்படுகிறது. எல்லோரும் விகாரியாக உள்ளார்கள். இப்பொழுது தேகத்தின் தர்மங்களை விடுத்து தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகிறார். குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தையிடம் அன்பு உள்ளது. நீங்கள் வேறு யாரையும் நினைவு செய்வதில்லை. நீங்கள் விநாச காலத்தில் அன்பான புத்தி உடையவர் ஆவீர்கள். ஸ்ரீஸ்ரீ 108 என்று பரமபிதா பரமாத்மாவிற்குத் தான் கூறப்படுகிறது என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். 108 மணி மாலையை உருட்டுகிறார்கள். மேலே இருப்பது சிவபாபா. பிறகு தாய் தந்தை பிரம்மா சரஸ்வதி. பிறகு அவரது குழந்தைகள். அவர்கள் பாரதத்தை தூய்மை ஆக்குகிறார்கள். ருத்ராட்ச மாலை பாடப்பட்டுள்ளது. அதற்கு ருத்ர யக்ஞம் என்றும் கூறப்படுகிறது. எவ்வளவு பெரிய ராஜஸ்வ அஷ்வமேத அவினாஷி ஞான யக்ஞம் ஆகும். எத்தனை வருடங்களாக நடந்து வருகிறது. அநேக தர்மங்கள் ஆகிய எல்லாமே இந்த வேள்வியில் முடிந்து போகப் போகிறது. அப்பொழுதே இந்த வேள்வி முடிவடையும். இது அழிவற்ற பாபாவின் அழியாத வேள்வி ஆகும். எல்லா பொருட்களும் இதில் ஸ்வாஹா ஆகப் போகிறது. விநாசம் எப்பொழுது ஆகும் என்று கேட்கிறார்கள். அட யார் ஸ்தாபனை செய்கிறார்களோ அவர்கள் தான் பிறகு பாலனை செய்ய வேண்டி இருக்கிறது. இது சிவபாபாவின் ரதம் ஆகும். சிவபாபா இதில் ரதி (வீற்றிருப்பவர்) ஆவார். மற்றபடி குதிரை வண்டி ஒன்றும் கிடையாது. அதுவோ உட்கார்ந்து பக்தி மார்க்கத்தின் பொருட்களை அமைத்துள்ளார்கள். நான் இந்த இயற்கையை ஆதாரமாக எடுக்கிறேன் என்று பாபா கூறுகிறார்.

முதலில் ஒருவரையே வணங்கும் பக்தி இருக்கும். பிறகு கலியுக முடிவில் முழுமையாக பலரை வழிபடும் பக்தி ஆகி விடுகிறது என்று தந்தை புரிய வைக்கிறார். பிறகு தந்தை வந்து பாரதத்திற்கு வெண்ணெய் கொடுக்கிறார். நீங்கள் உலகிற்கு அதிபதி ஆவதற்காக படித்துக் கொண்டிருக்கிறீர்கள். தந்தை வந்து வெண்ணெய் ஊட்டுகிறார். இராவண இராஜ்யத்தில் மோர் ஆரம்பமாகி விடுகிறது. இவை அனைத்தும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். புதிய குழந்தைகளோ இந்த விஷயங்களைப் புரிந்து கொள்ள முடியாது. பரமபிதா பரமாத்மாவிற்குத் தான் ஞானக் கடல் என்று கூறப்படுகிறது. நான் இந்த பக்தி மார்க்கத்தினால் யாருக்குமே கிடைப்பதில்லை என்று தந்தை

கூறுகிறார். நான் எப்பொழுது வருகிறேனோ அப்பொழுது தான் வந்து பக்தர்களுக்கு பக்தியின் பலனைக் கொடுக்கிறேன். நான் "லிபரேட்டர்" (விடுவிப்பவர்) ஆகிறேன். துக்கத்திலிருந்து விடுவித்து அனைவரையும் சாந்தி தாமம், சுகதாமம் அழைத்துச் செல்கிறேன். நிச்சய புத்தி உடையவர்கள் வெற்றி அடைவார்கள். சந்தேக புத்தி உடையவர்கள் அழிந்து போவார்கள்.

தந்தை ஒளி ஆவார். அவர் மீது ஒரு சில விட்டில் பூச்சிகள் முற்றிலுமாக சமர்ப்பணம் (ப-) ஆகி விடுகிறார்கள். ஒரு சிலர் வட்டமாகச் சுற்றி வந்து விட்டுச் சென்று விடுகிறார்கள். ஒன்றும் புரிந்து கொள்வது இல்லை. உண்மையில் எல்லையில்லாத தந்தையிடமிருந்து நமக்கு எல்லையில்லாத ஆஸ்தி கிடைக்கிறது. யார் வட்டமிட்டு மட்டும் சென்று விடுகிறார்களோ அவர்களே பிறகு பிரஜையில் தான் வரிசைக்கிரமமாக வருவார்கள். யார் சமர்ப்பணம் ஆகிறார்களோ அவர்கள் புருஷர்த்தப்படி ஆஸ்தி எடுக்கிறார்கள். புருஷார்த்தத்தினால் தான் (முயற்சி) பிராலப்தம் (பிராப்தி) கிடைக்கிறது. ஞானக் கடல் ஒரே ஒரு தந்தை ஆவார். பின்னர் ஞானம் மறைந்து போய் விடுகிறது. நீங்கள் சத்கதியை அடைந்து கொண்டு9விடுகிறீர்கள். சத்யுக திரேதாவில் யாருமே குருமார்கள் ஆகியோர் இருப்பதில்லை. இப்பொழுது எல்லோரும் அந்த தந்தையை நினைவு செய்கிறார்கள். ஏனெனில் அவர் ஞானக் கடல் ஆவார். அனைவருக்கும் சத்கதி செய்து விடுகிறார். பிறகு ஐயோ! ஐயோ! என்ற கதறல் முடிந்து போய் வெற்றி முழக்கம் ஏற்பட்டு விடுகிறது. நீங்கள் படைப்பின் முதல் இடை கடையை அறிந்துள்ளீர்கள். இப்பொழுது நீங்கள் திரிகாலதரிசி, திரிநேத்ரி ஆகிறீர்கள். உங்களுக்கு படைப்பவர் மற்றும் படைப்பின் முதல் இடை கடை பற்றிய முழு ஞானம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இது ஒன்றும் கட்டுக் கதை அல்ல. கீதை பகவானால் பாடப்பட்டது ஆகும். ஆனால் கிருஷ்ணருடைய பெயரை போட்டு குறையுள்ளதாக ஆக்கி விட்டுள்ளார்கள். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும். நீங்கள் சிவ சக்தி சேனை ஆவீர்கள். வந்தே மாதரம் என்று பாடப்பட்டுள்ளது. (பவித்திரமாக) தூய்மைக்குத் தான் வந்தனை செய்யப்படுகிறது. கன்னிகை தூய்மையாக இருக்கிறார். எனவே அனைவரும் அவருக்கு வந்தனை செய்கிறார்கள். புகுந்த வீடு சென்றார் மற்றும் விகாரி ஆனார் என்றால் எல்லோருக்கும் தலை வணங்கிக் கொண்டே இருப்பார். எல்லாமே தூய்மையை பொருத்தது ஆகும். பாரதம் தூய்மையான இல்லற தர்மமாக இருந்தது. இப்பொழுது அபவித்திர இல்லற தர்மம் ஆகும். துக்கமே துக்கமாக உள்ளது. சத்யுகத்தில் இவ்வாறு இருக்காது. தந்தை குழந்தைகளுக்காக உள்ளங்கையில் சொர்க்கத்தை ஏந்தி வருகிறார். இல்லற விவகாரங்களில் இருக்கையிலும் தந்தையிடமிருந்து ஜீவன் முக்தியின் ஆஸ்தியை எடுத்துக் கொள்ள முடியும். வீடு வாசலை விட வேண்டிய எந்த விஷயமும் கிடையாது. சந்நியாசிகளின் துறவற மார்க்கம் தனி ஆகும். இப்பொழுது "பாபா நாங்கள் தூய்மையாக ஆகி தூய்மையான உலகத்தின் அதிபதியாக அவசியம் ஆவோம்" என்று தந்தையிடம் உறுதி கொடுக்கிறார்கள். பிறகு பூமியே பிளந்தாலும் தர்மத்தை விடக் கூடாது. 5 விகாரங்களின் தானம் கொடுத்தீர்கள் என்றால் மாயையின் கிரகணம் விடுபடும். அப்பொழுது 16 கலை சம்பூர்ணம் ஆவீர்கள். சத்யுகத்தில் 16 கலை சம்பூர்ணம், சம்பூர்ண நிர்விகாரியாக .. இருப்பார்கள். இப்பொழுது ஸ்ரீமத் படி நடந்து மீண்டும் அவ்வாறு ஆக வேண்டும்.

பகவான் இருப்பதே ஏழைப் பங்காளனாக! செல்வந்தர்கள் இந்த ஞானத்தை எடுக்க முடியாது. ஏனெனில் அவர்களோ எங்களிடம் செல்வம் ஆகியவை நிறைய உள்ளது. நாங்களோ சொர்க்கத்தில் அமர்ந்துள்ளோம் (வாழ்கிறோம்) என்று நினைக்கிறார்கள். எனவே அபலைகள் அகலிகைகள் தான் ஞானம் எடுக்கிறார்கள். பாரதமோ ஏழையாக உள்ளது. அதில் கூட யார் சாதாரணமாக ஏழைகளாக இருக்கிறார்களோ அவர்களைத் தான் தந்தை தன்னுடையவராக ஆக்குகிறார். அவர்களுடைய அதிர்ஷ்டத்தில் தான் உள்ளது. குசேலருடைய உதாரணம் பாடப்பட்டுள்ளது அல்லவா? செல்வந்தர்களுக்குப் புரிந்து கொள்வதற்கான நேரம் இல்லை. இராஜேந்திர பிரசாத்திடம் (பாரதத்தின் முதல் ஜனாதிபதி) சகோதரிகள் சென்று கொண்டிருந்தார்கள். எல்லையில்லாத தந்தையை அறிந்து கொண்டீர்கள் என்றால் நீங்கள் வைரம் போல ஆகி விடுவீர்கள் என்று கூறினார்கள். 7 நாள் பாட முறை கற்றுக் கொள்ளுங்கள் என்றார்கள். ஆம் விஷயமோ மிகவும் நன்றாக உள்ளது. பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் கோர்ஸ் எடுக்கிறேன் என்று கூறினார். பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் நான் நோய்வாய்ப் பட்டுள்ளேன் என்றார். பெரிய பெரிய மனிதர்களுக்கு நேரம் இல்லை. முதலில் 7 நாள் கோர்ஸ் முடித்தால் தான் பின் நாராயணி போதை ஏறும் அவ்வாறே சாயம் ஏறி விடுமா என்ன? 7 நாட்களுக்குப் பிறகு தான் இவர் தகுதி உடையவரா இல்லையா என்பது தெரிய வருகிறது. தகுதி உடையவராக இருந்தால் பின் படிப்பதற்காக முயற்சியில் ஈடுபட்டு விடுவார். பட்டியில் பக்குவமான சாயம் ஏறி இருக்கவில்லை என்றால் வெளியில் சென்ற உடனேயே சாயம் நீங்கி விடுகிறது. எனவே முதலில் பக்குவமான சாயம் (உறுதியாக இருக்கும்படி) ஏற்ற வேண்டும். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சிவசக்தி ஆகி உலக நன்மை செய்ய வேண்டும். தூய்மையின் ஆதாரத்தில் சோழி போன்ற மனிதர்களை வைரம் போல ஆக்க வேண்டும்.

2. ஸ்ரீமத் படி விகாரங்களை தானம் கொடுத்து சம்பூர்ண நிர்விகாரி 16 கலை சம்பூர்ணமாக ஆக வேண்டும். ஒளி மீது சமர்ப்பணம் (ப-) ஆகக் கூடிய விட்டில் பூச்சி ஆக வேண்டும்.

வரதானம்: நிலைமைகளை (சைடு சீன்) சாலையோர காட்சிகள் என்று கருதி கடந்து சென்று விடக் கூடிய ஸ்மிருதி சொரூப ஸமர்த் ஆத்மா - நினைவின் வடிவமான சக்திசாலி ஆத்மா ஆவீர்களாக.

ஸ்மிருதி சொரூப ஆத்மா சக்திசாலியாக (ஸமர்த்) இருக்கும் காரணத்தால் நிலைமைகளை விளையாட்டாக கருதுவார்கள். எவ்வளவு தான் பெரிய நிலைமையாக இருந்தாலும் சரி, ஆனால் சக்திசாலி (ஸமர்த்) ஆத்மாவை பொறுத்தவரை இவை அனைத்தும் குறிக்கோளைப் போய் சேர வேண்டிய வழியில் இருக்கும் (சைடு சீன்ஸ்) சாலையோர காட்சிகள் போல. ஜனங்களோ

செலவு செய்து கூட (சைட் சீன்ஸ்) காட்சிகளை பார்ப்பதற்காக செல்கிறார்கள். எனவே ஸ்மிருதி சொரூப ஸமர்த் ஆத்மாவை பொறுத்தவரை நிலைமைகள் என்று கூறினாலும் சரி. சோதனை என்று கூறினாலும் சரி, தடைகள் என்று கூறினாலும் சரி, எல்லாமே (சைட் சீன்) சாலைரோடு காட்சிகள் ஆகும். மேலும் இவை குறிக்கோளை நோக்கி செல்லும் வழியில் (சைடு சீன்) சாலையோர காட்சிகள் - இவற்றை நான் கணக்கற்ற முறை தாண்டி சென்றுள்ளேன். நத்திங் நியூ - எதுவும் புதிதல்ல என்பது நினைவில் இருக்கும்.

சுலோகன்: மற்றவர்களை (கரெக்ˆன்) திருத்துவதற்கு பதிலாக தந்தையிடம் (கனெக்ˆன்) தொடர்பை இணைத்து கொண்டீர்கள் என்றால், வரதானங்களின் உணர்வு ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

மாதேஷ்வரி அவர்களின் மதுர வாக்கியம்.

ஓம் என்ற வார்த்தையை உச்சரிப்பதால் மட்டுமே எந்த லாபமும் கிடையாது.

ஓம் என்று உச்சரிப்பது என்றால், ஓம் என்று ஜபிப்பது. எந்த நேரத்தில் நாம் ஓம் என்ற வார்த்தையை கூறுகிறோமோ - அதன் பொருள் ஓம் என்ற வார்த்தையை உச்சரிக்க வேண்டும் என்பது கிடையது. ஓம் என்று கூறுவதால் மட்டுமே வாழ்க்கையில் எந்த லாபமும் இல்லை. ஆனால் ஓம் என்ற வார்த்தையின் பொருளின் சொரூபத்தில் நிலைத்திருப்பது - அந்த ஓம் என்ற வார்த்தையின் அர்த்தத்தை தெரிந்து கொள்வதால் மனிதனுக்கு அமைதி கிடைத்து விடுகிறது. இப்பொழுது மனிதர்கள் எங்களுக்கு அமைதி கிடைத்து விட வேண்டும் என்று அவசியம் விரும்புகிறார்கள். அந்த அமைதியை நிலைநாட்டுவதற்காக நிறைய மாநாடுகள் நடத்துகிறார்கள். ஆனால் (ரிஸல்ட்) விளைவு என்னவென்றால் இன்னும் அசாந்தி துக்கத்தின் காரணங்கள் அமைந்து கொண்டே போகிறது. ஏனெனில் முக்கியமான காரணமாவது, மனித ஆத்மாக்கள் எதுவரை 5 விகாரங்களை நீக்கி விடவில்லையோ, அதுவரை உலகத்தில் ஒரு போதும் அமைதி ஏற்படவே முடியாது. எனவே முதலில் ஒவ்வொரு மனிதனும் தனது 5 விகாரங்களை வசப்படுத்த வேண்டும். மேலும் தனது ஆத்மாவின் கயிற்றை பரமாத்மாவுடன் இணைக்க வேண்டும். அப்பொழுது தான் அமைதி நிலை நாட்டப்படும். எனவே மனிதர்கள் தங்களது 5 விகாரங்களை அழித்து விட்டுள்ளார்களா என்று தங்களை தாங்களே கேட்க வேண்டும். அவற்றை வெல்வதற்கான முயற்சி செய்துள்ளோமா என்று தங்களை தாங்களே கேட்க வேண்டும். யாராவது நாங்கள் எங்களது 5 விகாரங்களை எப்படி வசப்படுத்துவது என்று கேட்டால், அவர்களுக்கு இவ்வாறு வழி கூறப்படுகிறது - முதலில் அந்த பூதங்களுக்கு ஞானம் மற்றும் யோகம் என்ற தூபம் போடுங்கள். மேலும் கூட கூடவே பரமபிதா பரமாத்மாவின் மகா வாக்கியமாவது - என்னுடன் புத்தி யோகத்தை ஈடுபடுத்தி என்னுடைய பலத்தை பெற்று கொண்டு சர்வசக்திவான் பிரபுவாகிய என்னை நினைவு செய்வதால் விகாரங்கள் அகன்று கொண்டே இருக்கும்.

இப்பொழுது இதற்கு தேவை சாதனை. அதை சுயம் பரமாத்மாவே வந்து நமக்கு கற்பிக்கிறார்.

நல்லது, ஓம் சாந்தி.

29.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே! ஸ்ரீமத்தை சரியான முறையில் தாரணை செய்து தந்தையின் பெயரை புகழடையச் செய்யும் அளவிற்கு உங்களுடைய புத்தி அல்லது சிந்தனைகளை சுத்தமானதாக தூய்மையானதாக ஆக்குங்கள்.

கேள்வி: குழந்தைகளின் எந்த ஒரு நிலை தந்தையை வெளிப்படுத்தும்?

பதில்: குழந்தைகளின் நிலை நிரந்தரமாக மகிழ்ச்சியான முகத்துடன் ஆடாது அசையாது ஸ்திரமானதாக மற்றும் போதையுடன் கூடியதாக அமையும் பொழுதே தந்தையை வெளிப்படுத்த முடியும். அப்பேர்ப்பட்ட ஒரே இரசனையுடன் கூடிய நிலை கொண்ட புத்திசா- குழந்தைகளே சரியான முறையில் அனைவருக்கும் தந்தையின் அறிமுகத்தை கொடுக்க முடியும்.

பாடல்: இறந்தாலும் உன் மடியில்...........

ஓம் சாந்தி. குழந்தைகள் பாடல் கேட்டீர்கள். உயிருடன் இருந்தே இறப்பதற்காக உனது வாசலுக்கு வந்துள்ளோம் என்று கூறுகிறார்கள். யாருடைய வாசலுக்கு? ஒரு வேளை கீதையின் பகவான் கிருஷ்ணர் என்று கூறி இருந்தால் இந்த எல்லா விஷயங்களும் இருக்க முடியாது என்ற இதே விஷயம் தான் பிறகும் வெளி வருகிறது. கிருஷ்ணர் கூட இங்கு இருக்க முடியாது. அவரோ சத்யுகத்தின் இளவரசர் ஆவார். கீதையை ஒன்றும் கிருஷ்ணர் கூறவில்லை. கீதையோ பரமபிதா தான் கூறினார். எல்லாமே இந்த ஒரே விஷயத்தை பொருத்துள்ளது. பக்தியில் நீங்கள் இவ்வளவு உழைப்பு செய்தபடியே வந்துள்ளீர்கள். அதுவோ அவசியம் இல்லை. இதுவோ ஒரு செகண்டின் விஷயம் ஆகும், இந்த ஒரே ஒரு விஷயத்தை நிரூபிப்பதற்கு மட்டுமே கூட தந்தை எவ்வளவு உழைக்க வேண்டி உள்ளது! எவ்வளவு ஞானம் அளிக்க வேண்டி இருக்கிறது? பகவான் அளித்த பழைமையான ஞானம் தான் உண்மையான ஞானம் ஆகும். முழு விஷயமே கீதையைப் பொருத்துள்ளது. பரமபிதா பரமாத்மா தான் வந்து தேவி தேவதா தர்மத்தின் ஸ்தாபனைக்காக சகஜ இராஜயோகம் மற்றும் ஞானத்தைக் கற்பித்துள்ளார். அது இப்பொழுது பெரும்பாலும் மறைந்து விட்டுள்ளது. மனிதர்களோ கிருஷ்ணர் எப்பொழுதாவது வந்து கீதையை கூறுவார் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஞானக்கடலான பரலோக பரமபிதா பரமாத்மா வந்து கீதையை கூறினார் என்பதை நீங்கள் இப்பொழுது காலச் சக்கரத்தின் படம் மூலமாக நல்ல முறையில் நிரூபிக்க வேண்டும். கிருஷ்ணரின் மகிமை தனியானது. பரமபிதா பரமாத்மாவின் மகிமை தனியானது. அவர் சத்யுகத்தின் இளவரசர் ஆவார். அவர் சகஜ இராயோகத்தினால் இராஜ்ய பாக்கியத்தை அடைந்துள்ளார். படிக்கும் பொழுது பெயர், ரூபம் வேறானது மற்றும் இராஜ்யம் அடையும் பொழுது பெயர் ரூபம் வேறு என்பதை நிரூபித்துக் கூற வேண்டும். கிருஷ்ணரை ஒருபொழுதும் பதீத பாவனர் என்று கூற மாட்டார்கள். ஒரு தந்தை மட்டுமே பதீத பாவனர் ஆவார். இப்பொழுது மீண்டும் ஸ்ரீகிருஷ்ணரின் ஆத்மா பதீத பாவனர் மூலமாக இராஜயோகம் கற்றுக் கொண்டு வருங்கால பாவன உலகத்தின் இளவரசர் ஆகிக் கொண்டிருக்கிறார். இதை நிரூபித்துக் கூற வேண்டி உள்ளது. முதல் எண்ணில் இருப்பது கீதையே ஆகும். அனைத்து

சாஸ்திரங்களுக்கும் தாயாக இருப்பது ஸ்ரீமத் பகவத் கீதா மாதா. இப்பொழுது மாதாவிற்கு யார் ஜன்மம் கொடுத்தார்? தந்தை தான் மாதாவை சுவீகாரம் செய்கிறார் அல்லவா? கீதையைக் கூறியது யார்? கிறிஸ்து பைபிளை சுவீகாரம் செய்தார் என்று கூறமாட்டார்கள். கிறிஸ்து அளித்த அறிவுரைகளை பைபிள் என்று அமைத்து படிக்கிறார்கள். இப்பொழுது கீதையின் அறிவுரைகளை அளித்தது யார்? அந்த அறிவுரைகளைத் தான் பின்னால் புத்தகமாக ஆக்கி படித்துக் கொண்டே இருக்கிறார்கள்? இது யாருக்கும் தெரியாது. மற்ற எல்லா சாஸ்திரங்கள் பற்றியோ அனைவருக்கும் தெரியும். இந்த சகஜ இராஜயோகத்தின் கல்வியை யார் அளித்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். உலகமோ நாளுக்கு நாள் தமோபிரதானமாக ஆகிக் கொண்டே போகிறது. இவை எல்லாமே தூய்மையான புத்தியில் தான் பதிய முடியும். யார் ஸ்ரீமத்படி நடப்பதில்லையோ அவர்களுக்கு தாரணை ஆக முடியாது. உன்னால் முற்றிலும் புரிய வைக்க முடியாது என்று ஸ்ரீமத் கூறும். தன்னை ஞானி என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். கீதையின் பகவான் பரமபிதா பரமாத்மா ஆவார். அவரே பதீத பாவனர் என்ற முக்கியமான விஷயத்தை முத-ல் நிரூபிக்க வேண்டும். மனிதர்களோ சர்வ வியாபி என்று கூறி விடுகிறார்கள் அல்லது பிரம்ம தத்துவம் என்று கூறி விடுகிறார்கள் அல்லது கடல் என்று கூறி விடுகிறார்கள். அர்த்தம் இல்லாமல் எது தோன்றுகிறதோ அதைக் கூறி விடுகிறார்கள். முழு தவறுமே கீதையி-ருந்து வெளிப்பட்டுள்ளது - ஏனெனில் கீதையின் பகவானை ஸ்ரீகிருஷ்ணர் என்று கூறி விட்டுள்ளார்கள். எனவே புரிய வைப்பதற்காக கீதையை எடுக்க வேண்டி உள்ளது, கீதையின் பகவான் கிருஷ்ணர் அல்ல என்பதை வாரணாசியில் நிரூபித்து கூறுங்கள் என்று வாரணாசியில் இருக்கும் குப்தாஜீ அவர்களுக்கும் கூறி கொண்டிருந்தார். இப்பொழுது மாநாடு நடக்கிறது. அமைதி ஏற்பட்டு விடுவதற்கு என்ன உபாயம் செய்யலாம் என்று எல்லா பக்திமான் மனிதர்களும் கூறுகிறார்கள். இப்பொழுது அமைதியை நிலை நாட்டுவது பதீத மனிதர்களின் கையிலோ கிடையாது. பதீத பாவனரே வாருங்கள் என்று கூறவும் செய்கிறார்கள். பிறகு பதீதர்கள் (தூய்மையற்றவர்கள்) எவ்வாறு அமைதியை நிலைநாட்ட முடியும்? அழைத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் பதீத நிலையி-ருந்து பாவனமாக ஆக்கும் தந்தையை அறியாமலே உள்ளார்கள். பாரதம் பாவனமாக இருந்தது. இ,ப்பொழுது பதீதமாக உள்ளது. இப்பொழுது பதீத பாவனர் யார்? இது யாருடைய புத்தியிலும் வருவதில்லை. இரகுபதி இராகவ... என்று கூறி விடுகிறார்கள். இப்பொழுது அந்த இராமரோ கிடையாது. பொய்யான அழைப்பு விடுவிக்கிறார்கள். ஒன்றுமே அறியாமல் உள்ளார்கள். இப்பொழுது இதை யார் போய்க் கூற வேண்டும்? மிகவும் நல்ல குழந்தைகள் வேண்டும். புரிய வைப்பதற்கான மிகுந்த யுக்தி வேண்டும். கீதை பகவான் தான் இயற்றினார் என்று நிரூபணம் ஆகும் வகையில் பெரிய காலச் சக்கரம் கூட அமைக்கப்பட்டுள்ளது. அவர்களோ யாராக இருந்தால் என்ன? எல்லோருமே பகவான் ஆவார்கள் என்று கூறி விடுகிறார்கள். நீங்கள் அறிவற்றவர்கள் என்று தந்தை கூறுகிறார். நான் வந்து பாவன இராஜ்யத்தை ஸ்தாபனை செய்தேன். அதற்கு பதிலாக ஸ்ரீகிருஷ்ணர் பெயரைப் போட்டு விட்டார்கள். பதீதர்களைத் தான் பாவனமாக ஆக்கி முதல் இளவரசராக ஆக்குகிறேன். பகவான் கூறுகிறார் - நான் கிருஷ்ணரின் ஆத்மாவை தத்து எடுத்து பிரம்மாவாக ஆக்கி அவர் மூலமாக ஞானம் அளிக்கிறேன். அவர் பின்னர் இந்த சகஜ இராஜயோகத்தினால் சத்யுகத்தின் முதல் இளவரசராக ஆகி விடுகிறார். இந்த விளக்கவுரை வேறு

யாருடைய புத்தியிலும் இல்லை. ஸ்ரீமத் பகவத் கீதை அனைத்து சாஸ்திரங்களுக்கும் தாய் தந்தையாக உள்ளது என்ற விஷயத்தில் ஏற்பட்டுள்ள இந்த தவற்றினை நிரூபித்துக் கூற வேண்டும். கீதையின் படைப்புகர்த்தா யார்? எப்படி கிறிஸ்து பைபிளுக்கு ஜன்மம் கொடுத்தார். அது கிறிஸ்துவ தர்மத்தின் சாஸ்திரம் ஆகும். நல்லது. பைபிளின் தந்தை யார்? கிறிஸ்து. அவரை தாய் தந்தை என்று கூற மாட்ô்ர்கள். அங்கு தாய் என்ற விஷயமே கிடையாது. இங்கோ தாய் தந்தை இருக்கிறார்கள். கிறித்துவர்கள் கிருஷ்ணரின் தர்மத்தின் மீது பொறாமைப்பட்டுள்ளார்கள். அவர்களோ கிறிஸ்துவை ஏற்பவர்கள் ஆவார்கள். எப்படி புத்தர் தர்ம ஸ்தாபனை செய்தார். அதனால் பௌத்தியர்களின் சாஸ்திரம் கூட உள்ளது. இப்பொழுது கீதையைக் கூறியது யார்? அதன் மூலம் எந்த தர்மம் ஸ்தாபனை ஆகியது என்பது யாருக்கும் தெரியாது. பதீத பாவன பரமபிதா பரமாத்மா ஞானம் அளித்தார் என்று புரிந்து கொள்ளும் வகையில் அப்பேர்ப்பட்ட காலச் சக்கரத்தை அமைத்துள்ளோம். இராதை கிருஷ்ணரோ சத்யுகத்தில் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கே ஞானம் கொடுத்துக் கொண்டு இருந்திருக்க மாட்டார்கள். ஞானம் அளிப்பவர் இன்னொருவர் வேண்டும். யாரோ ஒருவர் அவர்களை தேர்ச்சி பெறுமாறு செய்திருக்க வேண்டும். இராஜ்யத்தை பிராப்தி செய்விப்பதற்கான ஞானத்தை யார் அளித்தார்? தானாகவே ஒன்றும் யாருடைய அதிர்ஷ்டமும் அமைவதில்லை. பாக்கியத்தை அமைத்துக் கொடுப்பதற்கு ஒன்று தந்தை வேண்டும் அல்லது ஆசிரியர் வேண்டும். குரு கதி அளிப்பவர் என்று கூறுகிறார்கள். ஆனால் கதி, சத்கதி என்பதன் பொருள் கூட புரிந்து கொள்வதில்லை. அவர்களோ பக்தி மார்க்கத்தில் மிகப் பெரிய பெரிய கடைகள் திறந்துவைத்து அமர்ந்துள்ளார்கள். உண்மையான ஞான மார்க்கத்தின் கடை இது ஒன்றே ஒன்று தான், மற்றது அனைத்தும் பக்தி மார்க்கத்தின் கடைகள் ஆகும். இந்த வேத சாஸ்திரங்கள் ஆகிய அனைத்தும் பக்தி மார்க்கத்தின் சாமான்கள் ஆகும் என்று தந்தை கூறுகிறார்.இந்த ஜபம், தவம், வேத சாஸ்திரங்கள் ஆகியவற்றைப் பயிலுவதால் நான் கிடைப்பதில்லை. நானோ குழந்தைகளுக்கு ஞானம் அளித்து பாவனமாக ஆக்குகிறேன். முழு சிருஷ்டிக்கு சத்கதி அளிக்கும் வள்ளல் ஆவேன். கதி வழியாக சென்று பிறகு சத்கதியில் வர வேண்டும். எல்லோருமே சத்கதியில் வரமாட்டார்கள். இந்த நாடகம் அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய கல்பத்தில் உங்களுக்கு என்ன கற்பித்திருந்தாரோ, என்ன படங்களை உருவாக்கி இருந்தார்களோ அவற்றையே இப்பொழுதும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

3 தர்மங்களின் கால்களில் சிருஷ்டி நின்றுள்ளது என்று மனிதர்கள் கூறுகிறார்கள். ஒரு தேவதா தர்மத்தின் கால் உடைந்து விட்டுள்ளது. எனவே ஆடிக் கொண்டு இருக்கிறது. முத-ல் ஒரு தர்மம் இருக்கும். அப்பொழுது அது அத்வைத இராஜ்யம் என்று கூறப்படுகிறது. பிறகு அந்த ஒரு கால் குறைந்து 3 கால்கள் வெளிப்படுகின்றது. அதில் கொஞ்சம் கூட சக்தி இருப்பதில்லை. தங்களுக்குள்ளேயே சண்டை சச்சரவு நடந்து கொண்டிருக்கிறது. தலைவனை அறியாமலே உள்ளார்கள். அநாதைகளாக ஆகி விட்டுள்ளார்கள். புரிய வைப்பதற்கான யுக்தி மிகவும் வேண்டும். கீதையின் பகவான் கிருஷ்ணர் அல்ல. பரமபிதா பரமாத்மா ஆவார் என்ற விஷயத்தை கண்காட்சியில் கூட புரிய வைக்க வேண்டும். அவருடைய ஜன்ம பூமி பாரதம் ஆகும். கிருஷ்ணரோ சாகாரமானவர். அவர் நிராகாரமானவர். அவருடைய மகிமை முற்றிலும்

தனிப்பட்டது. கீதையைக் கூறியது யார் என்பது நிரூபிக்கப்படும் வகையில் அப்பேர்ப்பட்ட யுக்தியுடன் கார்ட்டூன் அமைக்க வேண்டும். குருடர்களுக்கு முன்னால் பெரிய கண்ணாடி வைக்க வேண்டும். இதுவே குருடர்களுக்கு முன்னால் கண்ணாடி ஆகும். அளவுக்கு அதிகமாக எதிலும் போகக் கூடாது இது கடுமையான தவறு ஆகும். பரமபிதா பரமாத்மாவின் மகிமை தனி. அதற்கு பதிலாக கிருஷ்ணருக்கு மகிமை அளித்து விட்டுள்ளார்கள். இலட்சுமி நாராயணரினுடைய படத்திற்குக் கீழே இராதை கிருஷ்ணர் இருக்கிறார்கள். அவர்களே பிறகு இலட்சுமி நாராயணர் ஆகிறார்கள். இலட்சுமி நாராயணர் சத்யுகத்தில். இராமர் சீதை, திரேதாவில். முதல் நம்பர் குழந்தை ஸ்ரீகிருஷ்ணர் ஆவார். அவரை பிறகு துவாபரயுகத்தில் எடுத்துச் சென்று விட்டுள்ளார்கள். இவை எல்லாமே பக்தி மார்க்கத்தில் பொருந்தி உள்ளது. வெளி நாட்டினருக்கு இந்த விஷயங்கள் பற்றி என்ன தெரியும்? நாடகப்படி இந்த ஞானம் யாரிடமுமே கிடையாது. ஞானம் என்றால் பகல். பக்தி என்றால் இரவு என்று கூறவும் செய்கிறார்கள். பிரம்மாவின் பகல். பிரம்மாவின் இரவு. சத்யுகத்தை ஸ்தாபனை செய்பவர் யார்? பிரம்மா எங்கிருந்து வந்தார்? சூட்சும வதனத்தில் எங்கிருந்து வந்தனர்? பரமபிதா பரமாத்மா தான் சூட்சும சிருஷ்டியைப் படைக்கிறார். அங்கு பிரம்மாவைக் காண்பிக்கிறார்கள். ஆனால் அங்கோ பிரஜா பிதா பிரம்மா இருப்பதில்லை. நிச்சயமாக பிரஜாபிதா பிரம்மா வேறு ஆவார். அவர் எங்கிருந்து வந்தார்? இந்த விஷயங்களை யாரும் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளார்கள். கிருஷ்ணருடைய கடைசிப் பிறவியில் அவரை பாமாத்மா தனது இரதமாக ஆக்கியுள்ளார் என்பது யாருடைய புத்தியிலும் இல்லை.

இது மிக பெரிய வகுப்பு ஆகும். இந்த மாணவர் எப்படி என்பதை ஆசிரியரோ புரிந்திருப்பார் அல்லவா? பின் தந்தை புரிந்திருக்க மாட்டாரா என்ன? இது எல்லையில்லாத தந்தையின் வகுப்பு ஆகும். இங்கு இருக்கும் விஷயங்களே தனிப்பட்டது. சாஸ்திரங்களிலோ பிரளயம் ஆகியவற்றைக் காண்பித்து எவ்வளவு குழப்பங்கள் விளைவித்து விட்டுள்ளார்கள். எவ்வளவு அகங்காரம் உள்ளது! இராமாயணம், கீதை ஆகியவற்றை எப்படி அமர்ந்து கூறுகிறார்கள். கிருஷ்ணரோ கீதையைக் கூறவில்லை. அவரோ கீதையின் ஞானத்தைக் கேட்டு இராஜ்ய பதவியை அடைந்துள்ளார். கீதையின் பகவான் இவர், அவருடைய குணங்கள் இவையாகும். கிருஷ்ணரினுடைய குணங்கள் இவையாகும் என்பதை நிரூபித்துப் புரிய வைக்கிறோம். இந்த தவற்றின் காரணமாகத் தான் பாரதம் சோழி போல ஆகியுள்ளது. நீங்கள் மாதா நரகத்தின் வாசல் என்று கூறுகிறீர்கள். ஆனால் பரமாத்மாவோ ஞான கலசத்தை தாய்மார்கள் மீது வைத்துள்ளார் என்பதை தாய்மார்களாகிய நீங்கள் அவர்களுக்கு கூறலாம். தாய்மார்கள் தான் சொர்க்க வாசல் ஆகிறார்கள். நீங்கள் நிந்தை செய்து கொண்டிருக்கிறீர்கள்.... ஆனால் கூறுபவர் மிகவும் புத்திசா-யானவராக இருக்க வேண்டும். பாயிண்ட்ஸ் எல்லாம் குறித்து வைத்து புரிய வைக்க வேண்டும். பக்தி மார்க்கம் உண்மையில் இல்லறத்தின் இருப்பவர்களுக்காக உள்ளது. இது இல்லற மார்க்கத்திற்கான சகஜ இராஜயோகம் ஆகும். அதை நிரூபித்துப் புரிய வைப்பதற்காக நாங்கள் வந்துள்ளோம். குழந்தைகள் அழகாக வெளிப்படுத்த வேண்டும். எப்பொழுதும் மகிழ்ச்சியான முகத்துடனும் ஆடாது ஸ்திரமாக, போதையுடனும் இருக்க வேண்டும். இனி மேல் அவசியம் மகிமை வெளிப்படப் போகிறது. நீங்கள் அனைவரும் பிரம்மா குமார், குமாரிகள் ஆவீர்கள். 21
பிறவிகளுக்கு ஆஸ்தி அளிப்பவரே குமாரி ஆவார். குமாரிகளின் மகிமை

மிகவும் உயர்ந்தது. உங்கள் மம்மா முக்கியமான குமாரி ஆவார். சந்திரனுக்கு முன்னால் நல்ல நட்சத்திரமும் வேண்டும். இவர் ஞான சூரியன் ஆவார். இந்த மறைமுகமான மம்மா (பிரம்மா) தனி ஆவார். இந்த இரகசியத்தை குழந்தைகளாகிய நீங்கள் தான் புரிந்து கொண்டு புரிய வைக்க முடியயும். அந்த மம்மாவின் பெயர் தனி. கோவில் அவருடையது. இந்த மறைமுகமான வயோதிக தாயிற்கு (பிரம்மா) கோவில் இருக்கிறதா என்ன? இந்த தாய் தந்தை இணைந்து இருக்கிறார்கள். உலகம் இதை அறியாமல் உள்ளது. கிருஷ்ணரோ இருக்க முடியாது. அவர் சத்யுகத்தின் இளவரசர் ஆவார். கிருஷ்ணருக்குள் பகவான் வர முடியாது. புரிய வைப்பது மிகவும் சுலபம் ஆகும். கீதையின் பகவானின் மகிமை தனியாகும். அந்த பதீத பாவனர் முழு உலகத்தின் (கைடு) வழி காட்டி,(-பரேட்டர்) விடுவிப்பவர் ஆவார். உண்மையில் பரமாத்மாவின் மகிமை தனியானது என்பதை மனிதர்கள் படங்களால் புரிந்து கொண்டு விடுவார்கள். எல்லோரும் ஒன்றாக ஆக முடியுமா என்ன? நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகு காலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப் தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீக தந்தைக்கு ஆன்மீக குழந்தைகளின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. நமது நிலையை மிகவும் போதையுடன் கூடியதாக ஆடாது அசையாததாக ஆக்க வேண்டும் எப்பொழும் மகிழ்ச்சியான முகத்துடன் இருக்க வேண்டும்.

2. ஞானத்தின் தூய்மையான போதையில் இருந்து தந்தையை வெளிப்படுத்த வேண்டும். கீதையின் பகவானை நிரூபித்து தந்தையின் உண்மையான அறிமுகத்தைக் கொடுக்க வேண்டும்.

வரதானம்: நினைவு சொரூபம் ஆகி, மறதியில் உள்ளவர்களுக்கு

நினைவைக் கொடுக்கக் கூடிய உண்மையான சேவாதாரி ஆகுக.

தனது நினைவு சொரூபத்தின் மூலம் மற்றவர்களை நினைவு சொரூபம் ஆக்குவது தான் உண்மையான சேவை ஆகும். உங்கள் தோற்றம் மூலம் மற்றவர்களுக்கு நினைவைக் கொடுக்க வேண்டும் -- நான் ஆத்மா, நெற்றியில் பார்ப்பதே ஜொலிக்கின்ற ஆத்மா அல்லது மணியைத் தான். எப்படி பாம்பின் மணியைப் பார்த்து, பாம்பின் பக்கம் யாருடைய கவனமும் செல்வதில்லையோ, அது போல் அவிநாசி, ஜொலிக்கின்ற மணியைப் பார்த்து தேக உணர்வை மறந்து விட வேண்டும். கவனம் தானாகவே ஆத்மாவின் பக்கம் செல்ல வேண்டும். மறதியில் இருப்பவர்களுக்கு நினைவு வந்து விட வேண்டும். அப்போது உண்மையான சேவாதாரி எனச் சொல்வார்கள்.

சுலோகன்: அவகுணத்தை தாரணை செய்யக்கூடிய புத்தியை அழித்து விட்டு,

சதோப்ரதான, தெய்வீக புத்தியை தாரணை செய்யுங்கள்.

30.11.2023 காலைமுரளி ஓம் சாந்தி பாப்தாதா மதுபன்

இனிமையான குழந்தைகளே, நீங்கள் ஆன்மீக வழிகாட்டி ஆகி யாத்திரை செய்ய வேண்டும் மற்றும் செய்விக்க வேண்டும், நினைவு தான் உங்களுடைய யாத்திரை ஆகும். நினைவு செய்து கொண்டே இருந்தால் குஷியின் அளவு அதிகரிக்கும்.

கேள்வி: நிராகார உலகத்துக்கு சென்றதுமே எந்த சமஸ்காரம் முடிந்து போய் விடுகிறது, எந்த சமஸ்காரம் அப்படியே இருந்து விடுகிறது?

பதில்: அங்கே ஞானத்தின் சமஸ்காரம் முடிந்து போய் விடுகிறது, பிராலப்தத்தின் (பலன்) சமஸ்காரம் அப்படியே இருந்து விடுகிறது. அந்த சமஸ்காரங்களின் ஆதாரத்தில் தான் குழந்தைகளாகிய நீங்கள் சத்யுகத்தில் பலனை அனுபவிக்கிறீர்கள், அங்கே பிறகு படிப்பு அல்லது முயற்சிக்கான சமஸ்காரம் இருக்காது. பலன் கிடைத்ததும் ஞானம் முடிந்து போய்விடுகிறது.

பாடல்: இரவுப் பிரயாணிகளே களைப்படையாதீர்கள்.............

ஓம் சாந்தி. இங்கே முன்னால் சிவபகவானுடைய மகாவாக்கியம் ஆகும். கீதையில் ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய மகாவாக்கியம் என்று காட்டுகிறார்கள். ஆனால் கிருஷ்ணர் அந்த பெயர், உருவத்தில் முன்னால் இருக்க முடியாது. இவரோ முன்னால் இருந்து சொல்கிறார், நிராகார பகவானுடைய மகாவாக்கியம். கிருஷ்ணருடைய வாக்கியம் என்றால், அது சரீரத்திலிருந்து (சாகார் நிலையி-ருந்து) சொல்வதாகி விடுகிறது. வேத சாஸ்திரங்கள் போன்றவை சொல்பவர்கள் கூட பகவானுடைய மகாவாக்கியம் என்று சொல்ல மாட்டார்கள். ஏனெனில் அந்த சாது, சன்னியாசி, மகாத்மா போன்ற அனைவரும் சரீரத்தில் இருக்கிறார்கள். மேலும் பாபா - ஏ, ஆன்மீகப் பிரயாணியே! என்று சொல்கிறார். ஆன்மீகத் தந்தை கண்டிப்பாக ஆத்மாக்களுக்குத் தான் சொல்வார் - குழந்தைகளே களைப்படையாதீர்கள்! யாத்திரையில் நிறைய பேர் களைப்படையும் போது திரும்பி வந்து விடுகிறார்கள். அது உலகீய யாத்திரை ஆகும். அநேக கோயில்களுக்கு உலகீய தீர்த்த யாத்திரை செல்கின்றனர். சிலர் சிவனுடைய கோயில்களுக்குச் செல்கின்றனர், அங்கே அனைத்தும் பக்தி மார்க்கத்தின் உலகிய சித்திரங்களை வைத்திருக் கின்றனர். இவரோ சுப்ரீம் ஆத்மா பரமபிதா பரமாத்மா ஆத்மாக்களுக்குச் சொல்கிறார், ஏ, குழந்தைகளே! இப்போது என் ஒருவனோடு புத்தியோகத்தைச் செலுத்துங்கள், மேலும் ஞானமும் தருகின்றார். தீர்த்தங்களுக்கு செல்லும் போது அங்கேயும் பிராமணர்கள் அமர்ந்திருக்கின்றனர், கதைகள், கீர்த்தனைகள் பாடுகின்றனர். உங்களுடையதோ ஒரே ஒரு சத்திய நாராயணனின் கதை ஆகும், நரனிலிருந்து நாராயணன் ஆவதற்கான கதை ஆகும். உங்களுக்குத் தெரியும், முதலில் இனிமையான வீட்டுக்கு (ஸ்வீட் ஹோம்) செல்வோம், பிறகு விஷ்ணுபுரிக்கு வருவோம். இந்த நேரம் நீங்கள் பிரம்ம புரியில் இருக்கிறீர்கள், இதை பிறந்த வீடு என்று சொல்லப்படுகிறது. உங்களிடம் ஆபரணங்கள் போன்ற எதுவும் இல்லை, ஏனெனில் நீங்கள் பிறந்த வீட்டில் இருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும், மாமியார் வீட்டில் (சத்யுகத்தில்) நமக்கு அளவற்ற சுகம் கிடைக்கும். கலியுகத்தின் மாமியார் வீட்டில் அளவற்ற துக்கமாக இருக்கிறது. நீங்கள் அக்கரைக்கு அதாவது, சுகதாமத்துக்குச் செல்ல வேண்டும். இங்கே இருந்து மாற

வேண்டும். பாபா அனைவரையும் கண்ணுக்குள் அமர்த்தி அழைத்துச் செல்கிறார். கிருஷ்ணருடைய தந்தை அவரைக் கூடையில் வைத்து அக்கரைக்கு அழைத்துச் சென்றதாகக் காட்டுகிறார்கள் அல்லவா! ஆக இந்த எல்லைக்கப்பாற்பட்ட தந்தை குழந்தைகளாகிய உங்களை அக்கரைக்கு மாமியார் வீட்டுக்கு கொண்டு செல்கிறார். முதலில் தன்னுடைய நிராகார வீட்டுக்குக் கொண்டு செல்வார், பிறகு மாமியார் வீட்டுக்கு அனுப்பி வைப்பார். அங்கே இந்த அனைத்து மாமியார் வீடு மற்றும் பிறந்த வீட்டின் விசயங்கள் மறந்து விடும். அதுவோ நிராகார பிறந்த வீடு, அங்கே இந்த ஞானம் மறந்து போய்விடுகிறது, ஞானத்தின் சமஸ்காரம் வெளியேறி விடுகிறது. பிராலப்தத்தின் (பலன்) சமஸ்காரம் அப்படியே இருந்து விடுகிறது. பிறகு குழந்தைகளாகிய உங்களுக்கு பிராலப்தம் தான் நினைவில் இருக்கிறது. அதன் படி சுகத்தில் போய் பிறப்பு எடுப்பீர்கள். சுகதாமம் செல்ல வேண்டும். பலன் கிடைத்ததும் ஞானம் முடிந்து போய்விடுகிறது. உங்களுக்குத் தெரியும், இதன் பலனாக நமக்கு மீண்டும் அதே நடிப்பு கிடைக்கும். உங்களுடைய சமஸ்காரமே பிராலப்தத்தினுடையதாக ஆகிவிடும். இப்போது முயற்சியின் சமஸ்காரம் ஆகும். முயற்சி மற்றும் பிராலப்தம் இரண்டினுடைய சமஸ்காரமும் அங்கே இருக்கும் என்பது கிடையாது. அங்கே இந்த ஞானம் இருப்பதில்லை. ஆக இது உங்களுடைய ஆன்மீக யாத்திரை ஆகும், பாபா உங்களது தலைமை வழிகாட்டி ஆவார். நீங்களும் ஆன்மீக வழிகாட்டி ஆகிவிடுகிறீர்கள், அனைவரையும் கூடவே அழைத்துச் செல்கிறீர்கள். அவர்கள் உலகிய வழிகாட்டிகள், நீங்களோ ஆன்மீக வழிகாட்டிகள் ஆவீர்கள். அவர்கள் கூட்டம் கூட்டமாக செல்கின்றனர். குறிப்பாக அமர்நாத்துக்கு மிகவும் கொண்டாட்டத்துடன் செல்கின்றனர். பாபா பார்த்திருக்கிறார், நிறைய சாது சன்னியாசிகள் மேளதாளங்களை கொண்டு செல்கின்றனர். குளிர் காலமாக இருப்பதால் டாக்டரையும் கூடவே அழைத்துச் செல்கிறார்கள். நிறைய பேர் நோய்வாய்படுகின்றனர். உங்களுடைய யாத்தியோரையோ மிக சகஜமானதாகும். பாபா சொல்கிறார், நினைவில் இருப்பது தான் உங்களுடைய யாத்திரை ஆகும். நினைவு தான் முக்கியம். குழந்தைகள் நினைவு செய்து கொண்டே இருந்தால் குஷியின் அளவு அதிகரித்துக் கொண்டே இருக்கும். கூடவே மற்றவர்களையும் யாத்திரையில் கூட்டிச் செல்ல வேண்டும். இந்த யாத்திரை ஒரே ஒரு முறை தான் ஏற்படுகிறது. அந்த உலகிய யாத்திரைகளோ பக்தி மார்க்கத்திலிருந்து ஆரம்பமாகிறது. அது கூட பக்தியின் ஆரம்பத்தில் கிடையாது. உடனுக்குடன் கோயில், சித்திரங்கள் உருவாகி விடுகிறது என்பது கிடையாது. அவையனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக பின்னால் உருவாக்கப்பட்டுக் கொண்டே செல்கிறது. முதன்முதலில் சிவனுடைய கோயில் உருவாகும். அது கூட முதலில் வீட்டில் சோமநாத் கோயிலை உருவாக்குகின்றனர், ஆக எங்கேயும் செல்வதற்கான அவசியம் கிடையாது. இந்த கோயில் போன்றவை பின்னால் உருவாகிறது, நேரம் பிடிக்கிறது. போகப்போக புதிய சாஸ்திரங்கள், புதிய சித்திரங்கள், புதிய கோயில்கள் போன்றவை உருவாகிக் கொண்டே போகிறது. இதில் நேரம் எடுக்கிறது, ஏனெனில் படிப்பவர்களும் வேண்டுமல்லவா! மடம் ஆகியவை விருத்தி அடையும்போது, சாஸ்திரங்கள் உருவாக்குவதற்கான சிந்தனை வரும். ஆக இத்தனை தீர்த்தஸ்தலங்கள் உருவானது, கோயில்கள் உருவானது, சித்திரங்கள் உருவானது நேரம் எடுக்கிறது அல்லவா! துவாபர யுகத்திலிருந்து பக்தி ஆரம்பமானதாக சொல்லப்படுகிறது என்றாலும் நேரம் எடுக்கிறதல்லவா! பிறகு கலைகள் குறைந்து கொண்டே போகும். முதலில் அவிபச்சாரி பக்தி, பிறகு

விபச்சாரி பக்தி (கலப்பட) ஆகிவிடுகிறது. இந்த அனைத்து விசயங்களும் நல்ல முறையில் சித்திரங்கள் மூலம் நிரூபித்துச் சொல்லப்படுகிறது. - இப்படி இப்படியாக சித்திரங்களை உருவாக்கி, இதைப் புரிய வைக்கலாம் என்று புரிய வைப்பவர்களின் புத்தியில் இதே ஓடிக்கொண்டிருக்கும். அனைவரின் புத்தியிலும் இது ஓடாது. வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள் அல்லவா! சிலருடைய புத்தியில் முற்றிலும் ஓடுவதில்லை, அவர் பிறகு பதவியும் அப்படித் தான் அடைவார். இவர் என்னவாக ஆவார், எவ்வளவு முன்னேறுவார் என்று தெரிந்துவிடுகிறது. நீங்கள் புரிந்துகொண்டே போவீர்கள். எப்போது சண்டை போன்றவை வருமோ அப்போது நடைமுறையில் பார்ப்பார்கள். பிறகு மிகவும் பச்சாதாபப்படுவார்கள். அந்த நேரம் படிக்க முடியாது. சண்டை நடக்கும் நேரத்தில் அய்யோ அய்யோ என்ற கூக்குரல் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும், கேட்கவே முடியாது. என்ன ஆகும் என்றே தெரியாது. பிரிவினை (பாகிஸ்தான்) ஏற்பட்ட போது என்ன நடந்தது என்று பார்த்தீர்கள் அல்லவா! இந்த வினாச நேரத்தில் நிறைய நடக்க இருக்கிறது. ஆம் மற்றபடி சாட்சாத்காரம் ஆகியன நிறைய ஏற்படும், அதிலிருந்து இவர் எவ்வளவு படித்திருக்கிறார் என்று தெரிந்துவிடும். நிறைய பச்சாதாபப்படவும் செய்வார்கள், சாட்சாத்காரமும் ஏற்படும் - பாருங்கள் நீங்கள் படிப்பை விட்டுவிட்டீர்கள், அதனால் இந்த நிலைமை ஆகிவிட்டது. தர்மராஜர் சாட்சாத்காரம் காட்டாமல் எப்படி தண்டனை கொடுப்பார்? அனைத்தையும் சாட்சாத்காரம் காண்பிப்பார். பிறகு அந்த நேரம் ஒன்றும் செய்ய முடியாது. ஆ! என் அதிர்ஷ்டமே என்று சொல்வார்கள். முயற்சிக்கான காலமோ கடந்து விட்டது. இப்போதே ஏன் முயற்சி செய்யக்கூடாது என்று பாபா சொல்கிறார். சேவை மூலமாகவே பாபாவின் மனதில் அமர முடியும். பாபா சொல்வார், இந்தக் குழந்தை நன்றாக சேவை செய்கிறது. இராணுவத்தில் யாரேனும் இறந்தால், அவருடைய நண்பர்கள் உறவினர்களுக்கும் கூட வெகுமதி கொடுக்கிறார்கள். இங்கே உங்களுக்கு வெகுமதி கொடுப்பவர் எல்லைக்கப்பாற்பட்ட பாபா ஆவார். பாபாவிடமிருந்து எதிர்காலத்தின் 21 பிறவிகளுக்கு வெகுமதி கிடைக்கிறது. ஒவ்வொருவரும் தன்னுடைய மனதில் கைவைத்து கேட்க வேண்டும், நான் எந்தளவிற்கு படிக்கின்றேன்? தாரணை ஏற்படவில்லை என்றால் அதிர்ஷ்டத்தில் இல்லை. அப்படிப்பட்ட கர்மம் செய்திருக்கிறார்கள், என்று சொல்வார்கள். மிக மோசமான கர்மம் செய்பவர்கள் ஒன்றும் அடைய முடியாது.

பாபா புரிய வைக்கின்றார் - இனிமையான குழந்தைகளே! நீங்கள் இந்த ஆன்மீக யாத்திரையில் தங்கள் உடன் இருப்பவர்களையும் அழைத்து வர வேண்டும். ஒவ்வொருவருக்கும் இந்த யாத்திரையைப் பற்றி சொல்வது உங்கள் கடமையாகும். இது எங்களுடைய ஆன்மீக யாத்திரை என்று சொல்லுங்கள். அது உலகிய யாத்திரையாகும். இரங்கூனில் ஒரு ஒலி எழுப்பும் குளம் இருக்கிறது, அங்கே குளிப்பதின் மூலம் தேவதையாக ஆகிவிடுவதாக காட்டுகிறார்கள். ஆனால் அப்படி தேவதையாக ஒன்றும் ஆவதில்லை. இது ஞானக் குளியல் செய்வதற்கான விஷயமாகும், இதன் மூலம் நீங்கள் சொர்க்கத்தின் இராணியாக ஆகின்றீர்கள். மேலும் ஞான யோக பலத்தின் மூலம் வைகுண்டத்திற்கு போவது மற்றும் வருவது உங்களுக்கு சாதாரண விஷயமாகும். திரும்பத்திரும்ப காட்சி பார்ப்பதற்கு (டிரான்ஸ்) செல்லாதீர்கள், என்று தடுக்கப்படுகிறது, இது பழக்கமாகிவிடும். ஆக இது ஞானத்தின் மானசரோவர் ஆகும், பரமபிதா பரமாத்மா வந்து இந்த மனித உடலின் மூலமாக ஞானம் சொல்கின்றார்,

ஆகையால் இதை மான சரோவர், என்று அழைக்கப்படுகிறது. மானசரோவர் என்ற வார்த்தை, கடல் என்ற வார்த்தையிலிருந்து வந்திருக்கிறது. ஞானக்கடலில் ஞானக் குளியல் செய்வது மிகவும் நல்லதாகும். சொர்க்கத்தின் இராணி மகாராணி, என்று அழைக்கப்படுகிறார். பாபா சொல்கின்றார், நீங்களும் சொர்க்கத்தின் எஜமானர் ஆகுங்கள். பாபாவிற்கு குழந்தைகளின் மீது அன்பு இருக்கிறது, ஒவ்வொருவரின் மீதும் இரக்கம் வருகிறது, சாதுக்களின் மீது கூட இரக்கம் வருகிறது. சாதுக்களையும் கடைத்தேற்றுகிறார், என்று கீதையில் எழுதப்பட்டிருக்கிறது. ஞானம் யோகத்தின் மூலமாக கடைத்தேற்றப்படுகிறது. குழந்தைகளாகிய உங்களுக்கு புரிய வைப்பதில் சுறுசுறுப்பு வேண்டும். சொல்லுங்கள் - நீங்கள் அனைத்தையும் தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் மோர் போன்றவற்றை தெரிந்திருக்கிறீர்கள், மற்றபடி வெண்ணெய் ஊட்டுபவரைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ளவே இல்லை. பாபா எவ்வளவு நல்ல முறையில் புரிய வைக்கின்றார். ஆனால் யாருடைய புத்தியிலாவது பதிய வேண்டுமல்லவா! பாபாவைத் தெரிந்து கொள்வதின் மூலம் மனிதர்கள் வைரத்தைப்போல் ஆகிவிடுகிறார்கள், தெரிந்து கொள்ளாததின் மூலம் மனிதர்கள் சோழியைப் போல முற்றிலும் தூய்மையற்றவர்களாக இருக்கிறார்கள். பாபாவைத் தெரிந்து கொள்வதின் மூலம் தான் தூய்மையாகின்றார்கள். தூய்மையற்ற உலகத்தில் தூய்மையானவர் யாரும் இருக்க முடியாது. மகாரதி குழந்தைகள் நல்ல விதமாகப் புரிய வைக்க முடியும். எத்தனை பிரம்மாகுமார-குமாரிகள் இருக்கின்றார்கள்! பிரஜாபிதா பிரம்மா என்ற பெயர் கூட பிரபலமாக இருக்கிறது. இவர்கள் பிரஜாபிதா பிரம்மாவினுடைய வாய்வம்சாவழியினர் ஆவர். பிரம்மாவிற்கு தான் 100 கரங்கள், 1000 கரங்கள் காட்டுகின்றார்கள். இத்தனை கரங்கள் இருக்க முடியாது, என்பதும் புரிய வைக்கப்படுகிறது. மற்றபடி பிரம்மாவோ அதிகம் குழந்தைகளுடையவர் ஆவார். பிரம்மா யாருடைய குழந்தை? இவருக்கு தந்தை இருக்கிறார் அல்லவா! பிரம்மா சிவபாபாவினுடைய குழந்தையாவார். இவருக்கு வேறு யார் தந்தையாக இருக்க முடியும்? மனிதர்கள் யாரும் இருக்க முடியாது. பிரம்மா, விஷ்ணு, சங்கர் சூட்சுமவதனவாசிகளாகப் பாடப்படுகின்றனர். அவர்கள் இங்கே வர முடியாது. பிரஜாபிதா பிரம்மா கண்டிப்பாக இங்கே தான் இருப்பார் அல்லவா! சூட்சும வதனத்தில் பிரஜைகளைப் படைக்க மாட்டார். ஆக பரமபிதா பரமாத்மா வந்து இந்த பிரம்மாவின் கமலவாயின் மூலமாக சக்தி சேனையைப் படைக்கின்றார். நாங்கள் பிரம்மா வாய்வம்சாவழிகள், என்ற அறிமுகம் தர வேண்டும். நீங்கள் கூட பிரம்மாவின் குழந்தைகள் அல்லவா! பிரஜாபிதா பிரம்மாவோ அனைவருக்கும் தந்தையாவார். பிறகு அவரிடமிருந்து மற்ற கிளைகள் உருவாகின்றன, பெயர் மாறிக் கொண்டே போகிறது. இப்போது நீங்கள் பிராமணர் ஆவீர்கள். நடைமுறையில் பாருங்கள், பிரஜாபிதா பிரம்மாவிற்கு எவ்வளவு குழந்தைகள் இருக்கின்றனர்! கண்டிப்பாக குழந்தைகளுக்குத் தான் ஆஸ்தி கிடைக்கும். பிரம்மாவிடமோ எந்த ஆஸ்தியும் கிடையாது, ஆஸ்தியோ சிவபாபாவினுடையதாகும். பிரம்மாவுக்கு சிவனிடமிருந்து செல்வம் கிடைக்கிறது. எல்லைக்கு அப்பாற்பட்ட தந்தையிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கிறது. பிரம்மாவின் மூலம் சிவபாபா அமர்ந்து படிப்பிக்கின்றார். நமக்கு தாத்தாவின் ஆஸ்தி கிடைக்கிறது. பாபா நிறைய புரிய வைக்கின்றார், ஆனால் யோகம் இல்லை. சட்டப்படி நடக்க வில்லை என்றால் பாபாவும் என்ன செய்வார்? இவருடைய அதிர்ஷ்டம் அப்படி என்று பாபா சொல்வார். இந்த நிலையில் உங்களுடைய பதவி என்னவாக இருக்கும்? என்று பாபாவிடம்

கேட்டால் பாபாவால் சொல்ல முடியும். மனம் கூட சாட்சியம் சொல்கிறது, நான் எவ்வளவு சேவை செய்கின்றேன்?, எந்தளவிற்கு ஸ்ரீமத்படி நடக்கின்றேன்? ஸ்ரீமத் மன்மனாபவ, என்று சொல்கிறது. அனைவருக்கும் பாபா மற்றும் ஆஸ்தியினுடைய அறிமுகத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றார்கள், தண்டோரா அடித்துக் கொண்டே இருக்கிறார்கள். பாபா சைகை காட்டிக் கொண்டே இருக்கின்றார், நீங்கள் அரசாங்கத்திற்கும் புரிய வைக்க வேண்டும். உண்மையில் பாரதத்தின் சக்தி போய்விட்டது, என்று அவர்களும் கூட புரிந்து கொள்ளட்டும். பரமபிதா பரமாத்மா சர்வசக்திவானோடு யோகம் இல்லை. இவரோடு நீங்கள் யோகம் ஈடுபடுத்துவதின் மூலம் நீங்கள் ஒரேயடியாக உலகத்தின் எஜமானர் ஆகிவிடுகின்றீர்கள், மாயையின் மீது கூட நீங்கள் வெற்றி அடைகின்றீர்கள். குடும்ப விவகாரத்தில் இருந்து கொண்டே நீங்கள் மாயையின் மீது வெற்றி அடைய வேண்டும். நமக்கு உதவியாளராக பாபா இருக்கின்றார். எவ்வளவு புரிய வைக்கப்படுகிறது, தாரணை செய்ய வேண்டும். செல்வத்தை தானம் செய்தால் செல்வம் குறையாது, என்று பாபா புரிய வைத்திருக் கின்றார். சேவை செய்தீர்கள் என்றால் பாபாவின் மனதில் அமர முடியும். இல்லையென்றால் மனதில் அமருவது இயலாததாகி விடும். இதனுடைய அர்த்தம் பாபா அன்பு செய்வதில்லை என்பது கிடையாது. பாபா சேவை செய்பவர்கள் மீது அன்பு செலுத்துவார். உழைக்க வேண்டும். அனைவரையும் யாத்திரைக்குத் தகுதியானவர்களா உருவாக்குகின்றார். மன்மனாபவ. இது ஆன்மீக யாத்திரையாகும், நீங்கள் என்னை நினைவு செய்தீர்களானால், என்னிடம் வந்து சேர்ந்து விடுவீர்கள். சிவபுரிக்கு வந்து பிறகு விஷ்ணுபுரிக்கு சென்று விடுவீர்கள். இந்த விஷயங்களை குழந்தைகளாகிய நீங்கள் மட்டும் தான் தெரிந்திருக்கிறீர்கள். வேறு யாரும் மன்மனாபவ என்பதின் அர்த்தத்தை புரிந்து கொள்வதில்லை, ஆனால் நிறைய பேர் படிக்கிறார்கள். பாபா மகாமந்திரம் கொடுக்கின்றார், என்னை நினைவு செய்வதன் மூலம் நீங்கள் விகர்மாஜீத் (பாவகர்மங்களை வென்றவர்) ஆகிவிடுவீர்கள். நல்லது.

"இனிமையிலும் இனிமையான காணாமல் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப் தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்"

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) ஞான ஸ்நானம் செய்ய வேண்டும். அன்போடு சேவை செய்து பாபாவின் இதயசிம்மாசத்தில் அமர வேண்டும். முயற்சிக்கான நேரத்தில் சோம்பேறித்தனமாக ஆகக் கூடாது.

(2) பாபாவின் கண்ணிமைக்குள் அமர்ந்து கலியுக துக்கதாமத்திலிருந்து சுகதாமத்திற்குச் செல்ல வேண்டும். ஆகையால் தன்னுடைய அனைத்தையும் மாற்றம் (டிரான்ஸ்ஃபர்) செய்து விட வேண்டும்.

வரதானம்: வாழ்க்கையில் திவ்ய குணங்கள் என்ற பூக்கள் நிறைந்த பூந்தோட்டத்தின் மூலம் நறுமணமங்களின் அனுபவம் செய்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக (ஊஸ்ங்ழ்ட்ஹல்ல்ஹ்) ஆகுங்கள்.

சதா மகிழ்ச்சியாக இருப்பது எனில், அனைத்திலும் நிறைந்து, சம்பன்னமாக இருப்பதாகும். முதலில் முட்கள் நிறைந்த காட்டில் வாழ்ந்தீர்கள். ஆனால், இப்பொழுதோ பூக்கள் நிறைந்த மகிழ்ச்சி நிறைந்த இடத்திற்கு வந்துவிட்டீகள். வாழ்வில் சதா திவ்யகுணங்கள் என்ற மலர்களின் நறுமணம் வரத் தொடங்கி விட்டது . எனவே , யார் உங்களுடைய தொடர்பில் வந்தாலும், அவர்களுக்கு திவ்ய குணங்கள் என்ற மலர்களின் நறுமணம் கிடைத்துக் கொண்டே இருக்கும். உங்களுடைய மகிழ்ச்சியான நிலையைப் பார்த்து அவர்களும் மகிழ்ச்சி யடைந்து, சக்தியின் அனுபவமும் செய்வார்கள். உங்களுடை மகிழ்ச்சியானது பிறரையும் மகிழ்ச்சிப் படுத்தி, சக்தி சாலிகளாகவும் மாற்றும் . எனவே தான் நாங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம் என்று கூறுகின்றீர்கள்.

சுலோகன்: மாயாவின் நீர்குமிழிகளைக் கண்டு பயப்படுவதற்குப் பதிலாக அதனுடன் விளையாடுபவர்களே மாஸ்டர் சர்வசக்திவான் ஆவார்கள்.